
# 1997 அவ்யக்த முரளி



பொருளடக்கம் - 8

**18.01.1997** தனது முகத்தின் மூலம் பாபாவின் சரித்திரத்தை வெளிப்படுத்தங்கள், அப்பொழுது பிரத்யக்ஷத்தாவின் முரசு ஒலிக்கும்!

**23.02.1997** துணைவனை துணையாக வைத்து சாட்சி மற்றும் குஷி நிறைந்த நிலையின் ஆசனதாரி ஆகுங்கள்!

**06.03.1997** சிவஜெயந்தியின் பரிசு -கஷ்டப்பட்டு உழைப்பதை விட்டு விட்டு அன்பின் ஊஞ்சலில் ஆடுங்கள்!

**03.04.1997** பழைய சம்ஸ்காரங்களை அழித்து தன்னுடைய உண்மையான சம்ஸ்காரத்தை தாரணை செய்யக்கூடிய எவரெடி (எப்பொழுதும் தயாராக இருப்பவர்) ஆகுங்கள்!

**13.11.1997** சங்கமயுகத்தின் பிராப்திகளின் பலனை அனுபவம் செய்யுங்கள், மாஸ்டர் வள்ளல், மகா சகயோகி ஆகுங்கள்!

**28.11.1997** எல்லைக்கப்பாற்பட்ட சேவையின் சாதனம்-ஆன்மீக பெர்சனாலிட்டி (தனித்தன்மை) மூலமாக பார்வையினால் நன்மை செய்வது!

**14.12.1997** வீணானவை மற்றும் எதிர்மறையைத் தவிர்த்து **(avoid)** விருது **(award)** பெறுவதற்கு உரியவர் ஆகுங்கள்!

**31.12.1997** இந்த வருடத்தை முக்தி வருடமாக கொண்டாடுங்கள், பயனுள்ளதாக ஆக்குங்கள், வெற்றி அடையுங்கள்!

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂

# 18.01.1997 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# தனது முகத்தின் மூலம் பாபாவின் சரித்திரத்தை வெளிப்படுத்தங்கள், அப்பொழுது பிரத்யக்ஷத்தாவின் முரசு ஒலிக்கும்!

இன்று பாப்தாதா இரண்டு விதமான விசாலமான சபைகளை பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒன்று சாகார உலகத்தில் நீங்கள் அனைவரும் அருகாமையில் இருக்கிறீர்கள், மற்றொன்று அவ்யக்த ரூபத்தில் பரந்த விரிந்த சபையை பார்த்துக் கொண்டிருக்கிறார். நாலா பக்கத்திலுமுள்ள பல குழந்தைகள் இந்த சமயத்தில் அவ்யக்த ரூபத்தில் பாபாவை அருகாமையில் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள், கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். இரண்டு சபைகளை சேர்ந்தவர்களுமே ஒருவர் மற்றொருவரை நேசிக்கின்றனர். இன்று விசேஷமாக அனைவரின் மனதிலும் பிரம்மாபாபாவின் நினைவு தோன்றிக் (எமர்ஜ்) கொண்டிருந்தது, ஏனெனில் பிரம்மாபாபாவிற்கு இந்த (உலக) நாடகத்தில் சிறந்த நடிப்பு இருக்கிறது. அனைவருக்கும் பிரம்மாபாபாவின் மீது இதய பூர்வமான அன்பு இருக்கிறது. ஏனெனில் பிரம்மாபாபாவிற்கும் கூட ஒவ்வொரு குழந்தைகள் மீதும் மிகவும் அன்பு நிறைந்திருக்கிறது. குழந்தைகளாகிய நீங்கள் சாகார உலகத்தில் பிரம்மாபாபாவின் குணம் மற்றும் செயலை நினைவு செய்வதைப் போல பிரம்மாபாபாவும் கூட குழந்தைகளாகிய உங்களின் விசேஷத் தன்மைகளை, சேவையினுடைய குணங்களை பாடிக் கொண்டிருக்கிறார். எனவே பிரம்மாபாபாவின் அவ்யக்த குரல் உங்கள் அனைவரையும் வந்தடைகிறதா? நீங்கள் அனைவரும் விசேஷமாக அமிர்தவேளையிலிருந்தே இனிமையிலும் இனிமையான விஷயங்களைப் பேசினீர்கள் மற்றும் இனிமையிலும் இனிமையான குறைகளையும் கூட பேசிக் கொண்டிருந்தார்கள், அதை பிரம்மாபாபா

கேட்டு புன்முறுவல் செய்து கொண்டிருக்கிறார் மேலும் என்ன குணத்தை பாடிக் கொண்டிருந்தார்? ஆஹா என்னுடைய செல்லங்களே, அன்பானவர்களே தந்தையை வெளிப்படுத்தக்கூடிய ஆஹா எனது குழந்தைகளே! பிரம்மாபாபா இப்பொழுது குழந்தைகளிடம் என்ன சுப ஆசைகளை வைக்கிறார், அது தெரிந்திருக்கிறீர்களா?

எனது ஒவ்வொரு குழந்தைகளும் தனது முகத்தின் மூலம் பாபாவின் அன்பை (சரித்திரத்தை) வெளிப்படுத்த வேண்டும் என்பதைத் தான் பாபா விரும்புகிறார். முகம் வெவ்வேறாக இருந்தாலும் அனைவருடைய முகத்தின் மூலம் பாபாவின் அன்பை வெளிப்படுத்துங்கள். யாரை பார்க்கிறீர்களோ, யாரெல்லாம் தொடர்பில் வருகிறார்களோ -அவர்கள் உங்களைப் பார்த்தாலும் மறந்து விடுவார்கள் ஆனால் உங்களிடத்தில் பாபா தென்படும் பொழுது தான் நேரம் கூட நிறைவடையும். அனைவருடைய மனதிலிருந்தும் நம்முடைய பாபா வந்துவிட்டார், என்னுடைய தந்தை வந்துவிட்டார் என்ற சப்தம் ஒலிக்கும். பிரம்மா குமாரிகளின் தந்தை அல்ல, என்னுடைய தந்தை. அனைவருடைய மனதிலிருந்தும் என்னுடைய தந்தை வந்துவிட்டார் என்ற குரல் எழுகிறதோ, அப்பொழுது தான் நாலா பக்கமும் முரசு (டிரம்) ஒலிக்கும். என்னவெல்லாம் விஞ்ஞானத்தின் சாதனங்கள் இருக்கிறதோ, அந்த சாதனங்களின் மூலம் இந்த முரசு ஒலித்துக் கொண்டேயிருக்கும் -என்னுடைய தந்தை வந்துவிட்டார். இப்பொழுது என்னவெல்லாம் செய்து கொண்டிருக்கிறீர்களோ, மிகவும் நன்றாக செய்கிறீர்கள் மேலும் நன்றாகவும் செய்து கொண்டிருக்கிறீர்கள் ஆனால் இப்பொழுது அனைவரும் சேர்ந்து முரசு கொட்ட வேண்டும். எங்கெல்லாம் சப்தம் ஓலிக்கிறதோ, அங்கெல்லாம் அதே சப்தத்தைத் தான் கேட்பீர்கள். வர வேண்டியவர் வந்துட விட்டார் -இதற்குத்தான் பாபாவை தெளிவாக வெளிப்படுத்துவது என்று சொல்லபடுகிறது. இப்பொழுது பெயர் பிரபலமாகி விட்டது. பிரம்மா குமாரிகள் பிரம்மா குமார்கள் மிக நல்ல காரியம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்ற பெயர் முதலாவது அடி பிரபலமாகி விட்டது. இயக்கம் மற்றும் சேவை, ஞானத்திற்கு இப்பொழுது மகிமை செய்கிறார்கள், குஷி ஏற்படுகிறது. இப்படிப்பட்டக் காரியம் வேறு யாரும் செய்ய முடியாது என்பதைக் கூட புரிந்திருக்கிறார்கள். இந்தளவு வந்தடைந்துள்ளோம். இந்த விஷயம் தெளிவாகியிருக்கிறது, நாலா பக்கமும் இந்த விஷயத்திற்கு மகிமை

இருக்கிறது ஆனால் பாப்தாதா வந்துவிட்டார் என்ற விஷயம் இது வரை தெளிவாகவில்லை. இப்பொழுது ஓரளவு திரை விலகியிருக்கிறது ஆனால் தெளிவாக விலகவில்லை. இவர்களின் முதுகெலும்பு யாரோ சக்தி வாய்ந்தவராக இருக்கிறார் என்று தெரிந்திருக்கிறார்கள் ஆனால் அவர்தான் பாப்தாதாவாக இருக்கிறார் மேலும் நாமும் கூட பாபாவிடமிருந்து ஆஸ்தியை பெற வேண்டும்; இந்த மிகப் பெரிய தலைவர் ஊக்கம் உற்சாகத்தில் முன்னேற்றிக் கொண்டிருக்கிறார், அது இப்பொழுது நடைபெற வேண்டும். ஒரு அடி எடுத்து வைத்தால் அவர் சகயோகம் என்ற ஒரு அடி எடுத்து வைக்கிறார். ஒரு அடி எடுத்து வைத்து விட்டார்கள், உதவி செய்ய வேண்டுமென்ற உத்வேகம் வருகிறது. இப்பொழுது இரண்டாவது அடி -நானும் சொர்க்கத்தின் ஆஸ்தியைப் பெற வேண்டுமென்ற உற்சாகம் வருகிறது. இரண்டு அடிகளும் கிடைத்து விட்டால் நாலா பக்கமும் முரசு கொட்டும். எப்படிப்பட்ட முரசு? மேரா பாபா (எனது தந்தை) உங்களுடைய தந்தை அல்ல, என்னுடைய தந்தை. செயலுக்கு மகிமை இருப்பதைப் போன்று செய்பவர் செய்விப்பவர் பாபாவின் மகிமையை கூட ஒன்று சேர்ந்து பாட வேண்டும். அவ்வாறு நடந்தே தீரும். உங்களுக்கும் கூட இந்த காட்சி உங்கள் கண்களுக்கு முன்னால், மனதில், புத்தியில் வருகிறதல்லவா! ஏனெனில் பாபா மற்றும் மூத்த சகோதரன் (பிரம்மாபாபா) வந்திருக்கிறார்கள் -அனைத்து குழந்தைகளுக்கும் ஆஸ்தியை தருவதற்கு. முக்தி வேண்டுமென்றாலும், ஜீவன்முக்தி வேண்டு மென்றாலும் ஆஸ்தி அவசியம் கிடைக்கும். யாருக்கும் கிடைக்காமல் இருக்காது. ஏனெனில் தந்தை எல்லைக்கு அப்பாற்பட்ட உரிமையாளர் ஆவார். எல்லைக்கு அப்பாற்பட்ட தந்தையாக இருக்கிறார். எனவே எல்லைக்கு அப்பாற்பட்ட (அனைவருக்கும்) ஆஸ்தியை அடைந்தேத் தீர வேண்டும். யோக பலத்தின் மூலம் தனது பல பிறவிகளின் பாவங்களை நீக்கவில்லையென்றாலும் கூட பாபா வந்திருக்கிறார் என்பதை தெரிந்திருப்பதால், ஏதோ சிறிதளவு தெரிந்த காரணத்தினால் ஆஸ்திக்கு அதிகாரி ஆகி விடுவீர்கள். எனவே பாபாவிற்கு எல்லைக்கு அப்பாற்பட்ட ஆஸ்தியைத் தர வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது மேலும் நம்பிக்கையுடைவர் ஆகியேத் தீர வேண்டும். அதுபோல நம்முடைய அனைத்து சகோதர-சகோதரிகளுக்கும் எல்லைக்கு அப்பாற்பட்ட ஆஸ்தியின் அதிகாரி ஆகி விடவேண்டும் என்ற சுப பாவனை, சப விருப்பம்

உருவாக வேண்டும் என்று உங்கள் அனைவரின் மனதிலும் எண்ணம் இருக்கிறது. ஆகவே இந்த சுப பாவனை மற்றும் சுப விருப்பம் எப்பொழுது வெளிப்படும்? அந்த நாளை தனது மனதில் தீர்மானியுங்கள். குழுவாக செய்வதற்காக முன்பாக மனதில் தீர்மானியுங்கள், பிறகு குழுவாக செய்தால் விநாசத்தின் நாள் தானாகவே தெளிவாகி விடும். அதனுடைய கவலை தேவையில்லை. இரக்கம் வருகிறதா அல்லது நாம் அதிகாரி ஆகி விட்டோம் என்ற போதையில் இருக்கிறீர்களா? மகிழ்ச்சியில் இருங்கள், இது மிகவும் நல்லது தான் ஆனால் கருணை மனமுடைய பாபாவின் குழந்தைகள் இப்பொழுது எல்லைக்கு அப்பாற்பட்ட கருணை உடையவர் ஆகுங்கள். மற்றவர் மீது கருணை வருகிறது என்றாலே தன்மீது தான் முதலில் வருகிறது, பிறகு எந்தவொரு சின்னஞ்சிறிய விஷயத்தின் மீது நீங்கள் முயற்சி செய்ய வேண்டியிருக்கிறதோ, அது செய்வதற்கான அவசியம் ஏற்படாது. மாஸ்டர் கருணை மனமுடையவர், மாஸ்டர் இரக்க மனமுடையவர், கருணை நிறைந்தவர் ஆகி விடுங்கள். இந்த குணத்தை வெளிப்படுத்துங்கள். எனவே மற்றவர்கள் மீது இரக்கம் கொள்வதின் மூலம் தன்மீது இரக்கம் தானாகவே வந்து விடும்.

பாப்தாதாவிற்கு குழந்தைகளின் எந்தவொரு விஷயம் பிடிப்பதில்லை, பாப்தாதா முதலில் கூட சொல்லியிருந்தார், தெரிந்திருக்கிறீர்களா? பாப்தாதாவிற்கு குழந்தைகள் கடினமாக உழைப்பது, அடிக்கடி யுத்தம் செய்வது, இது நன்றாக இல்லை. பாபாவும் கூட சொல்கிறார் ஆஹா எனது யோகி குழந்தைகளே, யுத்தம் செய்யும் குழந்தைகளே என்று சொல்வதில்லை, யோகி குழந்தைகளே. எனவே யோகி குழந்தைகளின் காரியம் என்ன? யுத்தம் செய்வதா? யுத்தம் செய்வது நன்றாக இல்லை? குழப்பங்கள் வரச் செய்கிறது மேலும் கூட யுத்தமும் செய்கிறீர்கள். இன்று யுத்தம் செய்ய மாட்டேன் என்று உறுதிமொழி செய்கிறீர்கள், சிறிது நேரத்திற்கு பிறகு யோகி ஆவதற்கு பதிலாக யுத்தம் செய்பவர் ஆகி விடுகிறீர்கள். இது ஏன்? குழந்தைகளுக்கு நினைவு செய்வதில் அன்பு குறைவாக இருக்கிறது, யுத்தம் செய்வதில் தான் அன்பு அதிகமாக இருக்கிறது என்று பாப்தாதா புரிந்திருக்கிறார். ஆகையால் இன்றிலிருந்து என்ன செய்வீர்கள்? யுத்தம் செய்பவர் ஆவீர்களா அல்லது நிரந்தர யோகி ஆவீர்களா?

# 1997 அவ்யக்த முரளி

பாப்தாதா பார்த்தார் -எத்தனை ஜனவரி 18-ம் நாள் கடந்து விட்டது மேலும் விசேஷமாக எனது குழந்தைகள் எனக்கு சமமானவர் ஆகி வதனத்தில் வந்து விடுங்கள் என்று குழந்தைகளாகிய உங்களை பாபா வரவழைக்கிறார். வதனம் பிடித்திருக்கிறதா? யுத்தம் செய்வது தான் நன்றாக இருக்கிறதா? யுத்தம் செய்யாதீர்கள். இன்றிலிருந்து யுத்தம் செய்வதை நிறுத்துங்கள். செய்ய முடியுமா? சரி என்று சொல்லுங்கள். அங்கு (அவரவர் இடத்திற்கு) சென்ற பிறகு மாயா வந்து விட்டது யுத்தம் செய்து விரட்டி விடுகிறோம் என்று கடிதம் எழுதாதீர்கள். ஒரு சிலருக்கு தனக்கே மாயா வந்து விடுகிறது மேலும் சிலருக்கு மற்றவர்களுக்கு வரும் மாயாவை பார்த்து தானும் மாயாவின் தாக்கத்தில் வந்து விடுகிறார்கள். 'இது ஏன், இது என்ன,' மற்றவர்களின் மாயாவை தனக்குள் கொண்டு வந்து விடுகிறார்கள். இதை கூட செய்ய வேண்டாம். மாயாவிடமிருந்து மீட்டெடுப்பது பாபாவின் செயல், நீங்கள் சுய முயற்சியில் தீவிரம் ஆகுங்கள், அதனால் உங்களின் வைப்ரேஷன் மூலம், உள்ளுணர்வு மூலம், சுப பாவணை மூலம் மற்றவர்களின் மாயை எளிதாக ஓடி விடும். ஒருவேளை ஏன், என்ன என்பதில் சென்றால், உங்களுடைய மாயாவும் விலகாது, மற்றவர்களின் மாயாவும் போகாது. ஆகையால் எப்படி புது வருடத்தில் பழைய வருடத்திற்கு விடை அளிக்கிறீர்கள். இப்பொழுது 96-ம் இல்லை, 97-ம் ஆண்டு என்று சொல்வீர்கள் அல்லவா. ஒருவேளை யாராவது தவறுதலாக சொல்லி விட்டால் கூட 96-ம் ஆண்டு அல்ல, 97-ம் ஆண்டு என்று நீங்கள் சொல்வீர்கள். அதுபோல இன்றிலிருந்து ஏன், என்ன, அப்படி, இப்படி, இந்த வார்த்தைகளுக்கும் விடை கொடுத்து விடுங்கள், கேள்விக்குறியை போடாதீர்கள். புள்ளி வையுங்கள். இல்லையென்றால் கேள்விக்குறி போட்டால் வீணானதின் கணக்கும் ஆரம்பமாகி விடும். மேலும் எப்பொழுது வீணானவற்றின் கணக்கு ஆரம்பமாகி விட்டால், சக்தியும் (திறனும்) முடிந்து விடும். பிறகு எங்கு சக்தி முடிந்துவடைந்து விடுகிறதோ, அங்கு மாயா வித விதமான ரூபத்தில், பல வித சூழ்நிலைகளின் மூலம் தனது வாடிக்கையாளராக மாற்றிவிடும். பிறகு என்னவாகி விடுவீர்கள்? யோகியா? அல்லது போர் செய்யும் நபரா? யுத்தம் செய்பவர் ஆக வேண்டாம். திடமாக உறுதிமொழி செய்தீர்களா? அல்லது பாப்தாதா சொன்னதால் சரி என்று சொன்னீர்களா? உறுதி செய்துவிட்டீர்களா? எப்பொழுது வெளியே தனது தேசத்திற்கு சென்று விட்டால் உறுதிமொழி செய்தது பலவீனம் ஆகி விடுமா? சக்திகளே

என்ன சொல்கிறீர்கள்? நடக்குமா அல்லது இல்லையா? அனைவரும் ஆமாம் இல்லை என்று சொல்வீர்கள் என்றால், தன்னிடம் சிறிது சந்தேகம் இருக்கிறது. (அனைவரும் சரி என்று சொல்லி விட்டார்கள்). பாருங்கள் டி.வி-யில், புகைப்படம் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். பிறகு டி,வி-யின் கேசட் அனுப்புவோம். ஏனெனில் பாபாவின் ஒவ்வொரு குழந்தையுடனும் -புதியவர்களோ, பழையவர்களோ ஆனால் யார் மனதார என்னுடைய பாபா என்று சொல்கிறார்களோ, சொல்வது மட்டுமல்ல ஆனால் ஏற்றுக் கொண்டு அதன்படி நடைமுறை வாழ்க்கையில் நடந்து கொண்டிருக்கிறார்களோ, அந்த ஒவ்வொருவரின் கூடவே பாபாவின் மனதின் அன்பு இருக்கிறது. சொல்லக்கூடிய அன்பு அல்ல.

பாப்தாதா பல குழந்தைகளின் நிறத்தை (மனதை) பார்த்துக் கொண்டிருக்கிறார் -இன்று சொல்கிறார்கள், ஆஹா என்னுடைய பாபா, ஆஹா என்னுடைய இனிமையான பாபா, என்ன சொல்ல வேண்டும், என்ன சொல்லக் கூடாது. நீங்கள் தான் என்னுடைய உலகமாக இருக்கிறீர்கள், மிகவும் இனிமையிலும் இனிமையான விஷயங்களை பேசுகிறீர்கள் மேலும் ஒருவேளை இரண்டு நான்கு மணி நேரத்திற்கு பிறகு ஏதாவது விஷயம் வந்து விட்டால் பூதமும் வந்து விடுகிறது. பாப்தாதாவிடம் அனைவருடைய பூதமாக இருக்கக் கூடிய புகைப்படம் இருக்கிறது. பாருங்கள், பூத்நாத் (பூதத்தின் தலைவன்) என்ற நினைவுச்சின்னம் கூட இருக்கிறது. எனவே பூதங்களாக இருக்கக் கூடியவர்களை எங்கிருந்து வந்தது, எப்படி வந்தது மேலும் எப்படியெல்லாம் ஒட்டுகிறார்கள் என பார்த்துக் கொண்டிருக்கிறார் -இந்த விளையாட்டையும் கூட பார்க்கிறார். சிலரோ குழப்பத்திலும், மனமுடைந்தும் கூட ஆகி விடுகிறார்கள். பிறகு இவர்களை யார் மூலமாக சஞ்ஜீவினி மூலிகையை கொடுத்து மயக்கம் தெளிய வைக்க வேண்டுமென்ற சுப எண்ணம் பாப்தாதாவிற்கு வருகிறது ஆனால் சஞ்சிவினியை மூலிகையை பார்க்காத அளவிற்கு மயக்கத்தின் போதையில் இருக்கிறார்கள். அவ்வாறு செய்ய வேண்டாம். முழுவதுமாக தன் உணர்வை இழந்து விடாதீர்கள், சிறிதளவு சுய நிலையில் (உணர்வில்) இருங்கள். சிறிதளவு உணர்வு இருந்தாலும் தப்பித்து விடலாம். இன்று விசேஷமாக பிரம்மாபாபா ஒவ்வொரு குழந்தையின் ரிசல்ட்டை பார்த்துக் கொண்டிருந்தார். ஏனெனில்

# 1997 அவ்யக்த முரளி

இன்றைய நாளை நீங்கள் அனைவரும் நினைவு நாளை சக்திசாலியான நாளாக சொல்கிறீர்கள். எனவே எத்தனை சக்திசாலியான நாளை கொண்டாடி முடித்துள்ளீர்கள் என்பதை பிரம்மாபாபா பார்த்துக் கொண்டிருந்தார் ஆனால் சக்திசாலியாக சதா காலத்திற்கும் எது வரை வந்துள்ளது? எனவே என்ன பார்ப்பீர்கள்? இப்பொழுது கூட ரிசல்ட்க்கு தகுந்தபடி பாபாவின் ஞானத்தின் மூலம் ஞானம் நிறைந்தவராகவும் மாயாவை பற்றிய ஞானம் நிறைந்தவராகவும், அப்படிப்பட்ட ஞானம் நிறைந்தவர் எத்தனை பேர் இருக்கிறார்கள்? மாயாவின் ஞானத்தில் கூட ஞானம் நிறைந்தவர் ஆக வேண்டியிருக்கு, யார் மாயாவை தொலைவில் இருக்கும் பொழுதே தெரிந்து கொள்கிறார்களோ, இன்றைக்கு ஏதாவது பேப்பர் (பிரச்சனை) வரப்போகிறது என்று கண்டுபிடித்து விடுவதால், முதலிலேயே சக்திசாலியாகி விடுவார்கள். கடிதத்தில் என்ன எழுதுகிறீர்கள்? மாயா வந்துவிட்டது, நான் விரட்டினேன், பிறகு ஓடிவிட்டது ஆனால் ஏன் வந்தது? அவ்வப்பொழுது வந்து செல் என்று மாயாவிற்கு வாய்ப்பு கொடுக்கிறீர்களா என்ன? ஒருவேளை வாய்ப்பு கொடுக்காமல் வருகிறது என்றால் அதை வர விடுவீர்களா என்ன? அரைக் கல்பம் நமக்கு துணையாக இருந்தது, பாவம் என்று மாயா மீது இரக்கம் கொள்வதில்லையே? இவ்வளவு ஆத்மாக்கள் மீது கருணை கொள்ளுங்கள். அதனால் ரிசல்ட்டில் முதலிடம் மற்றும் இரண்டாம் இடம் என்று எண்ணிக்கையில் 50-50% பார்த்தார். முதல் நம்பர் மட்டும் அல்ல, முதல் மற்றும் இரண்டாமிடம் ஒன்று சேர்த்து 50, ஆனால் குழந்தைகளை பாபாவின் அன்பின் மூலம் வெற்றியாளராக ஆக்கியேத் தீர வேண்டும் என்ற இந்தவொரு மிகுந்த குஷி பாப்தாதாவிற்கு இருக்கிறது. இப்பொழுது அனைவருடைய நெற்றியின் மீது வெற்றியின் திலகம் தெளிவாக தெரிய வேண்டும், அதை மற்றவர்களுக்கும் கூட உண்மையில் இவர்கள் தான் வெற்றி ரத்தினம் என்று அனுபவம் செய்வார்கள்.

இந்த இறுதிக் கட்ட படிப்பில் ஒவ்வொரு குழந்தைகளும் மூன்று சான்றிதழ் பெற வேண்டும் என்று பாப்தாதா ஆரம்பத்திலேயே சொல்லியிருந்தார். முதலாவது தன்னிடம், தன்னிடமிருந்து திருப்தி என்ற சான்றிதழ் பெறுவது, இரண்டாவது பாப்தாதாவின் மூலம் சான்றிதழ் பெறுவது, மூன்றாவது குடும்பத்தின் சம்மந்தம் தொடர்பில் வருபவர்கள் மூலம் சான்றிதழ் பெறுவது. இந்த மூன்று சான்றிதழ்

கிடைக்கும் பொழுது படிப்பு முடிவடைந்து விட்டது என்று புரிந்து கொள்ளலாம். பாப்தாதா நம்மிடம் திருப்தியாக இருக்கிறார் என்று புரிந்து கொள்ள வேண்டாம் ஆனால் மூன்று விதமான சான்றிதழ் வேண்டும், ஒன்று மட்டும் போதாது. எனவே மூன்று சான்றிதழில் எத்தனை சான்றிதழில் கிடைத்திருக்கிறது என்று சோதனை செய்யுங்கள்? பாபா இல்லாமல் கூட ஒன்றும் கிடைக்காது ஆனால் குடும்பத்தின் திருப்தி என்ற சான்றிதழ் இவரை விட அதிகமாகவே கிடைக்கிறது. குடும்பத்தில் எத்தனை ஆத்மாக்களிடமிருந்து சான்றிதழ் யாருக்கு கிடைக்கிறதோ, எத்தனை பிராமணர்கள் திருப்தியாக இருக்கிறார்களோ, அந்தளவு தான் பக்தர்கள் கூட உங்களுக்கும் பூஜை திருப்தியாக செய்வார்கள், வேலை ஆக வேண்டுமென்று கிடையாது, மனதார செய்வார்கள். எனவே எத்தனை இங்கு பிராமண வாழ்க்கையில் எத்தனை பிராமணர்கள் உங்களுக்காக அன்பு, மரியாதை அதாவது மதிப்பு இருக்கிறதோ, மனதார திருப்தியாக இருக்கிறார்களோ, அந்தளவு தான் பூஜைக்குரியவர் ஆவீர்கள். பூஜைக்குரியவருக்காக அன்பும் மரியாதையும் இருக்கிறது. எனவே எப்பொழுதெல்லாம் ஜட சித்திரங்களுக்கு பூஜை நடைபெறுகிறதோ, அப்பொழுதெல்லாம் இந்தளவு தான் அன்பும் மரியாதையும் கிடைக்கும். முழு கல்பத்தின் பாக்கியத்தை இப்பொழுது தான் உருவாக்க வேண்டும். அரைக்கல்பத்தின் ராஜ்ய பாக்கியம் மட்டும் கிடையாது, பூஜைக்குரியவரின் பாக்கியமும் இப்பொழுதுதான் உருவாக்க வேண்டும். அவ்வாறு நமக்கு பாபாவிடம் மட்டும் வேலை முடிந்து விடும் என்று புரிந்து கொள்ளாதீர்கள். இல்லை. பாபாவின் குடும்பத்தோடு எவ்வளவு அன்பு இருக்கிறது. எனவே தந்தையை பின்பற்றுங்கள். பிரம்மாவை பார்த்தீர்களா? எப்படிப்பட்ட குழந்தையாக இருந்தாலும், அறிவுரை வழங்குபவராக இருந்து அறிவுரையும் கொடுக்கிறார் ஆனால் அறிவுரையின் கூடவே அன்பு கூட மனதார வைக்கிறார் மேலும் அன்பு என்பது வெளிப்படையானது அல்ல ஆனால் அன்பின் அடையாளம் -தனது சுப பாவனை மூலம், சுப விருப்பத்தின் மூலம் எப்படிப்பட்ட மாயாவிற்கு அடிமையாகியுள்ள ஆத்மாவை மாற்றம் செய்விக்க முடியும். யாராக இருந்தாலும், வெறுப்புணர்வு வரக்கூடாது, இவர்களோ மாறுபவர்களோ இல்லை, இவர்கள் இருப்பதே அப்படிதான். இல்லை. இப்பொழுது கருணை மனமுடையவராக ஆவது தான் அவசியமாக இருக்கிறது. ஏனெனில் பல குழந்தைகள் பலவீனமாக

இருக்கும் காரணத்தினால் தனது எந்தவொரு பெரிய பிரச்சனைகளை கடக்க முடியவில்லை, எனவே சகயோகி ஆகுங்கள். யாரிடம்? அறிவுரை மட்டும் அல்ல, இன்றைய கால படிப்பு கூட அன்பு மற்றும் சுப பாவனை இல்லாமல் படிப்பிக்க முடியாது. இது கடைசி ரிசல்ட்டாக இருக்கிறது. அறிவுரை வேலை செய்யாது ஆனால் அறிவுரையின் கூட சுப பாவணை, கருணை மனமுடையவர் ஆவதினால் தான் இந்த வேலை எளிதாகி விடும். பிரம்மாபாபாவைப் பாருங்கள், இன்று இந்த குழந்தை தவறு செய்திருக்கிறது என்பது தெரிந்தாலும் கூட, அந்த குழந்தைக்கும் அறிவுரையைக்கூட முறையாக, யுக்தியோடு கொடுக்கிறார் மேலும் அவர்களை மிகவும் அன்பும் கொடுப்பார், இதன் மூலம் அவர்கள் பாபாவின் அன்பை புரிந்து கொள்வார்கள் மேலும் அன்பில் தவறை உணரும் சக்தி அவர்களிடம் வந்து விடுகிறது. எனவே பிரம்மாபாபாவை இன்று அதிகம் நினைவு செய்தீர்கள் அல்லவா. எனவே தந்தையை பின்பற்றுங்கள். பாபாவிற்கு சமமாக ஆவதற்காக தைரியம் இருக்கிறதா? தைரியம் வைப்பதற்கான வாழ்த்துக்கள். பாப்தாதா உங்களுடைய மனதின் கைதட்டலை முதலிலேயே கேட்டு விட்டார், நீங்கள் குஷியோடு கைகளை தட்டிக் கொண்டேயிருங்கள் ஆனால் பாபாவிற்கு மனதின் கைதட்டல் முதலில் சென்றடைகிறது.

பாப்தாதா கூட சிரிப்பிற்கான விஷயத்தை சொல்கிறார். பிரம்மாபாபாவின் ஆன்மீக உரையாடல் நடைபெற்றது, எனவே எனக்கு ஒரு விஷயத்தில் நாளின் நினைவு (நாட்களை எண்ணிக் கொண்டிருத்தல்) இருக்கிறது என்று பிரம்மாபாபா சொல்கிறார் ஆனால் குழந்தைகளுக்கு சொல்கிறார்கள் நாளின் நினைவின்றி இருங்கள், ஆனால் பிரம்மாபாபாவிற்கு ஒரு விஷயத்தில் நாளின் நினைவு வருகிறது, எந்த நாள்? எப்பொழுது என்னுடைய ஒவ்வொரு குழந்தைகளும் ஜீவன்முக்தி நிலையை அடைவார்கள் என்ற நாள். இறுதியில் ஜீவன்முக்தி அடைந்து விடலாம் என்று புரிந்து கொள்ளாதீர்கள். இல்லை. பல காலத்தின் ஜீவன்முக்தி நிலையின் பயிற்சி, பல காலத்தின் ஜீவன்முக்தி ராஜ்ய டாக்கியத்தின் அதிகாரியாக மாற்றும். அதற்கு முன்னால் நீங்கள் ஜீவன்முக்தி நிலையை ஆகி விட்டால், ஜீவன்முக்தி நிலையில் இருக்கக் கூடிய உங்களின் தாக்கம் ஜீவன் பந்தனத்தில் இருக்கக் கூடியவர்களின் பந்தனத்தை சமாப்தி செய்துவிடும். இந்த சேவையை செய்ய வேண்டாமா என்ன? செய்ய

வேண்டுமல்லவா. எனவே பிரம்மாபாபாவின் நாளின் நினைவிற்கு பதில் சொல்லுங்கள். அனைவரும் ஜீவன்முக்தி அடையும் பொழுது அந்த நாள் தீர்மானிக்கப்படும்? எந்த பந்தனமும் இல்லை, பந்தனங்களின் லிஸ்ட்டை வர்ணனை செய்கிறீர்கள், வகுப்புகள் எல்லாம் எடுக்கிறீர்கள், அதனால் பந்தனங்களின் பெரிய லிஸ்ட்டை எடுக்கிறீர்கள் ஆனால் பாபா சொல்கிறார், அனைத்து பந்தனங்களின் முதல் பந்தனமாக இருப்பது தேக அபிமானமாகும். அதிலிருந்து விடுபடுங்கள். தேகமே இல்லையென்றால், மற்ற பந்தனங்கள் தானாகவே முடிவடைந்து விடும். தன்னை தற்சமயத்தில் நான் டீச்சராக இருக்கிறேன், நான் மாணவனாக இருக்கிறேன், நான் சேவாதாரியாக இருக்கிறேன், இப்படி புரிந்து கொள்வதற்குப் பதிலாக அமிர்தவேளையிலிருந்து நான் சிரேஷ்ட ஆத்மா மேலிருந்து வந்திருக்கிறேன் -இந்த பழைய உலகத்தில், பழைய உடலில் சேவைக்காக வந்திருக்கிறேன் என்று பயிற்சி செய்யுங்கள். நான் ஆத்மா இந்த பாடத்தை இப்பொழுது மேலும் உறுதி செய்யுங்கள். நீங்கள் ஆத்ம உணர்வை தாரணை செய்தால், இந்த ஆத்மீக உணர்வு, மாயாவின் உணர்வை சதா காலத்திற்கு முடித்து விடும்; ஆனால் ஆத்மாவின் உணர்வு -இதை இப்பொழுது நடந்தாலும், சுற்றிக் கொண்டிருந்தாலும் நினைவில் வைத்து, அதை இப்பொழுது அதிகமாக செய்ய வேண்டும். பிரம்மாபாபா ஆத்மா என்ற பாடத்தை ஆரம்ப காலத்திலிருந்தே எவ்வளவு உறுதிபடுத்தினார். சுவர்களில் கூட நான் ஒரு ஆத்மாவாக இருக்கிறேன், குடும்பத்தை சேர்ந்தவர்களை கூட ஆத்மா ஆத்மா என்று ஒவ்வொருவரின் பெயரையும் சுவர்களில் கூட இதை உறுதி செய்தார். டைரிகளில் கூட நான் ஒரு ஆத்மா, இவர் ஒரு ஆத்மா, இவரும் கூட ஒரு ஆத்மா என்று எழுதினார். நீங்கள் ஆத்மா என்ற பாடத்தை இந்தளவு உறுதி செய்தீர்களா? நான் சேவாதாரியாக இருக்கிறேன் என்ற பாடத்தை உறுதி செய்கிறீர்கள், ஆனால் ஆத்மாவாகிய நான் சேவாதாரியாக இருக்கிறேன், இதனால் ஜீவன்முக்தி ஆகி விடலாம். தினந்தோறும் மேலிருந்து சரீரத்தில் அவதாரம் செய்திருக்கிறேன், நான் இந்த சரீரத்தில் அவதாரம் செய்திருக்கிறேன். பிறகு யுத்தம் செய்ய வேண்டியிருக்காது. ஆத்மா புள்ளியாக இருக்கிறதல்லவா? அதனால் அனைத்து விஷயங்களிலும் புள்ளி வைத்து விடலாம். நான் எப்படிப்பட்ட ஆத்மா? தினமும் ஒவ்வொரு புதுப்புது டைட்டிலை (சுவமான்) நினைவில் கொண்டு வாருங்கள். உங்களிடம் அதிகமான

சுயமரியாதையின் பட்டியல் இருக்கிறதல்லவா. தினமும் புதுப்புது சுயமரியாதையை நினைவில் வையுங்கள், நான் அப்படிப்பட்ட சிரேஷ்ட ஆத்மாவாக இருக்கிறேன். எளிதாக இருக்கிறதா அல்லது கடினமாக இருக்கிறதா? ஆத்மா புள்ளியாக இருப்பதால் நாடகத்திற்கு புள்ளி வைப்பது கூட காரியத்தில் வந்து விடும் மேலும் பிரச்சனைகளுக்கும் கூட நொடியில் புள்ளி வைக்க முடியும். மற்றும் புள்ளியாகி பரந்தாமத்தில் புள்ளியாக நிலைத்திருக்க முடியும். செல்ல வேண்டுமா? அல்லது நேராக சொர்க்கத்திற்கு செல்வீர்களா? எங்கே செல்வீர்கள்? முதலில் வீட்டிற்கு செல்வீர்களா? அல்லது ராஜ்யத்திற்கு செல்வீர்களா? பாபாவைக் கேட்காமல் நேராக ராஜ்யத்திற்கு சென்று விடுவீர்களா? பாபா கூட வீடு வரை செல்ல வேண்டுமல்லவா. எனவே புள்ளியான பாபாவுடன் புள்ளியாகி முதலில் வீட்டிற்கு செல்ல வேண்டும். நேராக ராஜ்யத்தின் பாஸ்போர்ட் கிடைக்காது. பரந்தாமத்திலிருந்து ராஜ்யத்திற்கு செல்வதற்கான பாஸ்போர்ட் தானாகவே கிடைத்து விடும். யாருக்கும் கொடுக்க வேண்டிய அவசியமிருக்காது. எந்தளவு அருகாமையில் இருக்கிறீர்களோ, அந்தளவு நம்பர்வார் பரந்தாமத்திலிருந்து ராஜ்யத்திற்கு வருவீர்கள். பரந்தாமத்திலிருந்து முதலாவதாக எந்த ஆத்மா கிளம்புகிறது? யாருடன் செல்கிறது? பிரம்மாவுடன் செல்கிறது. அனைவரும் ராஜ்யத்தில் சேர்ந்து வருவீர்களா அல்லது இரண்டு முன்று ஜென்மங்கள் கழித்து வருவீர்களா? செல்ல வேண்டுமல்லவா? அன்பு இருக்கிறதல்லவா? பிரம்மாபாபாவை விட்டு விடாதீர்கள், ஒன்றாக சேர்ந்து செல்வீர்களா? எனவே பாப்தாதாவிற்கு தேதியைச் சொல்வீர்களா அல்லது இல்லையா? (பாப்தாதா சொல்லட்டுமா) பாப்தாதா இப்பொழுதே என்று சொல்கிறார், ஏனெனில் பாபாவும்கூட தேதியின் நினைவிலிருந்து மாறி விடுவார். பாருங்கள், பிரம்மாபாபா மறு நாள் பற்றி நினைத்தாரா? உடனடி தானம் மகான் தானம் செய்தார் அல்லவா. தீவிர முயற்சி, முதலில் முயற்சி செய்தார் அல்லவா. நாளை என்ன ஆகுமோ என்று பார்க்கவில்லை, நாளை என்ன. நடக்குமோ, குடும்பம் எப்படி நடக்குமோ, யோசித்தாரா? இன்று என்ன நடந்து கொண்டிருக்கிறதோ, அது நன்றாகவே இருக்கிறது, நாளை என்ன நடக்க வேண்டுமோ, அது கூட நன்றாகவே இருக்கும். அப்பொழுதுதான் உடனடி தானம் மகான் புண்ணியம் மேலும் முதல் நம்பரில் வரக்கூடிய மகான் ஆனார். இப்பொழுது குழந்தைகள் உடனடி தானம் செய்பவர் ஆக வேண்டும்.

எண்ணம் உதித்தது உடனடியாக தானம் மகான் பலி ஆகி விட்டார். முதல் டிவிஷனில் யார் வருவார்கள் என்று கேட்டால் அனைவரும் கைகளை உயர்த்துவீர்கள்? இப்பொழுது கூட உயர்த்த சொன்னால் உயர்த்துவீர்கள். யாரும் கைகளை கீழே போடமாட்டார்கள் என்று பாப்தாதாவிற்கு தெரியும். முதல் டிவிஷனில் வரவேண்டுமென்றால் முதல் நம்பரில் உள்ளவரை பின்பற்றுங்கள். பின்பற்றுவது எளிதாக இருக்கிறதா? -பிரம்மாபாபாவின் கால் அடி மீது கால் வையுங்கள். காப்பி அடியுங்கள். பின்பற்றுவது வருகிறதா அல்லது இல்லையா? பின்பற்றுவது வருகிறதா? எனவே பின்பற்றுங்கள் மேலும் என்ன செய்ய வேண்டும்.

விசாலமான சபையைப் பார்த்து குஷி ஏற்படுகிறதல்லவா. (அனைவரும் சத்தமாக கைகளை தட்டினார்கள்) அனைவரும் ஒரு கையில் கை தட்டுவதை கற்றுக் கொள்ளுங்கள். (அனைவரும் ஒரு கையை அசைத்தனர்.) இது நன்றாக இருக்கிறது, நல்லது.

இந்த முறை அனைத்து மண்டலத்தை சேர்ந்தவர்களும் வந்திருக்கிறார்கள் தானே, அதிகபட்சமாக அனைத்து தரப்பிலிருந்தும் வந்திருக்கிறார்கள்.

மகாராஷ்ட்ரா மற்றும் மும்பாய்: கைகளை உயர்த்துங்கள். மகாராஷ்ட்ரா சேவைக்கு நிமித்தமாக இருக்கிறார்கள் அல்லவா. நல்லது சேவையின் ஆதரவை கொடுத்திருக்கிறார்கள். அனைவரும் குஷியோடு சேவை செய்து கொண்டிருக்கிறார்கள். இரவில் கூட சேவையில் மூழ்கி விடுகிறார்கள், தூக்கம் வருகிறதா? இரவும் பகலும் செய்யும் சேவை மகான் புண்ணியம் ஆகி விடுகிறது. இரவாக இருந்தாலும் கூட சேவாதாரிகள் சேவைக்கு வந்து விடுகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் தான் மகாராஷ்ட்ராவை சேர்ந்தவர்கள்? நல்ல ரிசல்ட் இருக்கிறது. முதலில் குஜராத்தை சேர்ந்தவர் செய்தார்கள், இப்பொழுது மகாராஷ்ட்ராவை சேர்ந்தவர்கள் செய்கிறார்கள். ஒவ்வொரு சேவாதாரி குரூப்புக்கும் அவர் அவரது விசேஷத்தன்மை அடங்கியிருக்கிறது. குஜராத்திற்கு வாய்ப்பு கிடைத்திருக்கிறது அல்லவா. பாருங்கள் சேவையின் காரணத்தினால் உங்களுக்கு இரட்டை வாய்ப்பு கிடைத்திருக்கிறது. தனது முறைப்படி வர முடியும்

மேலும் சேவாதாரியாகி கூட வருவதால் சேவாதாரிகளுக்கு இரட்டை வாய்ப்பு கிடைக்கிறது. நல்லது.

டில்லி: டில்லியை சேர்ந்தவர்கள் டைமண்ட் ஜூப்ளியின் இறுதி விழாவை கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள். நல்லது. டில்லியிலிருந்து நாலா பக்கமும் சப்தம் எளிதாக பரப்ப முடியும். ஆகையால் நல்ல முறையில் தைரியமாக சேவை செய்து கொண்டிருக்கிறீர்கள், மேலும் டைமண்ட் ஜூப்ளியின் (வைர விழாவின்) முழுமையான நிறைவு விழாவையும் கோலாகலமாக சிறப்பாக நடக்கத்தான் வேண்டும். நல்லது.

குஜராத்: குஜராத் ஒரு அண்டை வீடாகும், கை தட்டினால் சேவைக்கு வந்து விடுவார்கள்.
(கர்னாடகம், ஆந்திரா, பஞ்சாப், ஈஸ்டர்ன், நேபாள், அஸ்ஸாம், ஒடிசா, இந்தூர், உ.பி. பனாரஸ், போபால், தமிழ்நாடு, ராஜஸ்தான், ஆக்ரா, மதுபன், இரட்டை வெளி நாட்டினர் முதலிய ஜோனைச் சேர்ந்த அனைவரையும் பாப்தாதா கைகளை உயர்த்தி சந்தித்துக் கொண்டிருக்கிறார்).

இரட்டை வெளிநாட்டை சேர்ந்தவர்களோ மதுபன் சபைக்கு அழகாக இருக்கிறார்கள், இரட்டை வெளிநாட்டை சேர்ந்தவர்கள் அன்பு நினைவுகளை கொடுப்பதிலும் பெறுவதிலும் புத்திசாலிகளாக இருக்கிறார்கள். பாரதம், பாரதம் தான், ஆனால் இரட்டை வெளிநாட்டை சேர்ந்தவர்களும் குறைந்தவர்கள் அல்ல. ஒவ்வொரு சமயமும் தனது வித விதமான ரூபத்தில் நினைவுகளை அனுப்பிக் கொண்டேயிருக்கிறார்கள். இப்பொழுது கூட புது வருடத்தின் நினைவுகளை அதிகமாகவே அனுப்பியிருந்தார்கள். மேலும் விசேஷமாக இந்த நாள் அதிகமான குழந்தைகள் முறைப்படி நினைவு செய்கிறார்கள். மனதின் மூலம் கூட நினைவுகளை அனுப்புகிறார்கள், வாழ்த்து மடல் மற்றும் கடிதங்கள் மூலம் அன்பு நினைவுகளை அனுப்புகிறார்கள். பாப்தாதாவிடம் இரட்டை வெளிநாட்டை சேர்ந்தவர்களின் அன்பு நினைவுகளின் கடிதங்கள் மற்றும் வாழ்த்து மடலும் கிடைக்கிறது. பாப்தாதா அனைவருக்கும் பல மடங்கு அன்பு நினைவுகள் மற்றும் வாழ்த்துக்களை கொடுத்துக்

கொண்டேயிருக்கிறார். இப்பொழுது கூட பல இடங்களிலிருந்தும் ஃபரிஸ்தா ரூபத்தில் மதுபன் சபையில் வந்தடைகிறார்கள். பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கிறார் மேலும் ரிசல்ட்டில் நினைவு மற்றும் சேவையின் ஊக்க உற்சாகத்தின் விசேஷமான வாழ்த்துக்களை கொடுத்துக் கொண்டிருக்கிறார். இப்பொழுது இரட்டை வெளிநாட்டினர் அதிகமாக நினைவு மற்றும் சேவையில் அனுபவசாலிகளாக இருக்கிறார்கள் மேலும் முன்னேறவும் செய்கிறார்கள். இப்பொழுது முதலில் இருந்த குறும்புத்தனமான குழந்தைத்தனம் அதிகமானவர்களுக்கு முடிந்துவிட்டது. மேலும் முன்னேறிக் கொண்டேயிருக்கிறார்கள். ஆகையால் இரட்டை வெளிநாட்டினர்களுக்கு தீவிர முயற்சியாளருக்கு பாப்தாதா வாழ்த்துகளின் கூடவே, மாயாவின் பார்வையிலிருந்து சதா பாதுகாப்பாக இருக்கக்கூடியவர்கள், தனது கண்களுக்குள் சதா பாபாவை வைக்கக்கூடியவர்கள், என்ற சுலோகனை கூட சொல்கிறார். பாபா கண்களுக்குள் இருந்தால் மாயாவின் பார்வை விழ முடியாது, ஆகையால் சதா குழந்தைகள் பாதுகாப்பாக இருக்கிறார்கள், இருக்கத்தான் வேண்டும்.

இப்பொழுது அனைவரும் யாரெல்லாம் அமர்ந்திருக்கிறார்களோ ஒரு நொடியில் அசரீரி ஆகி ஆத்மீக நிலையில் நிலைத்திருங்கள். சரீர உணர்வில் வராதீர்கள். ஆத்மா, பரமாத்மாவோடு சந்திப்பை கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள். (பாப்தாதா டிரில் செய்ய வைத்தார்). இப்படிப்பட்ட பயிற்சியை அடிக்கடி காரியம் செய்யும் பொழுது, செய்து கொண்டேயிருங்கள். ஸ்விட்ச் ஆன் செய்தால் நொடியில் அசரீரி ஆகி விடவேண்டும். இந்த பயிற்சி கர்மாதீத் நிலையை அனுபவம் செய்ய வைக்கும்.

நாலா பக்கத்திலுமுள்ள சதா சக்திசாலியான ஆத்மாக்களுக்கு, சதா பாப்தாதாவை பின்பற்றக்கூடிய சகஜ முயற்சி செய்யும் குழந்தைகளுக்கு, சதா ஒரு பாபா, ஒரு நிலைப்படுத்தும் புத்தி, ஒரே ரசனை என்ற மனநிலையில் நிலைத்திருக்கக்கூடிய, புள்ளியாகி புள்ளியான பாபாவோடு செல்லக்கூடிய அப்படிப்பட்ட அனைத்து பாபாவிற்கு அன்பான, சகயோகியான, சேவாதாரி குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

**தாதிகளோடு: தடைகளற்ற விழா நிறைவு பெற்றதல்லவா!** (மாலை 7.30 மணியளவில், குளோபல் ஹாஸ்பிடலில் லண்டனை சேர்ந்த ஷைலி சகோதரி தனது பழைய சரீரத்தை விட்டு பாப்தாதாவின் மடியில் சென்றார், இந்த செய்தி பாப்தாதாவிற்கு சொல்லப்பட்டது). ஏதாவதொரு நினைவுச்சின்னம் இருக்கிறது. யாருக்கு என்ன நடிப்பு இருக்கிறதோ, அவர்கள் எங்கிருந்தாலும் எப்படியிருந்தாலும், அந்த நடிப்பை நடித்தே ஆகவேண்டும். இரட்டை வெளிநாட்டினர்களும் கூட அட்வான்ஸ் பார்ட்டியிலும் கூட வேண்டுமல்லவா. அட்வான்ஸ் பார்ட்டியின் பூங்கொத்தில் வித விதமான மலர்கள் சேர்ந்து கொண்டே இருக்கிறது. (பழைய சமர்ப்பண சகோதரி, இரண்டு மாதங்களாக இங்கேயே இருக்கிறார்கள், கடைசி இரண்டு மூன்று நாட்கள் மௌனத்தில் இருந்தார்கள், திடீரென்று உடல் நிலை மோசமானது, மேலும் 2-3 நாட்கள் ஹாஸ்பிடலில் சிகிச்சை நடைபெற்றது) அப்படிப்பட்ட நல்ல நல்லவர்கள் தான் வேண்டுமல்லவா. அவர்கள் வைப்ரேஷன் மூலம் சேவை செய்ய முடியும். இதை செல்வது என்று கூற முடியாது, சேவைக்கு வருவது என்று தான் சொல்ல வேண்டும். இது கூட பல ஆத்மாக்களுக்கு எல்லைக்கு அப்பாற்பட்ட வைராக்கியத்தை கொடுப்பதற்கு நிமித்தமாக ஆகி விடுகிறார்கள். இத்தனை பெரிய விசாலமான விழாவிலிருந்து செல்வது, இது கூட எல்லைக்கு அப்பாற்பட்ட விழாவில் எல்லைக்கு அப்பாற்பட்ட நடிப்பை நடிக்க வேண்டும். எனவே நீங்கள் என்ன சென்று விட்டார் என்றா சொல்வீர்கள்? இல்லை, செல்லவில்லை ஆனால் வித விதமான ஆடையிலிருந்து வேறு விதமான நடிப்பை நடிக்க வந்துள்ளார். (லண்டனில் பொதுவாக அனைவரும் அவருக்காக பாபாவை நினைவு செய்தார்கள்) இவர்கள் அனைவருக்கும் கூட சொல்லுங்கள், அனைவரும் அவருக்காக நினைவினுடைய உதவி தாருங்கள், வைப்ரேஷன் கொடுங்கள். (நிர்வைர் சகோதர் அந்த சமயத்தில் அனைவரும் ஒரு நிமிடம் அவருக்காக யோகதானம் தர வேண்டுமென்ற செய்தியை கொடுத்தார்).

**விடைபெறும் நேரத்தில்:** அனைவருக்கும் இந்த சாந்திவனத்தின் பரந்து விரிந்த ஹால் பிடித்திருக்கிறதா? (ஆமாம்), யார் உருவாக்கினார்கள்? உங்கள் அனைவரின் சகயோகத்தின் விரல் மூலம் இந்த விசாலமான

ஹால் தயார் ஆனது. பாபாவோ இருக்கிறார் ஆனால் குழந்தைகளின் சகயோகத்தின் விரல் கூட அவசியம் தேவைப்படுகிறது. நன்றாக இருக்கிறது, அனைத்து குழந்தைகளின் சகயோகத்தின் மூலம் உருவாக்கப்பட்டிருக்கிறது மேலும் போகப்போக என்ன காரியம் நடந்து கொண்டிருக்கிறதோ, அது நடந்தே தீர வேண்டும். எனவே உங்கள் அனைவருக்கும் இந்த விழா, தரையில் தூங்குவது, உண்பது பிடித்திருக்கிறதா? சிரமம் இல்லையே, சிரமம் ஏற்பட்டதா? பாருங்கள் பக்தியின் விழாக்கள் நிறைய செய்துள்ளீர்கள், அதிலெல்லாம் உணவின் கூடவே மண்ணையும் உண்கிறார்கள், மணல் பரப்பில் உறங்குகிறார்கள், மணல் பரப்பில் சாப்பிடுகிறார்கள். உங்களுக்கு பிரம்மா போஜனம் நன்றாக கிடைக்கிறதல்லவா. பிரம்மா போஜனம் சரியாக கிடைக்கிறதா? யாருக்காவது பிரம்மா போஜனம் உண்பதில் ஏதாவது சிரமம் ஏற்படுகிறதா? உடல் நிலை மோசமாகவில்லையே? நல்லது நோய் கூட சரியாகி விடுகிறதா? எனவே இந்த சாந்திவனத்தின் விழா விசேஷ பிராமணர்களுக்காக இருக்கிறது மேலும் நடைபெற்றுக் கொண்டேயிருக்கும் ஆனால் இந்த சாந்திவனத்தை சேவையில் கூட ஈடுபடுத்துங்கள்.

பிராமணர்கள் என்றாலே சேவாதாரி. எனவே யாரெல்லாம் உங்கள் சம்மந்தத்தில், தொடர்பில் வருகிறார்களோ மேலும் எங்களுக்கு கூட வாய்ப்பு கிடைத்தால் நாங்களும் வருவோம் என்று விரும்புகிறார்களோ ஆனால் இடத்தின் காரணமாக நீங்கள் அவர்களுக்கு சேவை செய்ய முடிவதில்லை, இப்பொழுது பெரிய மனதோடு இத்தனை ஆயிரக்கணக்கில் சேவை செய்ய முடிகிறது, ஏனெனில் மேலே உங்களுக்கு (பாண்டவன் பவன், ஞானசரோவர்) பரப்பளவில் எல்லைக்குட்டட்டதாக இருக்கிறது, இங்கு ஒரே ஹாலில் இரண்டு மூன்று குரூப்பை உருவாக்கி யோகாவிற்கான நிகழ்ச்சி செய்ய முடியும், கோர்ஸ் (7-நாள் பாடம்) செய்ய முடியும் மேலும் கூடவே வாரிசு குழந்தைகளையும் உருவாக்க முடியும். இந்த இடத்தின் பாலனை மூலம் வாரிசு ஆவது மிகவும் சகஜமாகி விடும், ஏனெனில் இந்த இடத்தின் வாயுமண்டலம் மற்றும் அனுபவம் நிறைந்த தாதிகளின் பார்வை, பாலனை எளிதாக மாற்றி விடும். ஒரு நிகழ்ச்சியில் பிராமணர்களும் புத்துணர்ச்சி அடைவார்கள், மற்றொரு நிகழ்ச்சி சேவைக்கான விதவிதமான முறையில் ஒரே நேரத்தில் தனித்தனி

குழுக்களாக அமைத்து ஒரே ஹாலில், மேலும் எது தங்குவதற்கான நல்ல பெரிய ஹாலாக இருக்கிறதோ, அதில் கூட வைக்க முடியும். எனவே எப்படி நீங்கள் தானாகவே வந்தீர்கள் அல்லவா, அது போல தனது தொடர்பில் வரக்கூடியவர்களுக்கும் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து கொண்டேயிருங்கள். இந்த பெரிய ஹால் எப்படி காரியத்தில் பயன்படுத்துவது என்று இல்லை, இந்த பெரிய ஹால் சிறியதாக கூட ஆகி விடும், சிறியது பெரியது கூட ஆகி விடும். எனவே இத்தனை பெரிய கூட்டத்தை உருவாக்குங்கள். இந்த ஹால் மூலம் 9-லட்சத்தை தயார் செய்யுங்கள், செய்ய முடியுமா? (ஒவ்வொருவரும் ஒருவரை தயார் செய்யுங்கள்) இது நல்ல திட்டமாக இருக்கிறது, எத்தனை பேர் நீங்கள் அமர்ந்திருக்கிற்றீர்களோ ஒவ்வொருவரும் ஒருவரை அழைத்து வந்தால், எத்தனை பேர் ஆகி விடும்? இப்பொழுது சமயத்திற்கு தகுந்தபடி சேவைகூட எல்லைக்கு அப்பாற்பட்டதாக பெரியதாக செய்யுங்கள், சின்ன சின்ன குழுக்களாக நிகழ்ச்சி மேலே கூட (பாண்டவபவன்) நடைபெறுகிறது, ஆனால் இங்கு அதிகமான எண்ணிக்கையில் பிரஜைகளை உருவாக்க முடியும். ராயல் பிரஜைகளை கூட உருவாக்க முடியம் வாரிசு குழந்தைகளை கூட உருவாக்க முடியும். பிடித்திருக்கிறதா? எனவே மற்றொரு மூறை என்ன செய்வீர்கள்? எத்தனை பேர் அமர்ந்திருக்கிறீர்களோ, அத்தனை பேரை அழைத்து வாருங்கள். அதிகமானவரை அழைத்து வரலாம், குறைவாக அழைத்து வரக் கூடாது.

உங்கள் அனைவருக்கும் புத்துணர்ச்சி தேவைப்படுகிறது. உங்களுக்கான பட்டி (யோக நிகழ்ச்சிகள்) வைக்கலாம்? ஆனால் இங்கே பட்டி செய்யுங்கள், அங்கேயே அமர்ந்து விடுங்கள், அப்படி செய்ய வேண்டாம். பட்டி என்றாலே எப்பொழுதுமே மாற்றத்தை கொண்டு வருவது. எனவே அந்த மாதிரி திட்டத்தை உருவாக்குங்கள், அதில் அனைவரும் குஷி அடைந்து விடுவார்கள். மினிஸ்டர், பிரைம் மினிஸ்டர், பிரசிடென்ட் அனைவருமே உங்களின் அனுபவத்தின் ஈர்ப்பில் ஈர்க்கப்படுவார்கள். ஒருவேளை பாரதத்திற்கு நன்மை செய்ய வேண்டுமென்றால் இங்கு இருந்து தான் ஏற்படும் என்று குறைந்ததிலும் குறைந்தது அரசாங்கத்தை சேர்ந்தவர்கள் சொல்வார்கள். எனவே இப்பொழுது வேகமாக சேவையை செய்யுங்கள். புரிந்ததா? இப்பொழுது மற்றபடி என்னவெல்லாம் எச்சியுள்ளதோ, அதை சரி செய்ய வைத்துக்

கொண்டேயிருங்கள், செய்யக்கூடியவர்கள் கூட ஒன்று சேர்ந்து மலையை தூக்க வேண்டுமென்றால் கூட இது என்ன பெரிய விஷயம். பாப்தாதாவிற்கு கூட விசாலமான விழா நன்றாக இருக்கிறது. தைரியமான குழந்தைகளுக்கு பாபாவின் உதவி கிடைக்கிறது. ஓம் சாந்தி!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 23.02.1987 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# துணைவனை துணையாக வைத்து சாட்சி மற்றும் குஷி நிறைந்த நிலையின் ஆசனதாரி ஆகுங்கள்!

இன்று உலகிற்கு நன்மை செய்யும் தந்தை உலகில் நாலாபுறங்களிலுமுள்ள குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறார். அனைத்துக் குழந்தைகளின் அன்பு மற்றும் சகயோகத்தின் ரேகைகள் குழந்தைகளின் முகத்திலிருந்து தென்பட்டுக் கொண்டிருக்கிறது. ஒவ்வொருவரின் உள்ளத்திலிருந்து வெளியாகும் "மேரா பாபா' (என்னுடைய பாபா) என்ற பாடலை பாப்தாதா கேட்டுக் கொண்டிருக்கிறார். பாப்தாதாவும் அதற்கு பதிலாக 'ஓ! என்னுடைய மிகப் பிரியமான, மிக அன்பான செல்லக்குழந்தைகளே' என்று கூறுகிறார். ஒவ்வொரு குழந்தையும் பிரியமானவராகவும் இருக்கிறார், செல்லமானவராகவும் இருக்கிறார், ஏன்? கோடியில் சிலர், அந்த சிலரிலும் சிலரானவராக இருக்கிறீர்கள், ஆக செல்லமானவர்கள் தானே நீங்கள் இல்லையா? அப்படி பாப்தாதாவும் செல்லமான குழந்தைகளைப் பார்த்து குஷி அடைகிறார். குழந்தைகளையும் எப்பொழுதும் குஷியில் நடனமாடிக் கொண்டிருப்பதாகப் பார்க்கிறார். மேலும் எப்பொழுதும் பார்க்க விரும்புகிறார். குஷியில் இருக்கிறீர்கள் ஆனால் தந்தை நீங்கள் எப்பொழுதும் குஷியில் இருக்க விரும்புகிறார். எப்பொழுதும் குஷியாக இருக்கிறீர்களா அல்லது குஷியில் வித்தியாசம் ஏற்படுகிறதா? சில நேரம் அதிக குஷி, சில நேரம் கொஞ்சம் குறைவு மற்றும் வேறு சில நேரம் மிகக்குறைவு என்று அப்படி இருக்கிறதா?

தற்சமயம் முகம் மூலம், கண்கள் மூலம், இரண்டு வார்த்தைகள் மூலம் ஆத்மாக்களின் துக்கத்தை விலக்கி குஷி கொடுக்கும் குழந்தைகள் உங்களுடைய இந்த சேவை உலகிற்கு மிக அவசியமாக இருக்கிறது என்று தந்தை ஏற்கனவே கூறியிருக்கிறார். உங்களைப்

பார்த்தவுடனேயே குஷியடைந்து விட வேண்டும். எனவே குஷி நிறைந்த முகம் அல்லது உருவம் எப்பொழுதுமே இருக்கட்டும். ஏனென்றால் மனதின் குஷி முகம் மூலம் தெளிவாகத் தென்படும். எவ்வளவு தான், எப்படிப்பட்ட, மனதால் அலைந்து கொண்டிருப்பவராக இருந்தாலும், பிரச்சனை. துக்கத்தின் உணர்வுகளில் வந்தாலும், குஷியாக இருப்பது அசம்பவம் என்று நினைத்துக் கொண்டிருப்பவரானாலும், ஆனால் உங்கள் எதிரில் வந்தவுடனேயே உங்களுடைய உருவம், உங்களுடைய உள்ளுணர்வு, உங்களுடைய பார்வை அந்த ஆத்மாவை பரிவர்த்தனை செய்து விட வேண்டும். இன்று மனதின் குஷிக்காக எவ்வளவு செலவு செய்கிறார்கள், எவ்வளவு பொழுதுபோக்கிற்கான புதுப்புது சாதனங்களை உருவாக்கிறார்கள். அது அற்பகாலத்திற்கான சாதனம். மேலும் உங்களுடையது எப்பொழுதிற்குமான உண்மையான சாதனா! அப்படி சாதனா அந்த ஆத்மாக்களை பரிவர்த்தனை செய்து விட வேண்டும். ஐயோ. ஐயோ என்பதைக் கொண்டு வரட்டும் மற்றும் ஆவரா! ஆஹா என்பதை எடுத்துச் செல்லட்டும். ஆஎரா!! அதிசயம் பரமாத்மா உங்களுடையது என்று சொல்லட்டும். எனவே இந்த சேவை செய்யுங்கள். அவ்வப்பொழுது எவ்வளவு அற்ப காலத்து சாதனங்களினால் பிரச்சனை அடைந்து கொண்டே இருக்கிறார்கள், அந்த மாதிரியான நேரத்தில் உங்களுடைய குஷி அவர்களுடைய ஆதாரம் ஆகி விடும். ஏனென்றால் நீங்கள் இருப்பதே குஷி நிறைந்தவர்களாகத்தான். குஷி நிறைந்தவர்களாக இருக்கிறீர்களா அல்லது இல்லையா? அரைகுறைவானவர்களாகவோ இல்லையே? உங்கள் மாதிரியான குஷி நிறைந்தவர்கள் முழு கல்பத்திலும் வேறு எந்த ஆத்மாக்களும் கிடையாது, இந்த அளவு போதை முகம் மற்றும் நடத்தை மூலம் அனுபவம் செய்வியுங்கள். முடியுமா? அல்லது செய்வித்துக் கொண்டும் இருக்கிறீர்களா?

பிராமண வாழ்க்கையில் ஒருவேளை குஷி இல்லை என்றால் பிராமணன் ஆகி என்ன செய்தீர்கள்? பிராமண வாழ்க்கை என்றால் குஷியான வாழ்க்கை. சில நேரம் பாப்தாதா பார்க்கிறார், சிலருடைய முகம் இருக்கிறதே, அது கொஞ்சம்... என்னவாகிறது? நீங்கள் மிக நன்றாகத் தெரிந்திருக்கிறீர்கள், அதனால் தான் சிரிக்கிறீர்கள். பாப்தாதாவிற்கு அந்த மாதிரி முகத்தைப் பார்த்து இரக்கமும் வருகிறது,

மேலும் கொஞ்சம் ஆச்சரியமும் ஏற்படுகிறது. என்னுடைய குழந்தைகள் மேலும் சோர்வாகவா, அப்படியும் இருக்க முடியுமா? இல்லை தான் இல்லையா? சோர்வடைவது என்றால் மாயாவிற்கு அடிமை ஆவது ஆனால் நீங்களோ மாஸ்டர் மாயாபதி ஆவீர்கள். உங்கள் எதிரில் மாயா என்ன. ஒரு எறும்பு கூட அல்ல, இறந்து போன எறும்பாக இருக்கிறது. தூரத்திலிருந்து உயிருள்ளதாகத் தென்படுகிறது ஆனால் இறந்ததாக இருக்கிறது. தூரத்திலிருந்தே பகுத்தறிவதற்கான சக்தி மட்டும் வேண்டும். எப்படி தந்தையின் ஞானத்தை விஸ்தாரமாக தெரிந்திருக்கிறீர்கள் இல்லையா? அதே போல மாயாவின் பல ரூபங்களின் ஞானத்தை, தெரிந்து கொண்டு நல்ல முறையில் தாரணை செய்து விடுங்கள். எப்படி சிறு குழந்தைகளை அவருடைய தாய் தந்தையர் பயமற்றவர்களாக ஆக்குவதற்காக பயமுறுத்துவார்கள். அதே போல் மாயாவும் பயமுறுத்த மட்டும் செய்கிறது. ஒன்றும் செய்யாது, வேண்டுமென்றே பயமுறுத்துவதற்காக செய்கிறது. அப்படி மாயாவும் தன்னுடையவர் ஆக்குவதற்காக மாறுவேடத்தை போடுகிறது. எப்பொழுது மாறுவேடத்தைப் போடுகிறது என்றால் நீங்களும் மாறுவேடம் அணிந்து அதைப் பகுத்தறிந்து விடுங்கள். பகுத்தறிய முடியவில்லை இல்லையா, அதனால் என்ன விளையாட்டு காண்பிக்கிறீர்கள்? ஐயோ, மாயா வந்து விட்டது என்று யுத்தம் செய்யத் தொடங்கி விடுகிறீர்கள். மேலும் யுத்தம் செய்வதினால் மனம், புத்தி களைப்படைந்து விடுகிறது. பின்பு களைப்பு ஏற்படுவதினால் என்ன கூறுகிறீர்கள்? மாயா மிக பலம் பொருந்தியது, மிகத் தீவிரமானது என்று கூறுகிறீர்கள் ஆனால் அது ஒன்றுமே இல்லை உங்களுடைய பலஹீனம் விதவிதமான மாயாவின் ரூபம் ஆகி விடுகிறது. அப்படி பாப்தாதா எப்பொழுதும் ஒவ்வொரு குழந்தையை குஷி நிறைந்த போதையில், குஷி நிறைந்த முகத்தில் மற்றும் குஷியின் டானிக்கினால் ஆரோக்கியமானவராக மற்றும் எப்பொழுதும் குஷியின் பொக்கிஷங்களினால் நிரம்பியவராக பார்க்க விரும்புகிறார். வாழ்க்கையில் தேவையாக என்ன இருக்கிறது? டானிக் மற்றும் பொக்கிஷம். வேறு என்ன வேண்டும்? அப்படி உங்களிடம் குஷியின் டானிக் இருக்கிறதா அல்லது கையிருப்பு எப்பொழுதாவது முடிவடைந்து விடுகிறதா? குஷியின் பொக்கிஷம் குறைவில்லாமல் இருக்கிறது. குறைவில்லாமல் இருக்கிறது தான் இல்லையா? மேலும் எவ்வளவு செலவழிப்பீர்களோ அவ்வளவு அதிகரிக்கும். ஒருவேளை

வேறு எந்த முயற்சியும் செய்யாவிட்டாலும் கூட ஒரு லட்சியத்தை மட்டும் வையுங்கள், என்ன ஆனாலும் சரி, தன்னுடைய மனநிலையின் மூலமாகவோ, வேறு எந்த ஆத்மாக்கள் மூலமாகவோ, இயற்கையின் மூலமாகவோ, வாயுமண்டலத்தின் மூலமாகவோ என்ன ஆனாலும் சரி, நான் குஷியை விடக்கூடாது. இதுவோ சகஜமாக முயற்சி செய்வது தான் இல்லையா அல்லது குஷி நழுவிச் சென்று விடுகிறதா? சுலபமா அல்லது எப்பொழுதாவது கடினமாக இருக்கிறதா? உறுதியான எண்ணத்தை வையுங்கள் மற்றும் விஷயங்களை மறந்து விடுங்கள். நான் குஷியாக இருக்க வேண்டும் என்ற இந்த ஒரு விஷயத்தை மட்டும் உறுதியாக வைத்துக் கொள்ளுங்கள். அப்படியானால் விஷயங்கள் எப்படி அனுபவம் ஆகும்? விளையாட்டாக மேலும் விளையாட்டைப் பார்ப்பதற்காக தன்னுடைய பார்வையாளரின் இருக்கையில் எப்பொழுதும் நிலைத்திருங்கள். யாராவது அவமானப்படுத்துபவர்களாக இருந்தாலும், உங்களை தொந்தரவு செய்து உங்களுடைய சாட்சி நிலையின் மதிப்பிலிருந்து கீழே இறக்கக்கூடியவர்களாக இருந்தாலும், நீங்கள் சாட்சி நிலையின் இருக்கையிலிருந்து கீழே வராதீர்கள், கீழே வந்து விடுகிறீர்கள். அப்பொழுது குஷி குறைந்து விடுகிறது.

பாப்தாதா ஏற்கனவே சாத்தி (துணைவன்) மற்றும் சாட்சி என்ற இரண்டு வார்த்தைகளைக் கூறியிருக்கிறார். எப்பொழுது பாப்தாதா துணையாக இருக்கிறார் என்றால் சாட்சி நிலையின் இருக்கை எப்பொழுதும் உறுதியாக இருக்கிறது. பாப்தாதா உடன் இருக்கிறார் என்று அனைவருமே கூறத்தான் செய்கிறீர்கள், பாப்தாதா உடன் இருக்கிறார் ஆனால் மாயாவின் பிரபாவமும் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. மேலும் பாப்தாதா உடன் இருக்கிறார். பாப்தாதா உடன் இருக்கிறார் என்று சொல்லிக் கொண்டும் இருக்கிறீர்கள். உடன் இருக்கிறார் ஆனால் உடன் இருப்பதை அந்த மாதிரி நேரத்தில் உபயோகம் செய்வதில்லை, விலகி விடுகிறீர்கள். எப்படி யாராவது உடன் இருக்கிறார் என்றால், ஏதாவது மிக அதிகமான அந்த மாதிரி வேலை இருக்கிறது அல்லது ஏதாவது அந்த மாதிரி விஷயம் ஏற்படுகிறது என்றால், தன்னுடன் இருப்பவர் உடன் இருக்கிறார் என்ற சிந்தனையே இருப்பதில்லை விஷயத்திலேயே மூழ்கி விடுவார்கள். அந்த மாதிரி உடன் இருக்கிறார் என்று இதை ஏற்றுக்கொள்ளவும் செய்கிறீர்கள். அனுபவமும் செய்கிறீர்கள். உங்களில் யாராவது தந்தை என்னுடன் இருப்பதில்லை

என்று சொல்பவர்கள் இருக்கிறீர்களா? யாரும் சொல்வதில்லை. என்னுடன் இருக்கிறார் என்று அனைவரும் கூறுகிறார்கள், உன்னுடன் இருக்கிறார் என்று இதையும் யாரும் கூறுவதில்லை ஒவ்வொருவரும் என்னுடன் இருக்கிறார் என்று கூறுகிறார்கள். என்னுடைய துணைவனாக இருக்கிறார். மனதால் கூறுகிறீர்களா அல்லது பொயினாலா? மனதால் கூறுகிறீர்களா?

பாப்தாதாவோ விளையாட்டைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். தந்தை உடன் அமர்ந்திருக்கிறார் மேலும் தன்னுடைய சூழ்நிலையில், அதை எதிர்கொள்வதில் இந்த அளவு மூழ்கிப்போய்விடுகிறார்கள் உடன் இருப்பது யார் என்று பார்ப்பதே இல்லை. அப்படி தந்தையும் என்ன செய்கிறார்? தந்தையும் துணைவனிலிருந்து பார்வையாளராகி விளையாட்டைப் பார்க்கிறார். அப்படியோ செய்யாமல் இருங்களேன். எப்பொழுது துணைவன் என்று கூறுகிறீர்களோ அப்போது துணையை வைத்துக் கொள்ளுங்களேன், ஏன் விலகிச் சென்று விடுகிறீர்கள். தந்தைக்குப் பிடிப்பதே இல்லை. ஒவ்வொரு குழந்தையும் சுயராஜ்ய அதிகாரியிலிருந்து உலக ராஜ்ய அதிகாரி ஆக வேண்டும் என்ற நல்விருப்பத்தைத் தான் தந்தை வைத்திருக்கிறார். நீங்கள் பிரஜைகளா என்ன? பிரஜையாகவோ ஆக வேண்டாம் இல்லையா? இராஜா, மகாராஜா, உலகராஜா தான் இல்லையா? நீங்கள் பிரஜைகளை உருவாக்குபவர்களேயன்றி பிரஜை ஆகுபவர்கள் அல்ல. இராஜா ஆகுபவர்கள், பிரஜையை உருவாக்குபவர்கள். அப்படியானால் இராஜா எங்கு அமர்கிறார். சிம்மாசனத்தில் அமர்கிறார் இல்லையா? எப்பொழுது நடைமுறையில் இராஜாவின் போதையில் இருக்கிறாரோ அப்போது ஆசனத்தில் அமர்கிறார் இல்லையா? அப்படி பார்வையாளர் என்ற நிலையின் ஆசனத்தை விடாதீர்கள். தனித்தனியாக என்ன முயற்சி செய்கிறீர்களோ அதில் களைப்படைந்து விடுகிறீர்கள். இன்று மனதால் செய்தீர்கள், நாளை வாய்மொழியால் செய்தீர்கள், உறவு நெருக்கத்தால் செய்தீர்கள் என்றால் களைப்படைந்து விடுகிறீர்கள். எனவே பார்வையாளர் ஆகி மற்றும் குஷி நிறைந்து ஆசனத்தில் அமர்ந்திருப்பவராக ஆக வேண்டும் என்ற ஒரே ஒரு முயற்சியை செய்யுங்கள். இந்த ஆசனத்தை ஒருபொழுதும் விடாதீர்கள். ஏதாவது இராஜா அந்த மாதிரி சீரியஸ் ஆகி ஆசனத்தில் அமர்ந்திருக்கிறார் என்றால் அமர்ந்திருப்பதோ ஆசனத்தில் தான் ஆனால் மிக

கோபத்தோடு. அதிகார நிலையோடு இருக்கிறார் என்றால் பார்க்க நன்றாக இருக்குமா? இவரோ இராஜா இல்லை என்று கூறுவார்கள். அப்படி நீங்கள் எப்பொழுதும் ஆசனதாரியாக இருக்கிறீர்கள் இல்லையா? அந்த இராஜாக்களோ சில நேரம் ஆசனத்தில் அமர்கிறார்கள், சில நேரம் அமர்வதில்லை ஆனால் பார்வையாளர் நிலையின் ஆசனம் அந்த மாதிரியானது அதில் ஒவ்வொரு காரியம் செய்து கொண்டும் ஆசனதாரியாக இருக்கலாம், இறங்க வேண்டியது இருக்காது. தூங்கினாலும் ஆசனதாரி, எழுந்தாலும், நடந்தாலும், உறவு நெருக்கத்தில் வரும்போதும் ஆசனதாரி ஆசனத்தில் அமரத் தெரியுமா அல்லது தெரியாதா? வழுக்கி விடுகிறதா? சாட்சி நிலையின் ஆசனத்தில் அமர்ந்திருக்கும் ஆத்மா ஒருபொழுதும் எந்த பிரச்சனையிலும் நிலை குலைந்து போக முடியாது. பிரச்சனை ஆசனத்தின் கீழே இருந்து விடும். நீங்கள் மேலே ஆசனதாரியாக இருப்பீர்கள். பிரச்சனை உங்களைப் பொறுத்தவரை தலையைத் தூக்க முடியாது. கீழே அமிழ்ந்து விடும். உங்களை தொந்தரவு செய்யாது. மேலும் யாரையாவது புதைத்து விட்டீர்கள் என்றால் உள்ளுக்குள்ளே இறந்து விடுவார் இல்லையா? எனவே பாப்தாதாவிற்கு அந்த நேரம் ஆச்சர்யம் ஏற்படுகிறது. நீங்கள் ஆச்சர்யப்படாதீர்கள். உங்கள் மேல் வேண்டுமானாலும் ஆச்சர்யப்படுங்கள். மற்றவர்கள் மேல் ஆச்சர்யப்படாதீர்கள். என்னுடைய குழந்தைகள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்று ஆச்சர்யம் ஏற்படுகிறது. ஆசனத்திலிருந்து இறங்குகிறார்கள். எப்பொழுது ஆசனதாரியாக இருப்பதற்கான சம்ஸ்காரத்தை இப்பொழுதிலிருந்தே நிரப்புவீர்களோ அப்பொழுது தான் உலக சிம்மாசனத்திலும் அமர்வீர்கள். இங்கு சதா கால ஆசனதாரியாக இல்லை என்றால் அங்கேயும் சதா அதாவது எவ்வளவு நேரம் முழுமையாக இருக்கிறதோ அவ்வளவு நேரம் அமர முடியாது. சம்ஸ்காரம் அனைத்தையும் இப்பொழுது நிரப்ப வேண்டும். பிறகு நிரப்பப்பட்ட அதே சம்ஸ்காரம் சத்யுகத்தில் காரியம் செய்யும். இராஜ சம்ஸ்காரத்தை இப்பொழுதிலிருந்தே நிரப்ப வேண்டும். இப்பொழுது கொஞ்சம் நேரம் தான் இருக்கிறது. இதற்குள் விநாசம் ஆகாது என்று அப்படி யோசிக்காதீர்கள். விநாஷம் திடீரென்று ஏற்படும். நீங்கள் தயாராக இருக்கிறீர்களா என்று கேட்டு விட்டு வராது. அனைத்தும் திடீரென்று நடக்க வேண்டும். நீங்கள் கூட பிராமணனாக எப்படி ஆனீர்கள்? திடீரென்று செய்தி கிடைத்தது, கண்காட்சி பார்த்தீர்கள்,

நெருக்கம் சம்மந்தம் ஏற்பட்டது. மாறி விட்டீர்கள். இந்த தேதியில் பிராமணன் ஆவேன் என்று இதற்கு முன்பு நினைத்திருந்தீர்களா? திடீரென்று நடந்தது தான் இல்லையா. அப்படி பரிவர்த்தனையும் திடீரென்று நடக்க வேண்டும். உங்களை மாயா முதலில் இன்னும் அலட்சியமானவராக ஆக்கும், நானோ இரண்டாயிரமாம் ஆண்டு நடக்கும் என்று நினைத்தேன், அதுவும் கடந்து சென்று விட்டது, இப்பொழுது கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொள்ளலாம் என்று யோசிப்பீர்கள். முதலில் மாயா தன்னுடைய மந்திரத்தை பரப்பும், அலட்சியமானவராக ஆக்கும். எந்த விஷயத்திலும், சேவையில், யோகாவில், தாரணையில், உறவு நெருக்கத்தில் இதுவோ நடக்கத்தான் செய்கிறது, இவையெல்லாம் இருக்கத்தான் செய்யும்... என்று அந்த மாதிரி முதலில் மாயா அலட்சியமானவராக ஆக்க முயற்சி செய்யும். பின்பு திடீரென்று விநாஷம் ஆகும் பிறகு பாப்தாதா கூறவே இல்லை. இந்த மாதிரியும் ஆக வேண்டுமா என்ன என்று கூறாதீர்கள். எனவே முன்பாகவே கூறிவிடுகிறோம். ஒருபொழுதும் எந்த விஷயத்திலும் அலட்சியமானவராக ஆகாதீர்கள். நான்கு பாடங்களிலும் மிக கவனமாக (alert அலர்ட்) இருக்க வேண்டும், இப்பொழுது கூட ஏதாவது நடந்து விட்டால் அலர்ட்டாக இருக்க வேண்டும். அந்த நேரம் பாப்தாதா இப்பொழுது வாருங்கள், துணையாக இருங்கள். கொஞ்சம் சக்தி கொடுங்கள் என்று கூறாதீர்கள். அந்த நேரம் கொடுக்க மாட்டோம். இப்பொழுது எவ்வளவு சக்தி வேண்டுமோ. எப்படி வேண்டுமோ அந்த அளவு சேமித்துக் கொள்ளுங்கள். அனைவருக்கும் முழுமையான அனுமதி இருக்கிறது. திறந்த பெட்டகம், எவ்வளவு சக்தி வேண்டுமோ, எந்த சக்தி வேண்டுமோ அதை எடுத்துக் கொள்ளுங்கள். பரீட்சை நேரத்தில் ஆசிரியர் மற்றும் தலைமை ஆசிரியர் உதவி செய்வதில்லை.

இரட்டை வெளிநாட்டினர் குழந்தைகளைப் பார்த்து தந்தைக்கு இரட்டை குஷி ஏற்படுகிறது. ஏன் ஏற்படுகிறது? ஏனென்றால் இரட்டை வெளிநாட்டினர்களுக்கு தன்னை மாற்றம் செய்வதில் இரட்டை உழைப்பு செய்ய வேண்டியதாக இருந்தது. எனவே பாப்தாதா எப்பொழுது இரட்டை வெளிநாட்டினர் குழந்தைகளைப் பார்க்கிறார் என்றால் ஆஹா! என்னுடைய இரட்டை வெளிநாட்டினர் குழந்தைகளே ஆஹா! என்று இரட்டை குஷி ஏற்படுகிறது. இரட்டை வெளிநாட்டினர் கையை உயர்த்துங்கள் (உலகின் அனேக தேசங்களிலிருந்து சுமார்

1000-சகோதர சகோதரிகள் சபையில் எழுந்தார்கள் ஆஹா மிக நல்லது. இரட்டை கைதட்டல் செய்யுங்கள். பாப்தாதா வெளிநாட்டின் சேவையின் செய்தியைக் கேட்டுக் கொண்டிருக்கிறார். மேலும் பார்த்துக் கொண்டும் இருக்கிறார். ரிசல்ட்டாக, சேவை செய்வதற்கான ஊக்கம் உற்சாகம் மிக நன்றாக இருக்கிறது என்று பார்த்தோம். கொஞ்சம் சேவையின் சிறிது சுமையை எப்பொழுதாவது தன் மேல் எடுத்துக் கொள்கிறீர்கள். சுமையைத் தூக்காதீர்கள். சுமையை தந்தையிடம் கொடுத்து விடுங்கள். தந்தையைப் பொருத்தவரை அந்த சுமை ஒன்றுமே இல்லை ஆனால் நீங்கள் சேவையின் சுமையை எடுத்துக் கொண்டீர்கள் என்றால் களைப்படைந்து விடுகிறீர்கள். சேவை மிக நன்றாக செய்கிறீர்கள். சேவை நேரத்தில் களைப்படைவதில்லை. அந்த நேரம் மிக நல்ல முகத்தோடு புகைப்படம் எடுக்க வேண்டும் என்பதாக இருக்கிறது, ஆனால் சிலர் அனைவருமில்லை சேவைக்குப் பிறகு கொஞ்சம் களைப்பின் அறிகுறி முகத்தில் தென்படுகிறது. சுமையை ஏன் தூக்குகிறீர்கள் என்று தந்தை கூறுகிறார். சுமையைத் தூக்குவது பிடித்திருக்கிறதா அல்லது பழக்கமாக இருக்கிறதா? சுமையை தூக்காதீர்கள். எப்பொழுது தந்தை உடன் இல்லையோ அப்பொழுது சுமையாக அனுபவம் ஆகிறது. நான் செய்தேன், நான் செய்கிறேன் என்றால் சுமையாகி விடுகிறது. தந்தை உடன் இருக்கிறார், தந்தையின் காரியம், தந்தை செய்வித்துக் கொண்டிருக்கிறார் என்றால் சுமை இருக்காது. லேசாக இருந்தீர்கள் என்றால் நடனமாடிக் கொண்டே இருப்பீர்கள். மிக நன்றாக நடனமாடுகிறீர்கள் இல்லையா? இரட்டை வெளிநாட்டினரின் நடனத்தை பார்த்தீர்கள் என்றால் மிக நன்றாக இருக்கும். தன்னை களைப்படையச் செய்வதில்லை. ஃபரிஷ்தா மாதிரி ஆடுவார்கள். பாரதவாசிகள் ஆடும்பொழுது கால்களை களைட்டடையச் செய்வர்கள், கைகளையும் களைப்படையச் செய்வார்கள் ஆனால் வெளிநாட்டினர் நடனத்தையும் லேசாக செய்வார்கள் என்றால் அப்படி சேவையும் ஒரு நடனம் என்று புரிந்து கொள்ளுங்கள், விளையாட்டு என்று புரிந்து கொள்ளுங்கள். களைப்படையாதீர்கள். பாப்தாதாவிற்கு அந்த உருவம் பிடிப்பதில்லை. சேவைக்கான ஊக்கம், உற்சாகம் நன்றாக இருக்கிறது. மேலும் இப்பொழுது சிறு சிறு விஷயங்களில் குழப்பம் வருவதற்கான வாய்ப்பும் மிகக் குறைவாக இருக்கிறது என்ற இந்த ரிசல்ட்டும் தந்தையிடம் இருக்கிறது. பெரும்பான்மையோர் நன்றாக இருக்கிறார்கள். மற்றபடி மிகக் குறைந்த எண்ணிக்கையில்

எப்பொழுதாவது கொஞ்சம் குழப்பத்தில் தென்படுகிறார்கள் ஆனால் தொடக்கத்தின் ரிசல்ட் மற்றும் இப்பொழுதைய ரிசல்ட்டில் மிக நல்ல வித்தியாசம் இருக்கிறது. அந்த மாதிரி தென்படுகிறது தான் இல்லையா. இப்பொழுது மிக மென்மையான தன்மையை வீட்டுக் கொண்டே செல்கிறார்கள். ரிசல்ட்டைப் பார்த்து பாப்தாதாவிற்கு குஷி ஏற்படுகிறது.

இப்பொழுது சிறு சிறு மைக்கையும் தயார் செய்து கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது சின்ன மைக்காக இருக்கிறது, ஆனால் சிறியதிலிருந்து பெரியது வரையிலும் வந்து விடுவார்கள். தொடக்கத்தில் இந்த வெளிநாட்டு டீச்சர்கள் வி.ஐ.பிக்களை சந்திப்பதே கடினம், வருவதையோ விட்டு விடுங்கள், சந்திப்பதே கடினம் என்று கூறினார்கள், பாப்தாதாவிற்கு நினைவிருக்கிறது. மேலும் இப்பொழுது சுலபமாகி விட்டது, ஏனென்றால் நீங்களும் வி.வி.வி.ஐ.பி ஆகி விட்டீர்கள் என்றால், உங்கள் எதிரில் வி.ஐ.பி ஒன்றுமே இல்லை. மொத்தமாக வெளிநாட்டின் ரிசல்ட் நன்றாக இருக்கிறது. சென்டர்களும் நன்றாக இருக்கின்றன, வளர்ச்சி அடைந்து கொண்டே இருக்கின்றன. பாரதத்தில் உதவிக்கரங்கள் இல்லை, இல்லையென்றால் பாரதத்திலும் சேவை நிலையங்கள் மிக அதிகமாக திறக்கப்பட்டு விடும். கரங்கள் இல்லை என்று ஒவ்வொரு ஜோனைச் சேர்ந்தவர்களும் கூறுகிறார்கள். எனவே இப்பொழுது இந்த வருடம் கரங்களை உருவாக்கும் சேவை செய்யுங்கள். கரங்கள் வேண்டும் என்று கேட்காதீர்கள், உருவாக்குங்கள் இன்னும் அதிக தான புண்ணியம் செய்யுங்கள்.

வெளிநாட்டில் மிக நல்ல முறை இருக்கிறது. எங்கு சென்டர் திறந்தாலும் அங்கேயே லௌகீக காரியமும் செய்கிறார்கள். சென்டரும் நடத்துகிறார்கள். எப்படி நடக்கும், யார் நடத்துவார் என்ற இந்தப் பிரச்சனை குறைவாக இருக்கிறது. நாம் லௌகீக காரியம் ஏன் செய்ய வேண்டும் என்று நீங்கள் (பாரதவாசிகள்) நினைக்காதீர்கள். இதுவோ உங்கள் சேவைக்கான சாதனம் ஆகும். லௌகீக காரியம் செய்யவில்லை, ஆனால் அலௌகீக காரியத்திற்குப் பொறுப்பாளர் ஆவதற்காக லௌக்க காரியம் செய்கிறீர்கள். எங்கு சென்றாலும் அங்கு சென்டர் திறப்பதற்கான ஊக்கம் இருக்கிறது தான் இல்லையா? எனவே லௌகீக காரியத்தை எதுவரை செய்வது என்று அப்படி நினைக்காதீர்கள். லௌகீக காரியத்தையும் அலௌகீக காரியத்தையும்

பொறுப்பாளர்/கருவியாகி செய்தீர்கள் என்றால் நீங்கள் சமர்ப்பணமானவர் என்பதாகும். லௌகீக தன்மை இல்லை, அலௌக்க தன்மை இருக்கிறது என்றால் லௌகீக காரியத்திலும் சமர்ப்பணம் ஆகியிருக்கிறீர்கள். லௌகீக காரியத்தை விட்டு விட்டு சமர்ப்பண விழா கொண்டாட வேண்டும் என்று அப்படியில்லை. அப்படி செய்வதினால் எப்படி வளர்ச்சி அடையும். எனவே லௌகீக காரியம் செய்து கொண்டே அலௌகீக காரியத்திற்குப் பொறுப்பாளர் ஆகிறீர்கள். அப்படி யார் பொறுப்பாளராகி வௌகீகத்தில் இருக்கிறேன் என்று நினைக்கிறார்களோ மற்றும் அலௌக்கத்தில் இருக்கிறார்களோ, அந்த மாதிரியான ஆத்மாக்களுக்கு இரண்டு மடங்கு என்ன, பல கோடி மடங்கு வாழ்த்துக்கள். நல்லது.

ஒரு நொடியில் முற்றிலும் தந்தைக்குச் சமமாக அசரீரி ஆக முடியுமா? அப்படியானால் ஒரு நொடியில் முற்றுப்புள்ளி இடுங்கள், மேலும் அசரி நிலையில் நிலைத்து விடுங்கள். பாப்தாதா மூன்று நிமிடங்கள் டிரில் செய்வித்தார். நல்லது. முழு நாளிலும் இதை அடிக்கடி பயிற்சி செய்து கொண்டே இருங்கள்.

நாலாபுறங்களிலுமுள்ள அனைத்து மாயாவை வென்ற, இயற்கையை வென்ற சாட்சி நிலையின் ஆசனத்தில் அமர்ந்திருக்கும் துணைவனின் துணையை எப்பொழுதும் அனுபவம் செய்யக்கூடிய எப்பொழுதும் திடத் தன்மையினால் வெற்றியை கழுத்து மாலையாக ஆக்கக்கூடிய எப்பொழுதும் தந்தைக்குச் சமமாக லேசாக இருக்கக்கூடிய. எப்பொழுதும் தன்னுடைய சக்தி மூலமாக உலகை துக்கம். அமைதியின்மையின் பலவரீனத்திலிருந்து விடுவிக்கக்கூடிய அந்த மாதிரி சுகத்தின் கடல், குஷியின் கடல் அன்பின் கடல், ஞானத்தின் கடல், தந்தைக்குச் சமமான குழந்தைகளுக்கு அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

வரதானம்: ஆசை என்றால் என்னவென்று தெரியாத நிலை மூலமாக மாஸ்டர் வள்ளலாக ஆகக்கூடிய ஞான சொரூப ஆத்மா ஆகுக!

யார் ஞான சொரூப ஆத்மாவோ அதாவது புத்திவானாக இருக்கிறாரோ, அவருக்கு கேட்காமலேயே அனைத்தும் கிடைக்கிறது. கேட்பதற்கான

எந்த அவசியமும் இருப்பதில்லை. எப்பொழுது தானாகவே அனைத்து பிராப்திகளும் ஆகி விடுகிறது என்றால் கேட்பதற்கான எண்ணமும் எழ முடியாது. அந்த மாதிரியான குழந்தைகள் ஆசை என்றால் என்னவென்று அறியாத நிலை உள்ளவராக ஆகி விடுகிறார்கள். அந்த மாதிரி ஞான சொரூப ஆத்மா கேட்பவரிலிருந்து வள்ளலின் குழந்தைகள் மாஸ்டர் வள்ளல் ஆகி விடுகிறார்கள். கேட்பது முடிவடைந்து விடுகிறது, இவ்வளவு பெரிய சுயமரியாதை கிடைத்து விடுகிறது, அதனால் பெயர், புகழ், மரியாதை வேண்டும் என்ற ஆசையும் இருப்பதில்லை.

சுலோகன்: தன்னுடைய மனம், புத்தி, சம்ஸ்காரங்கள் மேல் முழுமையான இராஜ்யம் செய்பவர் தான் சுயராஜ்ய அதிகாரி ஆவார்!

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 06.03.1997 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சிவஜெயந்தியின் பரிசு -கஷ்டப்பட்டு உழைப்பதை விட்டு விட்டு அன்பின் ஊஞ்சலில் ஆடுங்கள்!

இன்று சுயம் சிவதந்தை நாலாபுறங்களிலிருந்து வந்திருக்கும் தன்னுடைய குழந்தைகளோடு தன்னுடைய ஜெயந்தியைக் கொண்டாட வந்திருக்கிறார். குழந்தைகளுக்கு எவ்வளவு பாக்கியம் இருக்கிறது. சுயம் தந்தை சந்திப்பதற்காகவும் கொண்டாடுவதற்காகவும் வந்திருக்கிறார். உலகத்தினரோ வாருங்கள், எப்பொழுது வருவீர்கள், எந்த ரூபத்தில் வருவீர்கள் என்று அழைத்துக் கொண்டிருக்கிறார்கள். மேலும் ஆவாஹனம் செய்து கொண்டிருக்கிறார்கள் ஆனால் குழந்தைகள் உங்களுடன் கொண்டாடுவதற்காக சுயம் தந்தை வந்திருக்கிறார். அந்த மாதிரி விசித்திரமான காட்சியை ஒருபொழுதும் கனவில் கூட நினைத்திருக்க மாட்டீர்கள், ஆனால் இன்று நடைமுறையில் கொண்டாடுவதற்காக ஓடி ஓடி வந்து சேர்ந்து விட்டீர்கள், தந்தையோ நாலாபுறங்களின் குழந்தைகளைப் பார்த்து ஆஹா! சாலிகிராம் குழந்தைகளே ஆஹா என்று மகிழ்ச்சி அடைகிறார். ஆஹா ஸ்தூல உடல் தரித்த எதிர்காலத்தில் பரிஷ்தா ஆகி தேவதை ஆகும் குழந்தைகளே ஆஹா! பக்த குழந்தைகள் மற்றும் ஞானம் நிறைந்த குழந்தைகள் உங்களில் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது. பக்தர்கள் பாவனைக்கான அற்ப கால பலனை அடைந்து குஷி அடைந்து விடுவார்கள். ஆஹா! ஆஹா! என்ற பாடலை பாடிக் கொண்டே இருக்கிறார்கள். மேலும் ஞானம் நிறைந்த ஆத்மாக்கள் நீங்கள் சிறிதளவான அற்ப காலத்தின் பலனை அடைவதில்லை, ஆனால் தந்தையிடமிருந்து முழு ஆஸ்தியைப் பெற்று ஆஸ்திக்கு அதிகாரி ஆகி விடுகிறீர்கள். அப்படி பக்த ஆத்மாக்கள் மற்றும் ஞானம் நிறைந்த ஆத்மாக்கள் குழந்தைகளில் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது. பக்தர்களும் கொண்டாடுகிறார்கள், மேலும் நீங்களும்

கொண்டாடுவதற்கு வந்திருக்கிறீர்கள், ஆனால் கொண்டாடுவதில் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது. சிவஜெயந்தியைக் கொண்டாடுவதற்காக வந்திருக்கிறீர்கள் தான் இல்லையா? ஓடி வந்திருக்கிறீர்கள், சிலர் அமெரிக்காவிலிருந்து, சிலர் லண்டனிலிருந்து, சிலர் ஆஸ்திரிலேயாவிலிருந்து, சிலர் ஆசியா விலிருந்து எவ்வளவு அன்போடு வந்து சேர்ந்திருக்கிறீர்கள். அப்படி பாப்தாதா, தந்தையின் ஜெயந்தியுடன் சேர்த்து குழந்தைகளுக்கும் ஜெயந்தி என்றால் தந்தையுடன் சேர்த்து குழந்தைகளுக்கும் ஜெயந்திக்கான பாராட்டுக்கள் உரித்தாகுக. ஏனென்றால் தனியாக தந்தை இந்த சாகார உலகத்தில் குழந்தைகளின்றி எந்தவொரு காரியமும் செய்ய முடியாது. இந்த அளவு குழந்தைகள் மேல் அன்பு இருக்கிறது. தனியாக செய்யவே முடியாது. முதலில் குழந்தைகளை பொறுப்பாளர் ஆக்கி பின்பு முதுகெலும்பாகி, இணைந்திருந்து செய்விப்பவராகி பொறுப்பிலிருக்கும் குழந்தைகள் மூலமாக காரியம் செய்விக்கிறார். சாகார உலகத்தில் குழந்தைகள் இன்றி தனியாக எதையும் செய்ய விரும்புவதில்லை. நிராகார உலகத்திலோ குழந்தைகள் நீங்கள் தந்தையை தனியாக விட்டு விட்டுச் சென்று விடுகிறீர்கள். தந்தையின் கட்டளைப்படி தான் செல்கிறீர்கள் ஆனால் சாகார உலகத்தில் தந்தை குழந்தைகளின்றி இருக்க முடியாது. அவசியம் குழந்தைகள் உடன் இருக்க வேண்டும். உடன் இருப்போம், உடன் செல்வோம், நிராகார உலகம் வரை மட்டும் என்பது குழந்தைகளின் உறுதிமொழியாகவும் இருக்கிறது.

அனைத்துக் குழந்தைகளுக்கும் பாப்தாதாவின் ஜெயந்தியைக் கொண்டாடுவதில் எவ்வளவு ஊக்கம் உற்சாகம் இருக்கிறது என்று பாப்தாதா பார்த்துக் கொண்டிருந்தார். அப்படி தந்தையும் குழந்தைகளின் அன்பில் உங்களுடன் சேர்ந்து ஸ்தூல உடலைக் கடனாகப் பெற்று வந்து சேர்ந்து விட்டார். இதைத் தான் ஆன்மீக அன்பு என்று கூறுவது. குழந்தைகள் தந்தையின்றி இருக்க முடியாது, மேலும் தந்தையும் குழந்தைகளின்றி இருக்க முடியாது. அன்பும் மிக அதிகமாக இருக்கிறது. மேலும் விலகியிருப்பதும் மிக அதிகமாக இருக்கிறது. எனவே விலகியிருந்து அன்பாக இருப்பவர் என்பது தந்தையின் மகிமையாக இருக்கிறது. குழந்தைகள் தந்தைக்காக அனேக விதமான பரிசுகள் அது வாழ்த்து அட்டைகள் அல்லது வேறு ஏதாவது பொருள் இதயத்தின் ஊக்கம் நிறைந்த கடிதம், மேலும் என்னென்ன கொண்டு

வந்திருக்கிறீர்களோ அது தந்தையிடம் இன்றைய நாள் வதனத்தில் அனைத்து பரிசுகளின் மியூசியம் (அருங்காட்சியகம்) உருவாகியிருக்கிறது. உங்களுடைய மியூசியம் சேவைக்கானது. மேலும் தந்தையின் மியூசியம் அன்பிற்கானது. அப்படி அனைவரும் என்னென்ன கொண்டு வந்திருக்கிறீர்களோ அல்லது அனுப்பியிருந்தீர்களோ, அனைவரின் அன்பு நிறைந்த பரிசு இப்பொழுது கூட மியூசியமாக காட்சியளிக்கிறது. அதைப் பார்த்து பார்த்து தந்தை மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறார். பொருள் பெரியதல்ல ஆனால் அனைத்து பொருளிலும் அன்பு நிரம்பி விடுகிறது என்றால் அந்த சிறிய பொருள் கூட மிக மகத்துவம் நிறைந்ததாக ஆகி விடு கிறது. அப்படி பாப்தாதா பொருளைப் பார்ப்பதில்லை, காகிதத்தாலான வாழ்த்து அட்டையையோ அல்லது கடிதத்தையோ பார்ப்பதில்லை ஆனால் அதில் நிரம்பியிருக்கும் உள்ளப்பூர்வமான அன்பைப் பார்க்கிறார். எனவே தான் தந்தையிடம் அன்பின் மியூசியம் உருவாகியிருக்கிறது என்று கூறினோம். அந்த மாதிரியான மியூசியம் உங்கள் உலகில் இல்லை. அப்படிப்பட்ட மியூசியம் இருக்கிறதா? இல்லை. எப்பொழுது தந்தை ஒவ்வொரு அன்பின் பரிசை பார்க்கிறார் என்றால் பார்த்தவுடனேயே குழந்தைகளின் முகம் அதில் தென்படுகிறது. அந்த மாதிரி புகைப்படம் எடுக்கும் கருவி உங்களிடம் இருக்கிறதா? இல்லை. பரிசைப் பார்த்து தந்தைக்கு ஒரு நல்ல எண்ணம் உருவானது. அதைக்கூறலாமா? யோசிக்கக்கூடாது, செய்ய வேண்டியது இருக்கும். செய்வீர்களா? தயாராக இருக்கிறீர்களா?

பாப்தாதாவிற்கு இந்த எண்ணம் எழுந்தது, இந்த பரிசோ தந்தையிடம் வந்து சேர்ந்து விட்டது ஆனால் கூடவே பாப்தாதாவிற்கு இன்னுமொரு பரிசு தேவையாக இருக்கிறது. உங்கள் அனைவரின் பரிசு மிக நன்றாக இருக்கிறது ஆனால் பாப்தாதாவிற்கு இன்னும் ஒன்று வேண்டியதாக இருக்கிறது. அப்படியானால் பரிசைக் கொடுப்பீர்களா? பொதுவாக நினைவுச்சின்னமாக சிவஜெயந்தியைக் கொண்டாடுகிறீர்கள் என்றால், ஏதாவது அர்ப்பணம் செய்கிறீர்கள். பலியாகிறார்கள். எனவே பலியாகவோ அனைத்துக் குழந்தைகளும் ஆகி விட்டார்கள். பலியாகி விட்டீர்களா அல்லது இப்பொழுதும் கொஞ்சம் கொஞ்சம் உங்களிடம் பாதுகாப்பாக வைத்திருக்கிறீர்களா? இன்றைய நாளில் விரதமும் இருக்கிறார்கள், எனவே பாப்தாதாவிற்கு இந்த எண்ணமும் உருவானது.

குழந்தைகள் எப்பொழுதாவது இந்த முயற்சி செய்யும் வாழ்க்கையில் இருந்து கொண்டே கொஞ்சம் களைப்படைந்து விடுகிறார்கள், மிகக் கடினமானது என்று உணருகிறார்கள் அல்லது நிரந்தரமாக யோகா செய்வது கடினம் என்று அனுபவம் செய்கிறார்கள். நிறைவேறிவிடும் என்றோ நினைக்கிறார்கள்.. தந்தைக்கு, நீங்கள் கவலைப்படாதீர்கள், ஆகி விடும் என்று ஆறுதல் கொடுக்கிறார்கள் ஆனால் பாப்தாதாவிற்கு குழந்தைகளின் களைப்பு மற்றும் தனிமை அல்லது சில நேரம், யாராவது என்னுடைய பாக்கியத்தில் இருக்கிறதா? அல்லது இல்லையா? தெரியவில்லை என்று கொஞ்சம் மனமுடைந்து போகிறார்கள். சில நேரம் அப்படி யோசிக்கிறார்கள் என்றால் இது தந்தைக்குப் பிடிப்பதில்லை. அனைத்தையும் விட அதிகமாக குழந்தைகள் கஷ்டப்பட்டு உழைப்பது பிடிப்பதில்லை. இவரோ எஜமானன், ஆனால் கடின உழைப்பா? தந்தைக்கும் குழந்தையானவர் எஜமானனாக இருப்பவர் பகவானுக்கும் எஜமானன் மேலும் பிறகு கடின உழைப்பு செய்வது. எனவே நன்றாக இருப்பதில்லை. கேட்பதற்கே பிடிப்பதில்லை. அப்படி குழந்தைகள் பிறந்தநாள் பரிசையோ அவசியம் கொடுக்கிறார்கள் என்றால் இன்றைய நாளில் அனைத்துக் குழந்தைகளுக்கும் இதை பரிசு ரூபத்தில் ஏன் கொடுக்கக்கூடாது என்று எண்ணம் வந்தது. ஸ்தூலமான பரிசு என்ன கொடுத்தீர்களோ அதுவோ வதனத்தில் வெளிப்பட்டது ஆனால் நிராகார உலகத்திலோ இந்தப் பரிசு வெளிப்படாது. அங்கோ எண்ணத்தின் பரிசு சென்றடைகிறது. அப்படி இன்றைய நாளில் அனைத்துக் குழந்தைகளிடமிருந்தும் பரிசைப் பெற வேண்டும் என்று தந்தைக்கு எண்ணம் வந்தது. அப்படியானால் பரிசு கொடுப்பீர்களா அல்லது கொடுத்த பிறகு அங்கே சென்ற பிறகு திருப்பி எடுத்துக் கொள்வீர்களா? மதுபன்னினுடையது மதுபன்னில் இருக்கிறது, மேலும் தன்னுடைய தேசத்தில் தன்னுடைய தேசம் என்று அப்படி சொல்ல மாட்டீர்களே? குழந்தைகள் மிக சாதுர்யமானவர்களாக ஆகி விட்டார்கள். நாங்களோ திரும்பி வர வேண்டும் என்று விரும்பவில்லை, ஆனால் வந்து விடுகிறது என்று தந்தைக்குக் கூறுகிறார்கள். வந்து விடுகிறது என்றால் நீங்கள் ஏன் ஏற்றுக்கொள்கிறீர்கள். வந்து விடுகிறது என்பது சரி தான், ஆனால் ஏதாவது ஒரு பொருள் உங்களுக்கு பிடித்தமில்லை மற்றும் யாராவது வலுக்கட்டாயமாக கொடுத்து விட்டார் என்றால் நீங்கள் வாங்குவீர்களா? அல்லது திருப்பிக் கொடுத்து விடுவீர்களா? திருப்பிக்

கொடுத்து விடுவீர்கள் தான் இல்லையா? அப்படி ஏன் ஏற்றுக் கொள்கிறீர்கள்? மாயாவோ திருப்பிக் கொண்டு வரும் ஆனால் அதை நீங்கள் ஏற்றுக் கொள்ளாதீர்கள். அந்த மாதிரி தைரியம் இருக்கிறதா? யோசித்துக் கூறுங்கள். பிறகு அங்கே சென்ற பிறகு பாபா என்ன செய்வது, விரும்பவில்லை ஆனால் வந்து விட்டது என்று கூறாதீர்கள். அந்த மாதிரி கடிதத்தையோ எழுத மாட்டீர்களே? தைரியம் உங்களுடையது மற்றும் உதவி தந்தையினுடையது. தைரியத்தைக் குறைக்காதீர்கள், பின்பு பாருங்கள் தந்தையின் உதவி கிடைக்கிறதா, இல்லையா என்று. தைரியம் வைப்பதினால் தந்தையின் உதவி சரியான நேரத்தில் கிடைக்கிறது என்று அனைவருக்கும் அனுபவமும் இருக்கிறது. மேலும் கண்டிப்பாக கிடைக்கும். இதற்கான உத்திரவாதமும் இருக்கிறது. தைரியம் உங்களுடையது உதவி தந்தையினுடையது. அப்படி எண்ணமாக எது இருந்தது? தைரியம் இருக்கிறதா அல்லது இல்லையா என்று முகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். நீங்கள் தைரியம் உள்ளவர்கள் தான். ஏனென்றால் ஒருவேளை தைரியம் இல்லை என்றால் தந்தையின் குழந்தையாக ஆகியே இருக்க முடியாது. ஆகி விட்டீர்கள் இதன் மூலமாக தைரியம் இருக்கிறது என்று நிரூபணம் ஆகிறது. தேவையான நேரத்தில் கொஞ்சம் தைரியத்தை மறந்து விடுகிறீர்கள். தைரியம் உள்ளவர்கள் தான் நீங்கள் கொஞ்சம் பொறுமையாக இருங்கள். தைரியம் இருக்கிறதா அல்லது இல்லையா? என்று அனைவரின் முகத்தைப் பார்க்கிறார். தைரியம் உள்ளவர்கள் தான், ஏனென்றால் தைரியம் இல்லை என்றால் தந்தையின் குழந்தையாக ஆவதே இல்லை. ஆகி விட்டீர்கள் இதன் மூலம் தைரியம் இருக்கிறது என்று நிரூபணம் ஆகிறது. அந்த நேரத்தில் தைரியம் கொஞ்சம் மறந்து விடுகிறது என்று இந்த சின்ன விஷயத்தைக் கூறுகிறீர்கள். எல்லாமே நடந்து விடுகிறது தான் இல்லையா? அதன் பிறகு தைரியம் மற்றும் உதவி நினைவு வருகிறது. தேவையான நேரத்தில் அனைத்து சக்திகளை நேரத்திற்குத் தகுந்தாற்போல் உபயோகம் செய்வது என்ற இதைத் தான் ஞானம் நிறைந்த. யோகம் நிறைந்த ஆத்மா என்று கூறுவது,

பாப்தாதாவிற்கு ஒரு விஷயத்தில் மிகுந்த குஷி இருக்கிறது. அது என்ன விஷயம் என்று தெரியுமா? கூறுங்கள் (அனேகர் கூறினார்கள்). அனைவருமே சரியாகத் தான் சொல்கிறீர்கள் ஆனால் தந்தையின்

எண்ணம் வேறு ஆகும். நீங்கள் மிக ஆழமானதைக் கூறுகிறீர்கள், ஞானம் நிறைந்தவர்களாக ஆகி விட்டீர்கள் தான் இல்லையா?

அனேக குழந்தைகள் கடிதம் மற்றும் சிறு துண்டு காகிதத்தில் நான் 108-ல் வருவேன் என்று எழுதியிருக்கிறார்கள். அதிக துண்டுக் காகிதங்கள் வந்திருக்கின்றன என்ற இந்த விஷயத்தில் பாப்தாதா குஷி அடைந்து கொண்டிருந்தார். எப்பொழுது இத்தனை பேர் 108-ல் வருவார்கள் என்றால் 108-ன் மாலையை ஐந்து மாலையாக கட்ட வேண்டியதாக இருக்குமே என்று பாப்தாதா யோசித்தார். அப்படி 5,6,7,8-கயிறுகளின் மாலை உருவாக்கலாம் இல்லையா? யார் யார் நினைத்தீர்களோ, லட்சியம் வைத்தீர்களோ அதுவோ மிகவும் நன்று ஆனால் இடையிடையே இந்த எண்ணத்தை உறுதியாக மட்டும் ஆக்கிக் கொண்டே இருங்கள். தொய்வாக விட்டு விடாதீர்கள். மாயா வந்து விட்டது, இப்பொழுது நான் 108-ல் வருவேனா அல்லது இல்லையா என்று அப்படி சொல்ல மாட்டீர்கள் தானே? தெரியவில்லை, தெரியவில்லை என்று கூறாதீர்கள். கண்டிப்பாக வரத்தான் வேண்டும் என்று தெரிந்து விட்டீர்கள். உறுதித்தன்மையின் முத்திரையை போட்டுக் கொண்டே இருங்கள். ஆம். நான் கண்டிப்பாக வருவேன், என்ன ஆனாலும் சரி எனக்கு அசைக்க முடியாத நிச்சயம் இருக்கிறது. அந்த மாதிரி உறுதியான இடைவிடாத நிச்சயம் இருக்கிறதா? அப்படியானால் அசைப்பதற்காக மாயாவை அனுப்பலாமா? வேண்டாமா? பயப்படுகிறீர்களா? மாயா உங்களைக் கண்டு பயப்படுகிறதா அல்லது நீங்கள் மாயாவைக் கண்டு பயப்படுகிறீர்களா? மாயா தன்னுடைய வாசலை பார்க்கிறது, இங்கு திறந்திருக்கிறது. இங்கு திறந்திருக்கிறது என்று தேடிக் கொண்டே இருக்கிறது. நீங்கள் ஏன் பயப்படுகிறீர்கள்? மாயா ஒன்றுமே இல்லை. ஒன்றுமே இல்லை என்று கூறினீர்கள் என்றால் ஒன்றுமே இல்லாமல் ஆகி விடும். வர முடியாது, வர முடியாது என்றால் வர முடியாது தான். என்ன செய்வதுட? என்றால் மாயாவின் வாசலைத் திறந்தீர்கள், வரவழைத்தீர்கள். அப்படி அனேக குழந்தைகள் 108-ல் வருவதற்கான உறுதி கொடுத்திருக்கிறார்கள் என்பது நல்ல விஷயம் ஆகும். உறுதி அளித்தீர்கள் தான் இல்லையா? யாரெல்லாம் நான் 108-ல் வருவேன் என்று கூறினீர்களோ அவர்கள் கையை உயர்வாக உயர்த்துங்கள். மிக நன்றாக உடற்பயிற்சி செய்யுங்கள். மிக நல்லது, உங்களுக்கு வாழ்த்துக்கள். 108-ல் எத்தனை

பேர் வருவார்கள், நான் எங்கே வருவேன் என்று இப்படி யோசிக்காதீர்கள். தாதி வருவார்கள், தீதி வருவார்கள், பிறகு தாதாக்களும் வருவார்கள், அட்வான்ஸ் பார்ட்டியைச் சேர்ந்தவர்களும் வருவார்கள் என்று முதலில் எண்ண ஆரம்பித்து விடுகிறார்கள். என்னுடைய நம்பர் வருமா அல்லது இல்லையா என்பது தெரியவில்லை, பாப்தாதா 8-அல்லது 10-கயிறுகளின் உருவாக்கி விடலாம் என்று பாப்தாதா கூறினார். நீங்கள் கவலைப்படாதீர்கள். மற்றவர்களைப் பார்க்காதீர்கள். உங்களுக்கு நம்பர் கிடைத்தே விடும். இது தந்தையின் உத்திரவாதம் ஆகும். நீங்கள் விலகிச் செல்லாதீர்கள். மாலையின் இடையே நூலில் காலி இடம் விடாதீர்கள். இடையிலிருந்து ஒரு மணி உடைந்து விட்டது. மாலையிலிருந்து விழுந்து விட்டது என்றால் மாலை பார்க்க நன்றாக இருக்காது. இதை மட்டும் செய்யாதீர்கள். மற்றபடி நீங்கள் அவசியம் வருவீர்கள் என்பது பாபாவின் உத்திரவாதம் ஆகும்.

இன்றோ கொண்டாட வந்திருக்கிறோம், முரளி கூறுவதற்காக வரவில்லை. எனவே வேறு யாரெல்லாம் இருக்கிறீர்களோ அவர்களும் மாலையில் வந்து விடுங்கள், 108-ன் மாலையில் அனைவரும் வரவேற்கப்படுகிறீர்கள். இதுவோ பக்தி மார்க்கத்தைச் சேர்ந்தவர்கள் 108-ன் மாலை உருவாக்கி விட்டார்கள். பாப்தாதாவோ எவ்வளவு வேண்டுமானாலும் அதிகரிக்க முடியும். இதில் பரிசை மட்டும் தந்தை அவசியம் பெற்றுக் கொள்வார். பரிசை விட மாட்டார். மிகச் சிறிய பரிசானாலும் சரி, ஏனென்றால் தந்தை அனைத்து குழந்தைகளின் 6-மாதத்தின் சார்ட்டைப் பார்த்தார். அப்படி என்ன பார்த்தார்? ஒருவேளை ஏதாவது ஒரு குழந்தை கொஞ்சமாவது நிலையில் மேலே கீழே செல்கிறார். அசையாத நிலையில் இருந்து குழப்பத்தில் வருகிறார் என்றால் அதற்கான காரணம் முக்கியமாக மூன்று விஷயங்கள் மட்டும் இருக்கிறது. அதே மூன்று விஷயங்கள், விதவிதமான பிரச்சனை அல்லது சூழ்நிலையாகி வருகின்றன. அந்த மூன்று விஷயங்கள் என்ன?

தீய மற்றும் வீணாக யோசிப்பது. தீய மற்றும் வீணாதைப் பேசுவது மேலும் தீய மற்றும் வீணானது செய்வது. யோசிப்பது, பேசுவது மற்றும் செய்வது இதில் நேரம் அதிகமாக வீணாகிறது. இப்பொழுது பாவம்

குறைவாக நடக்கிறது. வீணானவை அதிகமாக இருக்கிறது. வீணானதின் புயல் அசைத்து விடுகிறது. மேலும் முதலில் சிந்தனையில் வருகிறது பிறகு வார்த்தையில் வருகிறது பின்பு காரியத்தில் வருகிறது. மேலும் ரிசல்ட்டில் பார்த்தோம் என்றால் சிலருடைய வார்த்தை காரியத்தில் வருவதில்லை ஆனால் சிந்தனையில் மிக அதிகமாக வருகிறது. எந்த நேரம் உருவாக்குவதற்காக எடுக்குமோ அது யோசிப்பதில் கடந்து விடுகிறது. அப்படி பாப்தாதா இன்று இந்த மூன்று விஷயங்கள் யோசிப்பது பேசுவது மற்றும் செய்வது என்ற இந்தப் பரிசை அனைவரிடமிருந்தும் பெற விரும்புகிறார். அதற்கு தயாராக இருக்கிறீர்களா? யார் கொடுத்து விட்டார்களோ அவர்கள் கையை உயர்த்துங்கள். உயர்த்திய கையை வீடியோவாக மிக நல்ல முறையில் ஒவ்வொரு பக்கத்திலிருந்தும் எடுங்கள். கையை மிக உயரமாக உயர்த்துங்கள். உடற்பயிற்சி செய்வதில்லை அதனால் பருமனாகி விட்டீர்கள். நல்லது. அனைவருமே இதைக் கொடுத்து விட்டீர்கள். திருப்பி எடுத்துக் கொள்ளாதீர்கள். வாயிலிருந்து வந்து விட்டது, என்ன செய்வது என்று இதைக் கூறாதீர்கள். வாய் மேல் உறுதியான எண்ணம் என்ற பொத்தானை போட்டு விடுங்கள். உறுதியான எண்ணம் என்ற பொத்தான் இருக்கிறது தான் இல்லையா? ஏனென்றால் பாப்தாதாவிற்கு குழந்தைகள் மேல் அன்பு இருக்கிறது இல்லையா? அப்படி அன்பின் அடையாளம் அன்பிற்குரியவர்களின் கஷ்டப்படுவது பார்க்க முடியாது. பாப்தாதா சாகாரத்தில் சென்று இவர்களுக்கு கொஞ்சம் சொல்ல வேண்டும் என்று அந்த நேரம் பாப்தாதா இதைத் தான் நினைக்கிறார் ஆனால் இப்பொழுதோ ஆகாரியாகவும், நிராகாரியாகவும் இருக்கிறார். அனைவரும் முற்றிலும் கடின உழைப்பிலிருந்து விடுபட்டு அன்பின் ஊஞ்சலில் ஆடிக் கொண்டே இருங்கள். எப்பொழுது அன்பின் ஊஞ்சலில் ஆடிக் கொண்டே இருப்பீர்களோ அப்பொழுது கஷ்டப்பட்டு உழைப்பது முடிவடைந்து விடும். கஷ்டப்பட்டு உழைப்பதை அகற்ற வேண்டும். அகற்ற வேண்டும் என்று யோசிக்காதீர்கள். அன்பு என்ற ஊஞ்சலில் மட்டும் அமர்ந்து விடுங்கள், கடின உழைப்பு தானாகவே விடுபட்டு விடும். விடுவதற்கான முயற்சி செய்யாதீர்கள். அமருவதற்கும், ஊஞ்சலில் ஆடுவதற்கும் முயற்சி செய்யுங்கள்.

சிவஜெயந்தி என்றால் குழந்தைகளின் கடின உழைப்பிற்கான முடிவின் ஜெயந்தி ஆகும். சரி தான் இல்லையா? தந்தைக்கும் குழந்தைகள் மேல் நம்பிக்கை இருக்கிறது. எப்படி சில குழந்தைகள் விலகிச் சென்று விடுகிறார்கள், அது தந்தைக்கே தெரிய வருவதில்லை, குடைநிழலின் கீழே அமர்ந்து விடுங்கள். பிராமண வாழ்க்கையின் அர்த்தமே ஊஞ்சலில் ஆடுவது, மாயாவில் ஆடுவதல்ல. மாயாவும் ஊஞ்சலில் ஆட வைக்கிறது. அமிர்தவேளையில் பாருங்கள். மாயா அந்த மாதிரி ஆட்டுகிறது அதன் காரணமாக சூட்சும வதனத்திற்கு வருவதற்குப் பதிலாக, நிராகார உலகத்திற்கு வருவதற்குப் பதிலாக நித்திரை லோகத்தில் சென்று விடுகிறார்கள். யோகா டபுள் லைட் ஆக்குகிறது என்று கூறுகிறார்கள் ஆனால் தலை பாரமாக ஆகி விடுகிறது. அப்படி மாயாவும் ஊஞ்சலில் ஆட்டுகிறது ஆனால் மாயாவின் ஊஞ்சலில் ஆடாதீர்கள். அரைக்கல்பமோ மாயாவின் ஊஞ்சலில் மிக அதிகமாக ஆடிப் பார்த்திருக்கிறீர்கள் தான் இல்லையா, என்ன கிடைத்தது? ஏதாவது கிடைத்ததா? களைப்படைந்து விட்டீர்கள் இல்லையா. இப்பொழுது அதீந்திரிய சுகத்தின் ஊஞ்சலில் ஆடுங்கள். குஷியின் ஊஞ்சலில் ஆடுங்கள். சக்திகளின் பிராப்திகளின் ஊஞ்சலில் ஆடுங்கள். எத்தனை ஊஞ்சல்கள் உங்களுக்குக் கிடைத்திருக்கிறது, அது இங்கே உள்ள இளவரசன், இளவரசிகளுக்கு கூட இருக்காது. எந்த ஊஞ்சலில் ஆட விரும்புகிறீர்களோ அதில் ஆடுங்கள். இந்த நேரம் அன்பின் ஊஞ்சலில் ஆடுங்கள். அடுத்த நேரம் ஆனந்தத்தின் ஊஞ்சலில் ஆடுங்கள், மேலும் மற்ற நேரம் ஞானத்தின் ஊஞ்சலில் ஆடுங்கள். எத்தனை ஊஞ்சல்கள் இருக்கின்றன. எண்ண முடியாது. அப்படி ஊஞ்சலில் இருந்து கீழே இறங்காதீர்கள். யார் செல்லக் குழந்தைகளாக இருக்கிறார்கள் என்றால் தாய் தந்தை குழந்தையின் கால் மண்ணில் பட வேண்டாம் என்று தான் விரும்புவார்கள் அல்லது மடியில் இருக்க வேண்டும் அல்லது ஊஞ்சலில் இருக்க வேண்டும் அல்லது தொட்டிலில் இருக்க வேண்டும். மண்ணில் கால் பட வேண்டாம் என்று கூறுவார்கள். அந்த மாதிரி இருக்கிறது தான் இல்லையா. அப்படி நீங்கள் எவ்வளவு செல்லமானவர்கள், உங்களை மாதிரி செல்லமானவர்கள் வேறு யாராவது இருக்கிறார்களா? பரமாத்மாவின் செல்லக் குழந்தைகள் ஒருவேளை தேக உணர்வில் வருகிறார்கள் என்றால். தேகம் என்றால் என்ன? மண் தான் இல்லையா. மண். மண்ணோடு கலந்து விடும். அப்படி இது மண் தான் இல்லையா, மண்ணில் கால் ஏன் வைக்கிறீர்கள்?

மண் பிடித்திருக்கிறதா? சில குழந்தைகளுக்கு மண் பிடித்திருக்கிறது. சிலர் மண்ணை சாப்பிடவும் செய்கிறார்கள் ஆனால் நீங்கள் சாப்பிடாதீர்கள். காலையும் வைக்காதீர்கள். எண்ணம் வருவது என்றால் கால் வைப்பது. எண்ணத்தில் கூட தேக உணர்வு வர வேண்டாம். நான் எவ்வளவு செல்லமானவன், யாருடைய செல்லமானவன் என்று யோசியுங்கள், நினைவு வைத்துக் கொள்ளுங்கள். சத்யுகத்தில் கூட பரமாத்மாவின் செல்லமானவர்கள் இருப்பதில்லை. தேவ ஆத்மாக்களின் செல்லமானவர்கள் இருப்பார்கள் ஆனால் இந்த நேரம் பரமாத்மா தந்தையின் செல்லமானவர்கள் நீங்கள். அப்படி குழந்தைகள் தைரியம் என்ற கையை உயர்த்தி பரிசைக் கொடுத்து விட்டார்கள். எனவே பாப்தாதா அதற்கு நன்றி கூறுகிறார். நல்லது.

நல்லது இன்று இரட்டை வெளிநாட்டினருக்கும் விசேஷ தினமாகும். இரட்டை வெளிநாட்டினரை கையை உயர்த்தச் சொல்லி பாப்தாதா சந்தித்தார். … …

பின்பு பாப்தாதா டிரில் செய்வித்தார்! உங்கள் அனைவருடைய ஸ்திதியின் நினைவுச்சின்னம்தான் அச்சல்கர். … …

கர்த்மாதீத் என்றால் ஒவ்வொரு பாடத்திலும் முழுமையாக தேர்ச்சி பெறுவது (100% full pass); 90%, 75% என இப்படி இல்லை. … …

முன்பும் கூறியிருந்தோம் -எல்லா சக்திகளையும் தந்தை கொடுத்து விட்டார், நீங்களும் எடுத்துக் கொண்டு விட்டீர்கள் ஆனால் தக்க சமயத்தில் உபயோகத்திற்கு வராமல், இருப்பிலேயே (stock) இருந்து விடுகிறது. இந்த அனுபவம் பெற தினசரி சின்னச்சின்ன காரியங்களில் நடைமுறையில் உபயோகப்படுத்துங்கள். … …

நல்லது. எஜமானர்கள் அல்லவா! எனவே 'மாலேகம் ஸலாம்' என தந்தை கூறுகிறார் -எஜமானர்களுக்கு வணக்கம்! நல்லது.

(66-தேசங்களிலிருந்து பாபாவின் குழந்தைகள் வந்துள்ளனர்). 66-தேசத்து குழந்தைகளுக்கும் கோடி மடங்கு வாழ்த்துக்கள். இறுதியில் உலகில் நீங்கள் தான் நாலா புறமும் பரவி விடுவீர்கள். எங்கு பார்த்தாலும் வெள்ளை ஆடை ஃபரிஷ்தாக்களே தெரியும். நல்லது.

முதன் முறையாக வந்திருப்பவர்கள் கை உயர்த்துங்கள். நிறைய பேர் வந்துள்ளனர்.... அலௌகீக பிறந்த நாளுக்கான கோடி மடங்கு வாழ்த்துக்கள், பாராட்டுக்கள்! நல்லது.

(இன்று சிவபாபாவின் பிறந்த நாளன்று பிரம்மாபாபா என்ன பரிசு வழங்கினார்?) பிரம்மாபாபாவோ அனைத்தையும் முன்பே கொடுத்து விட்டார், ஒன்றுமே வைத்துக் கொள்ளவில்லை. எப்போது சம்பூர்ணமானாரோ, அப்போது அனைத்தையும் தந்து விட்டார். அவரிடம் ஒன்றுமே இல்லை.... ... ...

பின்னர் தாதிகள், மூத்த சகோதரர்களைச் சந்தித்தார்.... ...
(விநாசத்திற்கு முன்பாக ஒவ்வொரு கண்டத்திலும் ஒவ்வொரு முறை பாபா வந்தார்). பாருங்கள், டிராமா! தந்தை லண்டனிலும் வந்தார் ஆனால் மதுபன் உடைய மகிமையோ மதுபனுக்குத்தான்! ... ... ...

**பாப்தாதா தனது திருக்கரங்களால் கொடி ஏற்றி, அசைத்து, அனைவருக்கும் சிவ ஜெயந்தியின் பாராட்டுகளை அளித்தார்.**

எல்லாக் குழந்தைகளுமே சிவதந்தையின் கொடி ஏற்றினீர்கள். எவ்வாறு இந்த கூடத்தில் கொடி ஏற்றினீர்களோ, அவ்வாறு முழு உலகம் என்ற கூடத்தில் இந்த நியாரா-பியாரா கொடியை சீக்கிரமாகவே ஏற்றுவீர்கள். எல்லோருடைய வாயில் இருந்தும் உள்ளத்தில் இருந்தும் இந்தப் பாடல் ஒலிக்கும் -வந்துவிட்டார், வந்துவிட்டார் நமது தந்தை வந்துவிட்டார்! எல்லோரும் உளப்பூர்வமாக கை தட்டுவார்கள். எனவே இந்தக் கொடியோ நிமித்தமாக மட்டுமே உள்ளது ஆனால் மிகவும் உயந்ததிலும் உயர்ந்த தந்தை வந்துவிட்டார், வந்துவிட்டார், யார் வர வேண்டுமா அவரே வந்து விட்டார். நம் அனைவரையும் அழைத்துச் செல்பவர் வந்துவிட்டார், இந்த மனதின் கொடியை உலகத்தில் ஏற்றுவீர்கள். நீங்கள் அனைவருமே பார்ப்பீர்கள் மற்றும் உங்கள் அனைவரையும் வெள்ளை வெளேரென்ற ஃபரிஷ்தா ரூபத்தில் பார்ப்பார்கள். தந்தையுடன் சேர்த்து உங்கள் அனைவருக்கும் கூட (மகிமையின்) பாடல் பாடுவார்கள் -எங்களது வணக்கத்திற்குரிய தேவி தேவதைகள் வந்துள்ளனர், வந்துள்ளனர்! என. கொஞ்சம் சீக்கிரம் தயாராகுங்கள், மிக விரைவில் நீங்கள் கொடி கட்டிப் பறக்க விடுவீர்கள். அப்போதுதான் அனைவரும் பிரச்சனையிலிருந்து விடுபடுவார்கள்.

நல்லது. அனைவருக்கும் நியாரா-பியாரா'வான கொடிக்கான வாழ்த்துக்கள்!

நாலாபுறங்களிலுமுள்ள மிக மிக பாக்கியம் நிறைந்த குழந்தைகள் யார் சுயம் சிவ தந்தையோடு சிவஜெயந்தி கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள், அந்த மாதிரி பல கோடி மடங்கு என்ன, ஆனால் எவ்வளவு தான் அதிகத்திலும் அதிகம் என்று கூறினாலும் அதுவும் குறைவு தான் அந்த மாதிரி மகான் பாக்கியம் நிறைந்த ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் தந்தையின் கட்டளைப்படி ஒவ்வொரு அடி எடுத்து வைக்கக்கூடிய தந்தையின் அன்பிற்குரிய மற்றும் நெருக்கமான ஆத்மாக்களுக்கு,எப்பொழுதும் எஜமானத்தன்மையின் ஆடாத ஆசனத்தில் அமர்ந்திருப்பவரிலிருந்து எதிர்காலத்தில் சிம்மாசனதாரியாக ஆகும் உயர்ந்த ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் தந்தையுடன் சேர்ந்து மகிழ்ச்சியோடு அன்பின் ஊஞ்சலில் ஆடிக் கொண்டே உடன் செல்லக்கூடிய அந்த மாதிரி பாப்தாதாவின் துணையாக இருக்கும் குழந்தைகளுக்கு, பாப்தாதாவினுடைய பிறந்த நாள் வாழ்த்துக்கள் மற்றும் அன்பு நினைவுகளை ஏற்றுக்கொள்ளுங்கள். அனைத்து எஜமான குழந்தைகளுக்கு தந்தையின் நமஸ்காரம்.

**வரதானம்: முன்னோர் என்ற தன்னுடைய நினைவு சொரூபம் மூலமாக அனைத்து ஆத்மாக்களை சக்திசாலியாக ஆக்கக்கூடிய ஆதாரமான, நன்மை செய்பவர் ஆகுக!**

இந்தப் படைப்பு மரத்தின் முக்கிய தண்டு அனைவரின் முன்னோரான பிராமணனிலிருந்து தேவதை ஆகும் ஆத்மாக்கள் நீங்கள் ஆவீர்கள். ஒவ்வொரு காரியத்தின் ஆதாரம், குல மரியாதைகளின் ஆதாரம், பழக்க வழக்கங்களின் ஆதாரம், முன்னோர்கள் நீங்கள் அனைத்து ஆத்மாக்களின் ஆதாரமாகவும் மற்றும் பிறரை முன்னேறச் இருக்கிறீர்கள். தண்டாக விளங்கும் உங்கள் மூலமாகத் தான் அனைத்து ஆத்மாக்களுக்கும் உயர்ந்த எண்ணங்களின் சக்தி மற்றும் அனைத்து சக்திகளின் பிராப்தி ஆகிறது. உங்களை அனைவரும் பின்பற்றி நடந்து கொண்டிருக்கிறார்கள். எனவே இவ்வளவு பெரிய பொறுப்பு என்று புரிந்து கொண்டு ஒவ்வொரு எண்ணம் மற்றும் காரியங்களைச் செய்யுங்கள். ஏனென்றால் முன்னோரான ஆத்மாக்களாகிய உங்கள்

ஆதாரத்தினால் தான் உலகின் நேரம் மற்றும் நிலையின் ஆதாரம் அமைந்துள்ளது.

**சுலோகன்:** யார் அனைத்து சக்திகள் என்ற கிரணங்களை நாலாபுறங்களிலும் பரப்புகிறாரோ அவர் தான் மாஸ்டர் ஞான சூரியன் ஆவார்!

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺
✺

## 03.04.1997 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பழைய சம்ஸ்காரங்களை அழித்து தன்னுடைய உண்மையான சம்ஸ்காரத்தை தாரணை செய்யக்கூடிய எவரெடி (எப்பொழுதும் தயாராக இருப்பவர்) ஆகுங்கள்!

இன்று பாப்தாதா தன்னுடைய நாலாபுறங்களிலுமுள்ள உலகத் தந்தையின் அன்பில் ஐக்கியமாகியிருக்கும் அதிர்ஷ்டக் குழந்தைகளை பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒவ்வொரு குழந்தையின் பாக்கியத்தின் மேல். என்னுடைய குழந்தைகள் தற்சமயம் இவ்வளவு மகானாக இருக்கிறார்கள் அவர்களே முழுக்கல்பத்தில் தேவதை சொரூபத்திலும், தர்ம தலைவர்களின் ரூபத்திலும், மகாத்மாக்களின் ரூபத்திலும், பல கோடி மடங்கு செல்வந்த ஆத்மாக்களின் ரூபத்திலும் இருந்தாலுமே யாருக்குமே பிராமணர்கள் உங்களுக்கு எந்த அளவு பாக்கியம் இருக்கிறதோ அந்த அளவு பாக்கியம் இல்லை என்று தந்தைக்கும் பெருமிதம் இருக்கிறது. எனவே தன்னுடைய அந்த உயர்ந்த பாக்கியத்தை எப்பொழுதும் நினைவில் வைக்கிறீர்களா? எப்பொழுதும் ஆஹா பாக்கியத்தை அளிக்கும் தந்தையே மற்றும் ஆஹா உயர்ந்த ஆத்மா என்னுடைய பாக்கியமே என்ற பாடலை இடைவிடாது மனதில் பாடிக் கொண்டிருக்கிறீர்களா? இந்த பாக்கியத்தின் பாடல் எப்பொழுதும் இயல்பாகவே ஒலித்துக் கொண்டிருக்கிறதா? தந்தை குழந்தைகளைப் பார்த்து பார்த்து எப்பொழுதும் மகிழ்ச்சி அடைகிறார். குழந்தைகளும் மகிழ்ச்சி அடைகிறார்கள் ஆனால் எப்பொழுதாவது இடையில் தன்னுடைய பாக்கியத்தை வெளிப்படுத்துவதற்கு பதிலாக உள்ளடக்கி விடுகிறார்கள். குழந்தைகளினுள் தன்னுடைய பாக்கியத்தின் போதை இருக்கிறது என்று எப்பொழுது தந்தை பார்க்கிறார் மேலும் நிச்சயம் உள்ளடங்கி விட்டது என்றால் என்ன சொல்லலாம்? நாடகம் ஆனால்

பாப்தாதா அனைத்து குழந்தை களையும் எப்பொழுதுமே பாக்கியத்தின் நினைவு சொரூபமாக பார்க்க விரும்புகிறார். நீங்கள் அனைவரும் இதைத் தான் விரும்புகிறீர்கள், 'ஆனால்' (என்பது) இடையில் வந்து விடுகிறது. யாரிடமும் நீங்கள் கேட்டீர்கள் என்றால் அனைத்து குழந்தைகளும் நான் தந்தைக்குச் சமமாக ஆகத் தான் வேண்டும் என்ற இதே லட்சியத்தை வைத்து நடந்து கொண்டிருக்கிறார்கள். லட்சியம் மிக நல்லது. எப்பொழுது லட்சியம் உயர்ந்ததாக இருக்கிறது, மிக நல்லதாகவும் இருக்கிறது என்றால் பின்பு சில நேரம் உள்ளடங்கிய ரூபத்திலும், சில நேரம் வெளிப்படும் ரூபத்திலும் ஏன் ஆகி விடுகிறது?. என்ன காரணம்? பாப்தாதாவிடம் இவ்வளவு நல்ல நல்ல உறுதிமொழிகளும் கொடுக்கிறார்கள். ஆன்மீக உரையாடலும் செய்கிறார்கள். இருந்தாலும் லட்சியம் மற்றும் லட்சணத்தில் ஏன் இவ்வளவு வித்தியாசம்? அப்படி பாப்தாதாவும் என்ன காரணம் என்று ரிசல்ட்டில் பார்த்தார். புது விஷயம் அல்ல, நீங்கள் அனைவரும் தெரிந்திருக்கிறீர்கள் இருந்தும் பாப்தாதா ரிவைஸ் (மீண்டும் உணரச்) செய்விக்கிறார்.

பாப்தாதா மூன்று விஷயங்களைப் பார்த்தார் - ஒன்று யோசிப்பது, நினைப்பது. இரண்டாவது பேசுவது வர்ணனை செய்வது மற்றும் மூன்றாவது காரியத்தில் நடைமுறை அனுபவத்தில் மற்றும் நடத்தையில் கொண்டு வருவது, காரியத்தில் கொண்டு வருவது. அப்படி இந்த மூன்றிற்கும் சமநிலையில் குறை இருக்கிறது. எப்பொழுது சமநிலை இருக்கிறது என்றால் நிச்சயம் மற்றும் போதை வெளிப்படுகிறது மற்றும் எப்பொழுது சமநிலை குறைகிறது என்றால் நிச்சயம் மற்றும் போதை உள்ளடங்கி விடுகிறது. யோசிப்பதின் வேகம் மிக நல்லதாகவும் துரிதமாகவும் இருக்கிறது என்று ரிசல்ட்டில் பார்த்தோம். பேசுவதில் வேகம் மற்றும் போதை அதுவும் 75 சதவிகிதம் இருக்கிறது, சரி தான். பேசுவதில் பெரும்பான்மையோர் திறமை நிறைந்தவர்களாகவும் இருக்கிறார்கள் ஆனால் நடைமுறை நடத்தையில் கொண்டு வருவதில் மொத்த மதிப்பெண்கள் குறைவாக இருக்கிறது. அப்படி இரண்டு விஷயங்களில் சரியாக இருக்கிறது ஆனால் மூன்றாவது விஷயத்திலும் மிகவும் குறைவாக இருக்கிறது. என்ன காரணம்? எப்பொழுது எண்ணமும் நல்லதாக இருக்கிறது, வார்த்தையும் மிக அழகான ரூபத்தில் இருக்கிறது, பின்பு

நடைமுறையில் ஏன் குறைந்து விடுகிறது? என்ன காரணம் என்று தெரிந்திருக்கிறீர்களா? ஆம் அல்லது இல்லை என்று பதில் கூறுங்கள். மிக நன்றாகத் தெரிந்திருக்கிறீர்கள். ஒருவேளை யாரிடமாவது இந்த தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்துங்கள் அல்லது வகுப்பு எடுங்கள் என்றால் எவ்வளவு நன்றாக வகுப்பு எடுப்பார்கள். மேலும் மிகுந்த நிச்சயம், போதை மற்றும் உடனடியாக சொற்பொழிவும் செய்வார்கள். வகுப்பும் எடுப்பார்கள். எடுக்கிறீர்கள் தானே? என்னென்ன கூறுகிறார்கள் என்று அனைவரின் வகுப்புக்களை பாப்தாதா கேட்கிறார், ஆஹா குழந்தைகளே ஆஹா என்று புன்முறுவலிட்டுக் கொண்டே இருக்கிறார்.

முக்கியமான விஷயம் இது ரிவைஸ் கோர்ஸ் அதாவது நடந்த பாடத்தை மீண்டும் புரியவைப்பது நடந்து கொண்டிருக்கிறது என்று பாப்தாதா ஏற்கனவே கூறியிருக்கிறார். காரணம் ஒன்றே ஒன்று தான். அதிகமாகவும் இல்லை, ஒரே காரணம் தான் என்று தந்தை கூறுகிறார். மேலும் காரணத்திற்கு நிவாரணம் போதை செய்வது கடினமும் இல்லை, மிகவும் சுலபம் என்று பாப்தாதா நினைக்கிறார் ஆனால் சுலபமானதை கடினமாக ஆக்கி விடுகிறார்கள். கடினமானது இல்லை ஆனால் ஆக்கி விடுகிறார்கள். ஏன்? உள்ளடங்கிப் போய்விடுகிறது. ஒரே ஒரு காரணம் தான் என்னென்ன தாரணைக்கான விஷயங்கள் கேட்கிறீர்கள் அதை சக்திகளின் ரூபத்தில், குணங்களின் ரூபத்தில் செய்யவும் செய்கிறீர்கள், தாரணைக்கான விஷயத்தை மிக நன்றாகக் கூறுகிறீர்கள். அவ்வளவு நன்றாக கூறுகிறீர்கள் அதை கேட்பவர்கள் அஞ்ஞானியாக இருந்தாலும் அல்லது ஞானியாக இருந்தாலும் கேட்டு மிக நன்றாக இருக்கிறது. மிக நன்றாக இருக்கிறது என்று கூறி மிக நன்றாகக் கூறினார் என்று அதிகமாக SEMக தட்டுவார்கள். எத்தனை தடவை 'ஆனால்' வந்தது? இந்த 'ஆனால்' தான், தடை ஏற்படுத்துகிறது. 'ஆனால்' என்ற ஆனால், வார்த்தை முடிவடைகிறது என்பதன் பொருள் தந்தைக்குச் சமமாக அருகில் வருவது, மேலும் தந்தையின் அருகில் வருவது அதாவது நேரத்தை அருகில் கொண்டு வருவது ஆனால் இதுவரையிலும் 'ஆனால்' வார்த்தையை கூற வேண்டியதாக இருக்கிறது. தந்தைக்கு பிடிப்பதில்லை இருந்தாலும் சொல்ல வேண்டிய திருக்கிறது. அப்படி காரணமாக என்ன இருந்தது? என்ன கூறுகிறீர்களோ, தாரணையும் செய்கிறீர்களோ, தாரணையின் ரூபத்தில் தாரணை செய்கிறீர்கள் மேலும் அந்த தாரணை சிலருக்கு கொஞ்ச

நேரம், சிலருக்கு அதிக நேரம் இருக்கிறது ஆனால் தாரணை நடைமுறையில் எப்பொழுதும் அதிகரித்துக் கொண்டே இருக்க வேண்டும் அதற்கான முக்கியமான விஷயம் இது தான் - எப்படி துவாபர் யுகத்திலிருந்து கடைசி ஜென்மம் வரை என்னென்ன அவகுணங்கள், பலஹீனங்கள் இருக்கின்றனவோ அதனுடைய தாரணை சம்ஸ்கார ரூபத்தில் உருவாகி விட்டது மேலும் சம்ஸ்காரமாக ஆனதின் காரணத்தினால் கடின உழைப்பு செய்ய வேண்டியதாக இருப்பதில்லை. விடவும் விரும்புகிறார்கள், பிடிக்கவில்லை இருந்தும் என்ன செய்வது என்னுடைய சம்ஸ்காரமே அப்படித் தான் என்று கூறுகிறார்கள். நீங்கள் தவறாக எடுத்துக் கொள்ளாதீர்கள் என்னுடைய சம்ஸ்காரமே அப்படித் தான் என்று கூறுவார்கள். சம்ஸ்காரம் எப்படி உருவாகிறது. உருவாக்கினீர்கள் அதனால் தான் உருவானது இல்லையா. அப்படி துவாபர் யுகத்திலிருந்து எப்பொழுது இந்த தவறான சம்ஸ்காரம் உருவாகி விட்டது. அதன் மூலம் அந்த நேரத்தில் கட்டாயத்திற்கும் உள்ளாகிறீர்கள். இருந்தாலும் என்ன செய்வது சம்ஸ்காரம் என்று கூறுகிறீர்கள். அப்படி சம்ஸ்காரம் விரும்பாவிட்டாலும் கூட சகஜமாக நடைமுறையில் வந்து விடுகிறது தான் இல்லையா. சிலருக்கு கோபம் வந்து விடுகிறது, கொஞ்ச நேரத்திற்கு பிறகு நீங்கள் தவறாக எடுத்துக் கொள்ளாதீர்கள், என்னுடைய சம்ஸ்காரமே அப்படி என்று கூறுகிறார்கள். கோபத்தை சம்ஸ்காரமாக ஆக்கினார், அவகுணத்தை சம்ஸ்காரமாக ஆக்கினார். மேலும் குணங்களை ஏன் சம்ஸ்காரமாக ஆக்கவில்லை? எப்படி கோபம் அஞ்ஞானத்தின் சக்தியே, அதேபோல ஞானத்தின் சக்தி அமைதி ஆகும். சகித்துக் கொள்ளும் சக்தி ஆகும். அஞ்ஞானத்தின் சக்தி கோபத்தை மிக நன்றாகவே சம்ஸ்காரமாக ஆக்கியாகி விட்டது. மேலும் உபயோகித்துக் கொண்டும் இருக்கிறீர்கள். பிறகு மன்னிப்பும் கேட்டுக் கொண்டே இருக்கிறீர்கள். மன்னித்து விடுங்கள். இனி மேல் அப்படி நடக்காது என்று கூறுகிறார்கள். மேலும் பிற்காலத்தில் இன்னும் அதிகமாக நடக்கிறது. என்ன காரணம்? ஏனென்றால் சம்ஸ்காரமாக ஆக்கி விட்டார்கள். எனவே பாப்தாதா ஒரே ஒரு விஷயத்தை குழந்தைகளுக்கு அடிக்கடி கூறுகிறார் - இப்பொழுது ஒவ்வொரு குணத்தை, ஒவ்வொரு ஞானத்தின் விஷயத்தை சம்ஸ்கார ரூபத்தில் உருவாக்குங்கள்.

பிராமண ஆத்மாக்களின் உண்மையான சம்ஸ்காரம் எது? கோபமா அல்லது சகித்துக் கொள்ளும் சக்தியா? எது? சகித்துக் கொள்ளும் சக்தி அமைதியின் சக்தி இது தான் இல்லையா. அவகுணங்களையோ சுலபமாகவே சம்ஸ்காரமாக ஆக்கி விட்டீர்கள். இடித்து இடித்து (சிறிது சிறிதாக) உள்ளே போட்டு விட்டீர்கள் அது விரும்பாவிட்டாலும் வெளியாகிக் கொண்டே இருக்கிறது. அப்படி ஒவ்வொரு குணத்தை உள்ளே இடித்து இடித்து சம்ஸ்காரமாக ஆக்குங்கள். என்னுடைய உண்மையான சம்ஸ்காரம் எது என்பதை எப்பொழுதும் நினைவில் வையுங்கள். அதுவோ இராவணனின் சொத்து அதை சம்ஸ்காரம் ஆக்கி விட்டீர்கள். மாற்றான் பொருளை தன்னுடையதாக ஆக்கி விட்டீர்கள். இப்பொழுது தந்தையின் பொக்கிஷத்தை தன்னுடையதாக ஆக்குங்கள். இராவணனின் பொருளை பாதுகாப்பாக வைத்திருக்கிறீர்கள். மேலும் தந்தையின் பொருளை தொலைத்து விட்டீர்கள், ஏன்? இராவணன் மேல் அன்பு இருக்கிறதா? இராவணன் பிடித்திருக்கிறானா அல்லது தந்தை பிடித்திருக்கிறாரா? அனைவரும் தந்தை மிகவும் பிடித்திருக்கிறார் என்று கூறுவார்கள். இதை மனதால் கூறுகிறீர்கள் தான் இல்லையா ஆனால் எது பிடித்திருக்கிறதோ, யார் பிடித்திருக்கிறாரோ அவருடைய விஷயம் நிச்சயம் என்ற மை மூலம் எழுகப்பட்டு) இதயத்தில் நிரம்பிவிடுகிறது. எப்பொழுது யாராவது இராவணனின் சம்ஸ்காரத்தின் வசமாகிறார். மேலும் பாபா உங்கள் மேல் எனக்கு மிகுந்த அன்பு இருக்கிறது என்று கூறிக் கொண்டும் இருக்கிறார். எவ்வளவு அன்பு இருக்கிறது என்று தந்தை கேட்கிறார். ஆகாயத்தையும் விட அதிகம் என்று கூறுகிறார். தந்தை கேட்டு எவ்வளவு கள்ளம் கபடமற்ற குழந்தைகள் என்று குஷியும் அடைகிறார். இருந்தாலும் தந்தை கூறுகிறார் தந்தையிடமிருந்து அனைத்து குழந்தைகளுக்கும் ஒரு உறுதிமொழி இருக்கிறது -ஒருவேளை உள்ளப்பூர்வமாக ஒரு தடவையாவது 'என்னுடைய பாபா' என்று கூறிவிட்டால் பின்பு இடையிடையே மறந்து விடுகிறீர்கள் ஆனால் ஒரு தடவையாவது உள்ளப்பூர்வமாக என்னுடைய பாபா என்று கூறினீர்கள் என்றால் தந்தையோ யாராக இருந்தாலும், எப்படி இருந்தாலும் என்னுடையவரே என்று கூறுவார். அழைத்து செல்லத் தான் வேண்டும். கல்யாண ஊர்வலத்தில் வருபவராக செல்லாமல் மணமகளாகி செல்ல வேண்டும் என்ற இதை மட்டும் தான் தந்தை விரும்புகிறார். இதைக் கேட்டு அனைவரும் மிகுந்த குஷி அடைகிறீர்கள். உங்கள் மேலேயே சிரிப்பும்

வருகிறது. இப்பொழுது கேட்கும் நேரத்திலும் உங்கள் மேலேயே சிரிக்கிறீர்கள் தான் இல்லையா. உங்கள் மேல் சிரிப்பு வருகிறது. மேலும் எப்பொழுது ஆவேசப்படுகிறீர்கள் என்றால் (முகம்) சிவந்து, வெளுத்துப் போய் விடுகிறீர்கள் ஆனால் தந்தை ரிசல்ட்டில் பார்த்திருக்கிறார், குழந்தைகளின் ஒரு விசேஷம் மிக நல்லதாக இருக்கிறது, அது எது? தூய்மையாக இருப்பது. இதற்காக எவ்வளவு தான் சகித்துக் கொள்ள வேண்டியது இருந்தாலும், எவ்வளவு தான் எதிர்ப்பவர்கள் எதிரில் வந்தாலும் இந்த விஷயத்தில் 75-சதவிகிதம் நன்றாக இருக்கிறார்கள். சிலர் பொய்யும் கூறுகிறார்கள் ஆனால் இருந்தாலும் 75-சதவிகிதத்தினர் இந்த விஷயத்தில் தேர்ச்சி பெற்று காண்பித்திருக்கிறார்கள். இப்பொழுது அதற்கு பிறகு இரண்டாவது பாடமாக எது வருகிறது? கோபம். தேக உணர்வோ மொத்தமாக இருக்கவே இருக்கிறது ஆனால் கோபத்தின் பாடத்தில் மிக குறைந்தவர்கள் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள் என்று பார்த்தோம். கோபம் ஒரு விகாரம் இல்லை, இது ஒரு ஆயுதம். விகாரம் இல்லை என்று ஒருவேளை அப்படி நினைக்கிறார்கள் ஆனால் கோபம் ஞான சொரூப ஆத்மாவைப் பொறுத்தவரையில் மிகப் பெரிய எதிரி, ஏனென்றால் கோபம் அனேக ஆத்மாக்களின் உறவு நெருக்கத்தில் வருவதினால் வெளிப்பட்டு விடுகிறது. மேலும் கோபத்தைப் பார்த்து தந்தையின் பெயருக்கு மிகுந்த நிந்தனை ஏற்படுகிறது. பேசுபவர்கள் ஞானம் நிறைந்த ஆத்மாக்கள் குழந்தைகளை நாங்களும் பார்த்து விட்டோம் என்று இதைத் தான் கூறுகிறார்கள். கோபத்தின் அதிக ரூபம் இருக்கின்றன. ஒன்றோ மகான் ரூபம் அதை நீங்கள் நல்ல முறையில் தெரிந்திருக்கிறீர்கள், இவர் கோபப்பட்டுக் கொண்டிருக்கிறார் என்று தென்படுகிறது. இரண்டாவது கோபத்தின் சூட்கம சொரூபம் உள்மனதில் பொறாமை, வெறுப்பு, பகைமை உருவாகிறது. இந்த சொரூபத்தில் சத்தமாக பேசுவது அல்லது வெளிப்படையாக ஏதாவது ரூபம் தென்படுவதில்லை ஆனால் வெளிப்படையாக கோபம் ஏற்படுகிறது என்றால் கோபம் அக்னியின் ரூபம் தான் இல்லையா, அது உள்ளே அவரே எரிந்து கொண்டிருக்கிறார் மேலும் மற்றவர்களை யும் எரித்துக் கொண்டிருக்கிறார். அந்த மாதிரி பொறாமை, வெறுப்பு, பகைமை இது யாரிடம் இருக்கிறதோ அவர் இந்த அக்னியில் உள்ளுக்குள்ளேயே எரிந்து கொண்டிருப்பார். வெளிப்படையாக வெளிரிப்போவதும், சிவந்து போவதும் ஆவதில்லை. வெளிரிப்போவது சிவந்து போவது என்பது கூட

சரி தான் ஆனால் அவர் கருப்பாகி விடுகிறார். மூன்றாவது கோபத்தின் சாதுர்யமான ரூபமும் இருக்கிறது. அது என்ன? சொல்வதற்கும், புரிந்து கொள்வதிலும் சில இடங்களில் சீரியசாக ஆகத் தான் வேண்டியதிருக்கிறது என்று கூறுகிறார்கள். சில இடங்களில் நன்மைக்காக சட்டத்தை கையில் எடுக்கத் தான் வேண்டியிருக்கிறது என்று கூறுகிறார்கள். இப்பொழுது நன்மையா அல்லது இல்லையா என்று தன்னிடமே கேளுங்கள். பாப்தாதா யாருக்கும் தன் கையில் சட்டத்தை எடுப்பதற்கு அனுமதி கொடுப்பதில்லை. தேவையிருந்தால் சட்டத்தை எடுங்கள், கோபப்படாதீர்கள் என்று ஏதாவது முரளியில் கூறியிருக்கிறாரா? சட்டத்தை எடுப்பவரின் உள்மனதின் ரூபம் அதே கோபத்தின் அம்சமாகத் தான் இருக்கிறது. யார் பொறுப்பிலிருக்கும் ஆத்மாக்களோ அவர்களும் சட்டத்தை எடுப்பதில்லை ஆனால் அவர்களுக்கு சட்டத்தை புரிய வைக்க வேண்டியதாக இருக்கிறது. யாரும் சட்டத்தை எடுக்க முடியாது ஆனால் பொறுப்பாளராக இருக்கிறார் என்றால் தந்தை மூலமாக உருவாக்கப்பட்டிருக்கும் சட்டத்தை புரிய வைக்க வேண்டியதாக இருக்கிறது. பொறுப்பாளர் ஆகியிருப்பவருக்கு இந்த அளவு அனுமதி இருக்கிறது. அனைவருக்கும் இல்லை.

இன்று பாப்தாதா கொஞ்சம் ஆஃபிசியல் அதாவது அதிகாரப்பூர்வமாக அறிவுரை கூறிக் கொண்டிருக்கிறார், இதை அன்போடு எடுத்துக் கொள்ளுங்கள். ஏனென்றால் குழந்தைகளால் எழுதப்பட்ட, செய்து கொடுக்கப்பட்ட உறுதிமொழிகளை பார்த்துக் கொண்டு, கேட்டுக் கொண்டு புன்முறுவலிட்டுக் கொண்டிருக்கிறார். இப்பொழுது ஒவ்வொரு குணத்தையும் தன்னுடைய உண்மையான சம்ஸ்காரம் ஆக்குங்கள் என்று பாப்தாதா கூறினார். அதைக் கோடிட்டீர்களா? அப்படி அமைதி சொரூபத்தில் இருப்பது, சகித்துக் கொள்பவராக ஆவது இதுவோ என்னுடைய சம்ஸ்காரம் ஆகி விட்டது என்று இப்பொழுதிலிருந்தே கூறுங்கள். பின்பு பாப்தாதா எப்பொழுது சந்திப்பதற்காக வருவாரோ அப்பொழுது இதை தன்னுடைய உண்மையான சம்ஸ்காரம் ஆக்கி இந்த ஐந்து, ஆறு மாதங்களில் பாப்தாதாவின் எதிரில் காண்பியுங்கள். எனவே இன்று ரிசல்ட்டைக் கூறிக் கொண்டிருக்கிறோம். கோபத்தின் புகார் மிக அதிகமாக வருகிறது. சிறியவர்களும், பெரியவர்களும் விதவிதமான ரூபத்தில்

கோபப்படுகிறார்கள். இப்பொழுது பாப்தாதா அந்த விஷயத்தை அதிகமாக வெளிப்படுத்துவதில்லை ஆனால் மிகுந்த மகிழ்ச்சி நிறைந்த கதைகள் அதிகமாக இருக்கிறது. எனவே இன்றிலிருந்து கோடத்தை என்ன செய்வீர்கள்? விடை கொடுப்பீர்களா? (அனைவரும் கை தட்டினார்கள்) பாருங்கள், கை தட்டுவது மிகவும் சுலபம் ஆனால் கோபத்தின் கைதட்டல் செய்யாதீர்கள். இப்பொழுது பாப்தாதா இதை அடிக்கடி கேட்க விரும்பவில்லை. இருந்தும் இரக்கம் ஏற்படுகிறது என்றால் கேட்டு விடுகிறார். எனவே இப்பொழுதிலிருந்து பாபா உறுதிமொழியோ செய்திருக்கிறேன் ஆனால் மீண்டும் மீண்டும் வந்து விடுகிறது என்ன செய்வது? விரும்பவில்லை வந்து விடுகிறது. நீங்களே மாயாவிற்குப் புரிய வையுங்கள், கோபத்திற்குப் புரிய வையுங்கள், அப்படி இந்த முயற்சி செய்வதையும் தந்தை செய்ய வேண்டும். மேலும் பிராப்தியை குழந்தைகள் அடைவார்களா? இந்தக் கடின உழைப்பையும் தந்தை செய்ய வேண்டுமா? எனவே ஐந்து மாதங்களுக்கு பிறகு மீண்டும் ரிசல்ட்டைப் பார்க்கும் அளவிற்கு அந்த மாதிரி உறுதிமொழி கொடுக்காதீர்கள். நீங்கள் கூறினாலும் அல்லது கூறாவிட்டாலும் சரி தந்தையிடமோ வந்து சேர்ந்து விடுகிறது. என்ன செய்வது ஆகி விடுகிறது சூழ்நிலையே அந்த மாதிரி வருகிறது, விஷயம் மிகப் பெரியதாக ஆகி விட்டது இல்லையா என்ற மாதிரியான ரிசல்ட் இருக்க வேண்டாம். தந்தைக்கும் புரிய வைப்பதற்கு முயற்சி செய்கிறார்கள். மிகவும் சாதுர்யமானவர்கள். பாபா சின்ன சின்ன விஷயங்களை நாங்கள் கடந்து சென்று விடுகிறோம் ஆனால் இந்த விஷயமோ பெரியதாக இருந்தது இல்லையா என்று கூறுகிறார்கள். இப்பொழுது பழியை எதன் மேல் வைத்தார்கள்? விஷயத்தின் மல். மேலும் விஷயம் என்ன செய்கிறது? வந்தது மற்றும் சென்றது. 5000 வருடங்களுக்கு பிறகு மீண்டும் விஷயம் வரும். எது 5000 வருடங்களுக்கு பிறகு வர வேண்டிய விஷயமாக இருக்கிறதோ அதன் மேல் பழி சுமத்தி விடுகிறார்கள். அந்த மாதிரி செய்யாதீர்கள். என்ன செய்வது என்ற இதை எண்ணத்தில் கூட கொண்டு வராதீர்கள். பாபா கோபத்திற்காக விசேஷமாக ஏன் இவ்வளவு கூறிக் கொண்டிருக்கிறார். ஏனென்றால் ஒருவேளை நீங்கள் கோபத்திற்கு விடை கொடுத்து விட்டீர்கள் என்றால் இதில் பேராசை, இச்சை அனைத்தும் வந்து விடுகிறது. பேராசை பணத்திற்காகவும், உணவு விஷயத்தில் மட்டும் இருப்பதில்லை. விதவிதமான முறையில் இருக்கிறது. ஞானத்தின்

மற்றும் அஞ்ஞானமாக ஏதாவது ஆசை இருக்கிறது என்றால் இதுவும் பேராசை தான். அப்படி கோபத்தை அழிப்பதினால் பேராசையும் இயல்பாகவே அழிந்து விடும், அகங்காரமும் அழிந்து விடும். நான் பெரியவன், நான் புத்திசாலி, நான் தெரிந்திருக்கிறேன். இவர் தன்னை என்னவென்று நினைத்துக் கொண்டிருக்கிறார் என்று அபிமானம் வந்து விடுகிறது இல்லையா. அப்பொழுது கோபம் வருகிறது. அப்படி அபிமானம் மற்றும் பேராசை இவையும் சேர்ந்தே விடைபெற்று விடும். எனவே பாப்தாதா விசேஷமாக பேராசைக்காக கூறாமல் கோபத்தை கோடிட்டுக் காண்பிக்கிறார். அப்படியானால் சம்ஸ்காரத்தை உருவாக்குவீர்களா? இப்பொழுது அனைவரும் கையை உயர்த்துங்கள் மேலும் அனைவரின் புகைப்படத்தை எடுங்கள் (அனைவரும் கையை உயர்த்தினார்கள்) இப்பொழுது கொஞ்சம் வாழ்த்துக்கள் கூறுகிறேன் அதிகமல்ல மேலும் எப்பொழுது மீண்டும் ரிசல்ட்டைப் பார்ப்போம் என்றால் பின்பு சூட்சும வதனத்தின் தேவதைகளும், சொர்க்கத்தின் தேவதைகளும் உங்கள் மேல் ஆஹா ஆஹா என்ற மலர் தூவுவார்கள்.

இன்றிலிருந்து ஒவ்வொருவரும் தன்னை பார்க்க வேண்டும், மற்றவர்களை பார்க்கக் கூடாது. மற்றவர்களை இந்த விஷயத்தில் பார்க்கும் கண்ணை மூடிக் கொள்ள வேண்டும். இந்த கண்களையோ மூட முடியாது இல்லையா, ஆனால் மனதின் கண்ணை மூடி விடுங்கள் - இவர் செய்கிறார். அவர் செய்கிறார். அதை நான் பார்க்கக்கூடாது. பாபா இந்த அளவு அழுத்தமாக கூறுகிறார், ஒருவேளை லட்சத்தில் ஒருவர் மகாரதி கூட அந்த மாதிரி பலவீனத்தை செய்கிறார் என்றாலும் பார்ப்பதற்கும் மற்றும் கேட்பதற்குமான மனதை உள்நோக்குமுகமாக ஆக்குங்கள். சிரிப்பிற்கான விஷயத்தை கூறவா? பாப்தாதா இன்று கொஞ்சம் தெளிவாக கூறுகிறார். பாதிக்கப்படவில்லையே? நல்லது இன்னொரு விஷயத்தையும் தெளிவாக கூறுகிறோம். பெரும்பான்மையோர் அவ்வப்பொழுது எப்பொழுதும் அல்ல, எப்பொழுதாவது மகாரதிகளின் விசேஷத்தை குறைவாக பார்க்கிறார்கள் மற்றும் பலவீனத்தை மிக ஆழமாக பார்க்கிறார்கள். மேலும் பின்பற்றி நடக்கிறார்கள். ஒவ்வொருவரிடமும் எல்லோரையும் பார்த்தாகி விட்டது என்று வர்ணனையும் செய்கிறார். மகாரதியும் செய்கிறார், நானோ மிகவும் பின்னால் வந்தவன். இப்பொழுது மகாரதி எப்பொழுது மாறுவாரோ, நானும் மாறி விடுவேன் ஆனால்

மகாரதிகளின் தபஸ்யா, மகாரதிகளின் வெகுகாலத்து முயற்சி அவர்களுக்கு அதிகப்படியான மதிப்பெண் கொடுத்தும் கௌரவமாக தேர்ச்சி பெறச் செய்து விடும். நீங்கள் மகாரதி மாறினார் என்றால் நானும் மாறி விடுவேன் என்று காத்துக் கொண்டிருந்தீர்கள் என்றால் ஏமாற்றம் அடைவீர்கள். எனவே மனதை உள்நோக்குமுகமாக ஆக்குங்கள். புரிந்ததா. எல்லோரையும் பார்த்தாகி விட்டது. பார்த்தாகி விட்டது என்ற இதையும் பாப்தாதா அதிகமாக கேட்கிறார். எனக்கும் கண்கள் இருக்கின்றன இல்லையா, எனக்கும் காதுகள் இருக்கிறது இல்லையா நானும் அதிகமாக கேட்கிறேன் ஆனால் இந்த விஷயத்தில் மகாரதிகளுடன் போட்டி போடாதீர்கள். நல்லதில் போட்டி போடுங்கள். தீயதில் போட்டி போடாதீர்கள். இல்லையென்றால் ஏமாற்றம் அடைந்து விடுவீர்கள். தந்தைக்கு இரக்கம் ஏற்படுகிறது. மேலும் யார் மகாரதிகளோ அவர்களுடைய அஸ்திவாரம் நிச்சயமானது, ஆடாதது அசையாதது அதற்கான அதிகப்படியான ஆசீர்வாதங்கள் மகாரதிகளுக்கு கிடைக்கிறது. எனவே ஒருபொழுதும் இந்த விஷயத்திற்காக மனதின் கண்களை திறக்காதீர்கள். மூடி வையுங்கள். கேட்பதற்கு பதிலாக மனதை உள்நோக்குமுகமாக வையுங்கள். புரிந்ததா? நல்லது.

நாலாபுறங்களிலுமுள்ள அனைத்து பாப்தாதாவின் அன்பில் ஐக்கியமாகியிருக்கும் ஆத்மாக்களுக்கு, அனைத்து தந்தையின் சேவாதாரி ஆத்மாக்களுக்கு, அனைத்து சகஜ முயற்சியை கடைபிடிக்கக்கூடிய உயர்ந்த ஆத்மாக்களுக்கு, எப்பொழுது தந்தைக்குச் சமமாக ஆகும் லட்சியம் மற்றும் லட்சணத்தை சமமாக ஆக்கக்கூடிய தந்தையின் அருகில் இருக்கும் ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் மிகுந்த அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**வரதானம்: தன்னுடைய நற்சிந்தனையின் சக்தி மூலம் ஆத்மாக்களை கவலையிலிருந்து விடுவிக்கக்கூடிய நற்சிந்தனையுடைய ஆத்மா ஆகுக!**

இன்றைய உலகின் அனைத்து ஆத்மாக்களும் சிந்தாமணிகள் கவலை நிறைந்த ஆத்மாக்கள்). அந்த சிந்தாமணிகளை நீங்கள் நற்சிந்தனை மணிகள் தன்னுடைய நற்சிந்தனையின் சக்தி மூலமாக மாற்றம் செய்ய

முடியும். எப்படி சூரியனின் கிரணங்கள் வெகு தொலைதூரம் வரை இருளை அகற்றுகிறது. அதே போல் நற்சிந்தனை மணிகள் உங்களின் நல்லெண்ணம் என்ற ஜொலிப்பு மற்றும் கிரணங்கள் உலகில் நாலாபுறங்களிலும் பரவிக் கொண்டிருக்கிறது. எனவே ஏதோ ஆன்மீக ஒளி குப்த ரூபத்தில் தன்னுடைய காரியத்தை செய்து கொண்டிருக்கிறது என்று நினைக்கிறார்கள். இந்த உணர்தல் இப்பொழுது தொடங்கியிருக்கிறது. கடைசியில் தேடித் தேடி (வர வேண்டிய) ஸ்தானத்தை வந்தடைந்து விடுவார்கள்.

<u>சுலோகன்: பாப்தாதாவின் வழிகாட்டுதலை தெளிவாக புரிந்து கொள்வதற்காக மனம், புத்தியின் லைனை (தடத்தை) தெளிவாக வையுங்கள்!</u>

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 13.11.1997 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சங்கமயுகத்தின் பிராப்திகளின் பலனை அனுபவம் செய்யுங்கள், மாஸ்டர் வள்ளல், மகா சகயோகி ஆகுங்கள்!

இன்று பாக்கியத்தை உருவாக்கும் தந்தை தன்னுடைய உயர்ந்த பாக்கிடம் நிறைந்த குழந்தைகளை பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒவ்வொரு குழந்தையின் பாக்கியத்தின் ரேகையைப் பார்த்து பார்த்து பாக்கியத்தை உருவாக்கும் தந்தையும் மகிழ்ச்சி அடைகிறார். ஏனென்றால் முழுக் கல்பத்தைச் சுற்றி வந்தாலும் உங்கள் மாதிரி உயர்ந்த பாக்கியம் வேறு எந்த தர்ம ஆத்மாவிற்கும் மகான் ஆத்மாவிற்கும், இராஜ்ய அதிகாரி ஆத்மாவிற்கும், சங்காயுக உயர்ந்த ஆத்மாக்கள் உங்களுக்கு எவ்வளவு பாக்கியம் இருக்கிறதோ அந்த அளவு பாக்கியம் யாருக்குமே கிடையாது நெற்றியிலிருந்து தன்னுடைய பாக்கியத்தின் ரேகைகளைப் பார்க்கிறீர்களா? பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் நெற்றியில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் ஜோதியின் உயர்ந்த ரேகையைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். நீங்கள் அனைவரும் கூட தன்னுடைய ரேகைகளைப் பார்க்கிறீர்களா? கண்களில் பார்த்தீர்கள் என்றால் அன்பு மற்றும் சக்தியின் ரேகைகள் தெளிவாக இருக்கிறது. வாயில் பார்த்தீர்கள் என்றால் இனிமையான உயர்ந்த வார்த்தைகளின் ரேகைகள் ஜொலித்துக் கொண்டிருக்கின்றன. உதடுகளில் பாருங்கள், ஆன்மீக புன்முறுவல், ஆன்மீகக் குஷியின் பொலிவின் ரேகைகள் தென்படுகின்றன. இதயத்தில் பாருங்கள், உள்ளத்தில் பார்த்தீர்கள் என்றால் திலாராம் அதாவது உள்ளத்தைக் கொள்ளை கொண்ட சிவபாபாவின் அன்பிலேயே ஐக்கியமாகி இருக்கும் ரேகைகள் தெளிவாக இருக்கின்றன. கைகளில் பாருங்கள். இரண்டு கைகளிலுமே அனைத்து பொக்கிஷங்களினால் நிரம்பிய ரேகைகளைப் பாருங்கள். கால்களில் பாருங்கள் ஒவ்வொரு அடியிலும் பலகோடி

மடங்கு பிராட்திகளின் ரேகை தெளிவாக இருக்கிறது. எவ்வளவு பெரிய பாக்கியம் உங்களுடையது.

பாக்கியத்தை உருவாக்கும் தந்தை ஒவ்வொரு குழந்தைக்கும் முயற்சி மூலமாக, உயர்ந்த காரியங்களின் எழுதுகோல் மூலமாக இந்த அனைத்து ரேகைகளையும் போடுவதற்காக திறந்த மனதோடு திறந்த அனுமதி கொடுத்திருக்கிறார். எவ்வளவு நீளமான ரேகையை இழுக்க விரும்புகிறீர்களோ அந்த அளவு இழுக்க முடியும் ஆனால் குறிப்பிட்ட நேரத்திற்கு முன் இழுக்க வேண்டும். யாருக்கு எவ்வளவு நீளமான ரேகை போட வேண்டுமோ அதை அவரே போட முடியும். தந்தை எழுதுகோலை உங்கள் கையில் கொடுத்திருக்கிறார். அப்படியானால் அந்த ரேகையை போடத் தெரியுமா? போட்டு விட்டீர்களா அல்லது போடத் தெரியவில்லையா? அனைவருக்கும் தெரியுமா? ஆமாம்) மிகவும் நல்லது. பாருங்கள். இந்த நேரத்தின் அதிர்ஷ்டத்தின் ரேகை உங்களை முழு கல்பத்திலும் உயர்ந்தவராக ஆக்குகிறது, 21-பிறவிகளுக்கு எப்பொழுதும் நிரம்பிய மற்றும் சுகமாக இருப்பதற்கான ரேகை இருக்கவே இருக்கிறது. மேலும் துவாடர், கலியுகத்திலும் கூட பூஜைக்குரியவர் ஆவதற்கான உங்களுடைய ரேகை மிக உயர்ந்ததாக இருக்கிறது. அப்படி இந்த நேரத்தின் பாக்கியத்தின் ரேகை முழுக் கல்பத்திலும் உங்களுடன் இருக்கிறது. ஏனென்றால் அழியாத தந்தையின் அழியாத ரேகை ஆகும். அப்படியானால் எப்பொழுதும் தன்னுடைய உயர்ந்த பாக்கியத்தின் ரேகை நினைவில் இருக்கிறதா? இருக்கத் தான் செய்கிறது ஆனால் சில நேரம் வெளிப்பட்டு இருக்கிறது. சில நேரம் உள்ளடங்கி இருக்கிறது. அல்லது எப்பொழுதுமே வெளிப்பட்ட நிலையில் இருக்கிறதா? இந்த விஷயத்தில் குறைவானவர்கள் கையை உயர்த்துகிறார்கள். பாருங்கள். எப்பொழுதுமே வெளிப்பட்ட நிலையில் இருக்க வேண்டும். வெளிப்பட்டிருக்கும் நிலைக்கான அடையாளம் பழைய நினைவுகள், பழைய சம்ஸ்காரங்களின் ரேகைகள் உள்ளடங்கிப் போய் விடுவது. ஒருபொழுதும் பழைய சம்ஸகாரங்களின் ரேகைகள் மற்றும் பழைய விஷயங்களின் நினைவின் ரேகைகள் வெளிப்பட வேண்டாம். உள்ளடங்கி இருக்கட்டும். மேலும் உள்ளடங்கி இருந்து இருந்து அகன்று விடும். எங்கு உயர்ந்த பாக்கியத்தின் ரேகைகள் வெளிப்பட்ட நிலையில் இருக்கின்றனவோ அங்கு பழைய ரேகைகள் வெளிப்படுவது அசம்பவம்

ஆகும். ஒருவேளை ஆகிறது என்றால் உயர்ந்த பாக்கியத்தின் ரேகை எப்பொழுதும் வெளிப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் இல்லை என்பது நிரூபணம் ஆகிறது. அப்படியானால் என்ன நினைக்கிறீர்கள்? இவ்வளவு உயர்ந்த பாக்கியத்தின் ரேகைகள் வெளிப்பட்டு இருக்க வேண்டுமா அல்லது உள்ளடங்கி இருக்க வேண்டுமா?

பாப்தாதா தற்சமயம் அனைத்து குழந்தைகளையும் இப்பொழுதைய சங்கமயுகத்தின் பிராட்திகளின் பலன் ரூபத்தில் பார்க்க விரும்புகிறார். முயற்சி வெகுகாலமாக செய்திருக்கிறீர்கள். இப்பொழுது முயற்சி இயல்பாக இருக்க வேண்டும். கடினமாக செய்யக்கூடிய முயற்சி இருக்க வேண்டாம். கடைசி வரை முயற்சி செய்வதின் கடின உழைப்பை செய்து கொண்டே இருப்பீர்களா என்ன? சங்கமயுகத்தின் பிராப்திகளின் பலனை அனுபவம் இப்பொழுது செய்யவில்லை என்றால் எப்பொழுது செய்வீர்கள்? எதிர்காலத்தின் பிராட்தி வேறு ஆகும். அதுவோ உங்களுடைய இந்த நேரத்து முயற்சியின் பலனின் நிழலாகும். அதுவோ உங்களின் பின்னாலேயே தானாக வரும் ஆனால் விசேஷமான விஷயம் இந்த நேரத்தின் பலனை பிராட்தி செய்வதாகும். யாராவது எப்படி இருக்கிறீர்கள். என்ன நிலைமை? என்று கேட்கிறார்கள் என்றால் முயற்சி நடந்து கொண்டிருக்கிறது என்று இது வரையிலும் அப்படி கூறிக் கொண்டே இருக்காதீர்கள். முயற்சியோ இருக்கவே இருக்கிறது ஆனால் முயற்சி செய்வதின் பலனை இப்பொழுது அனுபலம் செய்யுங்கள். அது அனைத்து சக்திகள் நிரம்பி அனைத்து ஞானம் நிரம்பிய, அனைத்து தடைகளை அழிப்பவராக ஆவது என்ற இந்த நேரத்தின் பிராப்தியின் பலன் எதிர்காலத்திலும் இயல்பாகவே பிராப்தி ஆகும். எதிர்காலத்தில் முயற்சி இருக்காது, ஆனால் பிராப்தி மட்டும் இருக்கும். அப்படி இப்பொழுது இன்னும் இருக்கும் காலத்தில் பலன் சொரூபத்தின் விசேஷ அனுபவம் செய்யுங்கள். பலன் என்று கூறுகிறீர்கள் என்றால், அது முயற்சி செய்வதின் பலனாகும். முயற்சி செய்திருக்கிறீர்கள், அந்த முயற்சி செய்ததின் அனுசாரம் தான் பலனின் அனுபவம் செய்ய முடியும் ஆனால் பாப்தாதா குழந்தைகளிடமிருந்து என்ன விரும்புகிறார்? பாப்தாதா நம்மிடமிருந்து என்ன விரும்புகிறார் என்று கேட்கிறீர்கள் இல்லையா? எனவே பாப்தாதா இதைத் தான் விரும்புகிறார். இப்பொழுது கொஞ்ச காலத்திற்காக முயற்சியின் பலன் சொரூபம் ஆகி விடுங்கள். ஆக முடியுமா அல்லது முயற்சி செய்யும்

கடின உழைப்பு பிடித்திருக்கிறதா? பலன் அடைபவராக ஆவீர்களா? இப்பொழுது முயற்சி செய்து கொண்டிருக்கிறேன், முயற்சி செய்வது முடிவடைந்து விடும், செய்து காண்பிப்போம் என்ற இந்த வார்த்தைகள் அகன்று விட வேண்டும். செய்து காண்பிப்போம் என்று என்ன இருக்கிறது. காண்பியுங்கள். பிறகு எப்பொழுது காண்பிப்பீர்கள். விநாஷ நேரச் காண்பிப்பீர்களா? இதற்கான மிக சுலபமான விதி -இப்பொழுது மாஸ்டர் வள்ளல் ஆகுங்கள். தந்தையிடமிருந்து பெற்றீர்கள். மேலும் பெற்றுக் கொண்டே இருங்கள் ஆனால் ஆத்மாக்களிடமிருந்து, இதைச் செய்தார் என்றால் நன்றாக இருக்கும், என்று பெறுவதற்கான பாவனையை வைக்காதீர்கள். இவர் மாறினார் என்றால் நான் மாறுவேன் என்பது பெறுவதற்கான பாவனை ஆகும். இந்த மாதிரி நடந்தால், இந்த மாதிரி நடக்கும், இதுவும் பெறுவதற்கான பாவனையே ஆகும். அந்த மாதிரி இருந்தால், என்பது வேண்டாம். அந்த மாதிரி செய்து காண்பிக்க வேண்டும். ஆகி விடும் என்பது வேண்டாம். ஆகத் தான் வேண்டும், மேலும் நான் செய்ய வேண்டும். நான் வைப்ரேஷன் கொடுக்க வேண்டும். நான் ஆனால் இரக்கூ மனமுடையவர் ஆக வேண்டும். நான் குணங்களின் சகயோகம் கொடுக்க வேண்டும், நான் சக்திகளின் சகயோகம் கொடுக்க வேண்டும். மாஸ்டர் வள்ளல் ஆகுங்கள். பெற வேண்டும் என்றால் ஒரு தந்தையிடமிருந்து பெறுங்கள், ஒருவேளை மற்ற ஆத்மாக்களிடமிருந்து கிடைக்கிறது என்றாலும் தந்தையால் கொடுக்கப்பட்டது தான் கிடைக்கும். எனவே வள்ளல் ஆகி பெரிய மனமுடையவர் ஆகுங்கள். கொடுத்துக் கொண்டே இருங்கள், கொடுக்கத் தெரியுமா? அல்லது பெற மட்டும் தான் தெரியுமா? இப்பொழுது என்ன சேமித்திருக்கிறீர்களோ அதைக் கொடுங்கள். பிராமண ஆத்மாக்களுக்கும் மாஸ்டர் வள்ளல் ஆகுங்கள். மற்றவர்கள் கொடுத்தால்தான் நான் கொடுப்பேன் என்று அப்படி வேண்டாம். நான் கொடுக்க வேண்டும். உங்களிடம் பொக்கிஷம் இருக்கிறதா? நிரம்பி இருக்கிறதா? குணங்களால் நிரம்பியிருக்கிறீர்களா? சக்திகளினால் நிரம்பி இருக்கிறீர்களா? இருக்கிறது என்றால் ஏன் கொடுப்பதில்லை? தனக்காக மறைத்து வைத்திருக்கிறீர்களா என்ன? எப்பொழுது பொக்கிஷங்களால் நிரம்பியிருக்கிறீர்கள் என்றால். இதை இவர் ஏன் செய்கிறார்? இதை ஏன் கூறுகிறார்? என்று இப்படி யோசிக்காதீர்கள் இரக்க மனமுடையவராகி தன்னுடைய குணங்களின், தன்னுடைய சக்திகளின் சகயோகம்

கொடுங்கள். இதைத் தான் மாஸ்டர் வள்ளல் என்று கூறுவது மகா சகயோகி. சகயோகி கூட இல்லை, மகா சகயோகி ஆகுங்கள். மகா வள்ளல் ஆகுங்கள். அப்படி பாப்தாதா என்ன விரும்புகிறார் என்று புரிந்து கொண்டீர்களா?

பாப்தாதா இதுவரையிலும் குழந்தைகளின் முயற்சி செய்வதில் கடின உழைப்பைப் பார்க்க முடியாது. வைர விழா முடிவடைந்தது, மேலும் வைரம் இதுவரையிலும் கரையற்றதாக ஆவதின் முயற்சியிலேயே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. வைர விழா என்றால் ஒவ்வொரு பிராமண ஆத்மாவும் வைரம் பிரகாசித்துக் கொண்டிருக்க வேண்டும். எங்களுக்கு வைர விழா இல்லை, அது தாதிகளினுடையது என்று நீங்கள் நினைக்கலாம். உங்களினுடையதா? அல்லது தாதிகளினுடையதா?, யாருடையது? பக்ஒத்தின் ஸ்தாபனை காரியத்தின் வைர விழா. தாதிகளினுடையது மட்டுமில்லை, ஸ்தாபனை காரியத்தின் வைர விழா அப்படி நீங்கள் அனைவரும் இரண்டு ஆண்டுகள் ஆனவர்கள் ஆனாலும், பன்னிரெண்டு வருடங்கள் ஆனவர்களானாலும் அல்லது ஐம்பது வருடங்கள் ஆனவர்களானாலும் அனைவரும் ஸ்தாபனை காரியத்தில் பொறுப்பாளர்களாக இருக்கிறீர்கள் அல்லவா? அல்லது இல்லையா? பொறுப்பாளர்களா? பிராமணன் என்றாலே பிரம்மா பாபாவுடன் ஸ்தாபனை காரியத்தின் பொறுப்பான ஆத்மா. அவர்களைத் தான் பிரம்மா குமார் அல்லது பிரம்மா குமாரி என்று கூற முடியும். அப்படி அனைவரும் பிரம்மா குமார், பிரம்மா குமாரிகளா அல்லது முயற்சி செய்யும் குமார். குமாரிகளா? என்னவாக இருக்கிறீர்கள்? பிரம்மா குமார், பிரம்மா குமாரிகள் என்றால் ஜென்மம் எடுத்தீர்கள். மேலும் பிரம்மா பாபாவின் துணைவர்களாக ஸ்தாபனைக் காரியத்தில் பொறுப்பாளர் ஆத்மா ஆனீர்கள். நானோ இப்பொழுது புதியவன், நாங்களோ சிறியவர்கள் என்று அப்படி நினைக்காதீர்கள் ஆனால் நேரத்திற்குத் தகுந்தாற்போல், அதாவது நேரத்தின் முடிவு அருகாமையில் இருக்கிறது என்றால் சிறியவர்களும், புதியவர்களும் அதுவும் பிராமணர்கள் என்றால், இந்த அளவு தீவிர முயற்சி செய்தே தான் ஆக வேண்டும். ஒருவேளை சத்ரியன் என்றால் அதிலிருந்து விடுபட்டு விட்டீர்கள் ஆனால் பிராமணன் என்றால் பிராமணனிலிருந்து தேவதை ஆகுபவர் என்று கூறப்படுகிறது. சத்ரியனிலிருந்து தேவதை என்று அப்படியில்லை.

எனவே பிராமண ஆத்மாக்களுக்கு ஸ்தாபனையின் பொறுப்பாளர் ஆகத்தான் வேண்டும். நீங்கள் இருப்பதே கருவியாக, பொறுப்பாளராகத்தான். எனவே இப்பொழுது மாஸ்டர் வள்ளல் ஆகுங்கள். தானம் செய்யவில்லை என்றாலும் சகயோகம் கொடுங்கள். பிராமணன், பிராமணனுக்கு தானம் செய்ய முடியாது. சகயோகம் கொடுக்க முடியும். அப்படி மகா வள்ளல் மற்றும் மகா சகயோகி ஆகுங்கள். இப்பொழுது ஒரு வருடம் நிரம்பியவராக இருந்தாலும் கூட நேரத்தின் அனுசாரம் இப்பொழுது குழந்தைப் பருவத்து விஷயங்களை முடிவு கட்டுங்கள். ஏனென்றால் அனைத்து குழந்தைகளும் வானபிரஸ்த நிலையின் அருகில் இருக்கிறீர்கள். நேரத்தின் வேகத்திற்கு ஏற்றபடி, நாடகத்தின் நியமப்படி இப்பொழுது அனைவரும் வானபிரஸ்த நிலையின் அருகில் இருக்கிறீர்கள்.

குழந்தைகளுக்கு தந்தை மேல் உள்ளப்பூர்வமான அன்பு இருக்கிறது என்று பாப்தாதா தெரிந்திருக்கிறார். உள்ளப்பூர்வமான அன்பு இருக்கிறது இல்லையா? அல்லது மேலோட்டமான அன்பா? உள்ளப்பூர்வமான அன்பு இருக்கிறது அதனால் தான் ஓடி வந்திருக்கிறீர்கள் இல்லையா? பாருங்கள், மிகப் பெரிய ஹாலில் எல்லைக்கப்பாற்பட்ட தந்தையின் குழந்தைகள் எல்லைக்கப்பாற்பட்ட ரூபத்தில் அமர்ந்திருக்கிறார்கள். இந்த ஹால் நன்றாக இருக்கிறதா? அல்லது மிக தூரமாக அனுபவம் ஆகிறதா? பாருங்கள். அமர்ந்திருப்பதோ தூரமாகத் தான் ஆனால் பாப்தாதா தன்னுடைய இதயத்தின் மிகப் பெரிய திரையில் தூரத்தில் அமர்ந்திருக்கும் குழந்தைகள் உங்கள் அனைவரையும் மிக அருகில் பார்த்துக் கொண்டிருக்கிறார். தூரத்தில் பார்த்துக் கொண்டிருக்கவில்லை. பாப்தாதாவின் இதயத்தின் திரை மிகப் பெரியது இன்று வரையிலும் அறிவியலைச் சேர்ந்தவர்கள் கூட இவ்வளவு பெரிய திரையைக் கண்டுபிடிக்கவில்லை. எனவே நீங்கள் தூரத்தில் அமர்ந்திருக்கவில்லை, பாப்தாதாவின் இதயத்தில் அமர்ந்திருக்கிறீர்கள். அந்த மாதிரி நினைக்கிறீர்களா? நாற்காலியில் அமர்ந்திருக்கிறீர்களா, தரையில் அமர்ந்திருக்கிறீர்களா அல்லது இதயத்தில் அமர்ந்திருக்கிறீர்களா? காட்சியே மிக நன்றாக அழகாகத் தென்படுகிறது. முழுமையாக கடைசி வரை நிரம்பியிருக்கிறது அல்லது

கொஞ்சம் காலி இருக்கிறது? பின்னால் கொஞ்சம் காலியாக இருப்பதாக பாப்தாத பார்த்தார்.

பாருங்கள், உங்கள் அனைவருக்கும் பாப்தாதா வேலை கொடுத்திருந்தார். நீங்கள் மறந்திருப்பீர்கள் ஆனால் பாப்தாதாவிற்கு நினைவு இருக்கிறது. எந்த வேலை கொடுத்திருந்தோம்? கோபத்திலிருந்து விடுபடுவதற்கானது. இன்று அதைக் கேட்க மாட்டோம். சந்திப்பதற்கான முதல் வாய்ப்பை எடுத்திருக்கிறீர்கள் இல்லையா? எனவே இன்று கோபத்திலிருந்து விடுபடுவதைப் பற்றி கேட்டோம் என்றால் மனமுடைந்து போய் விடுவீர்கள். பாப்தாதாவிற்கு ரிசல்ட் தெரியும். பின்பு கேட்போம். உங்கள் அனைவரின் ரிசல்ட்டையும் அங்கே பெற்றுக் கொள்வோம். இன்று விட்டு விடுகிறோம். 9-லட்சத்தைத் தயார் செய்து காண்பியுங்கள் என்ற வேலை கொடுத்திருந்தோம். ஒவ்வொரு மண்டலத்திற்கும் கூறியிருந்தோம், நினைவிருக்கிறதா? அப்படி எந்த மண்டலம் 9-லட்சம் தயார் செய்திருக்கிறார்கள்?

இந்த தடவை வங்காளம் மற்றும் பீகாரைச் சேர்ந்தவர்களுக்கு சேவைக்கான வாய்ப்பாகும். அப்படியானால் வங்காளம், பீகாரைச் சேர்ந்தவர்கள் 9-லட்சத்தை தயார் செய்திருக்கிறார்களா? அமைதியாக இருக்கிறார்கள், ஒன்றுமே சொல்லவில்லை. சரி. ஒரு மண்டலம் செய்ய முடியவில்லை என்றாலும், அனைத்து மண்டலங்களும் பாரதம் மற்றும் வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள் அனைவரும் சேர்ந்து ஒன்பது லட்சம் தயார் செய்திருக்கிறீர்களா? வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள் கூறுங்கள். 9-லட்சம் தயாரா? பாப்தாதாவோ தன்னுடைய தேதியை நிர்ணயம் செய்கிறார். மேலும் அதே நிர்ணயம் செய்த தேதியில் வருகிறார். நீங்களும் அனைத்து விஷயங்களின் தேதியை நிர்ணயம் செய்கிறீர்கள். இந்த ஹால் எதுவரை கட்டி முடிக்கப்படும். திறப்பு விழா நிகழ்ச்சி எப்பொழுது நடக்கும் என்று இந்த தேதியை நிச்சயம் செய்கிறீர்கள் தான் இல்லையா? அப்படி இதற்கான 9-லட்சம் தயார் செய்வதற்கு தேதி எது? நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறதா? விநாசத்தின் முடிவிலா அல்லது அதற்கு முன்பா? என்ன நடக்கும்? என்ன நினைத்திருக்கிறீர்கள்? எந்த தேதி? ஏதாவது தேதி இருக்கிறதா அல்லது இப்பொழுது இன்னும் நிர்ணயம் செய்யவில்லையா? இதையும் தந்தை

செய்ய வேண்டுமா? நீங்கள் தான் செய்ய வேண்டும். நல்ல காரியத்தில் காலம் தாழ்த்தாதீர்கள் என்று பாப்தாதா கூறுவார். பின்பு என்ன செய்வீர்கள்? சரி. இந்த சீசனின் கடைசி வரை ஆகி விட்டால் கூட நல்லது தான். அந்த அளவு தைரியம் இருக்கிறதா? வள்ளலாக மட்டும் ஆகி விடுங்கள். ஒருவேளை வள்ளலாகி விட்டீர்கள் என்றால் வள்ளலின் பாவனை மூலம் உங்களுடைய ராயல் குடும்பம் மற்றும் நெருக்கமான பிரஜை வெகுவிரைவில் உருவாகி விடுவார்கள். அவர்களோ காத்துக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் நிரந்தர வள்ளலாக ஆவதற்கான நேரம் மட்டும் தான் தேவை. மகான் சகயோகி ஆவதற்கான நேரம் மட்டும் தான். அதிகமான பொக்கிஷத்தைத் தனக்காக மற்றும் தன்னுடைய சேவைக்காக மட்டும் ஈடுபடுத்துகிறீர்கள். அவரவர்களின் சேவையில் வேலையில் அதிகமான நேரத்தை உலக ராஜா ஈடுபடுத்துகிறீர்கள். மகான் வள்ளலாகி, எல்லைக்கப்பாற்பட்ட வள்ளலாகி உலக பூமியின் கோளத்தின் மேல் நின்று கொண்டு, எல்லைக்கப்பாற்பட்ட சேவையில் அதிர்வலைகளைப் பரப்பங்கள். ஆக வேண்டும், மண்டலத்திற்கு மட்டும் அல்லது அவரவர்களின் சேவையின் வட்டத்திற்கு மட்டும் ராஜா ஆக வேண்டாம். நீங்கள் உலகிற்கு நன்மை செய்பவர்கள். இப்பொழுது எல்லைக்கப்பாற்பட்ட நிலையில் செல்லுங்கள். எல்லைக்கப்பாற்பட்ட நிலையில் செல்வதினால் எல்லைக்குட்பட்ட விஷயங்கள் தானாக முடிந்து விடும். மனோபலம் மிக உயர்ந்த பலமாகும். அதை உபயோகிப்பதில்லை. வாய்மொழி, சம்மந்தம் நெருக்கம் ஆகியவற்றில் சேவையில் பிஸியாக இருக்கிறீர்கள். இப்பொழுது மனோபலத்தை அதிகரியங்கள். எல்லைக்கப்பாற்பட்ட சேவையை இப்பொழுது வாய்மொழி அல்லது உறவு, சகயோகத்தினால் செய்கிறீர்கள், அதை மனோபலத்தினால் செய்யுங்கள். அப்படி மனோபலத்தின் எல்லைக்கப்பாற்பட்ட சேவையை ஒருவேளை நீங்கள், எல்லைக்கப்பாற்பட்ட உள்உணர்வு மூலம், மனோபலம் மூலமாக உலக உருண்டையின் மேல் உயர்ந்த நிலையில் நிலைத்திருந்து தந்தையுடன் பரந்தாமத்தின் நிலையில் நிலைத்திருந்து கொஞ்ச நேரமாவது இந்த சேவையை செய்தீர்கள் என்றால் அதனுடைய பலன் உங்களுக்கு அனேக மடங்கு அதிகமாக கிடைக்கும்.

இன்றைய நாட்களின் நேரம் மற்றும் சூழ்நிலைக்கேற்றபடி இறுதி சேவை இந்த மனம் மூலம் மற்றும் மனோபலத்தின் சேவை தான். இதற்கான பயிற்சியை இப்பொழுதிருந்து செய்யுங்கள். வாய்மொழி மூலமாகவும் மற்றும் உறவு நெருக்கம் மூலமாகவும் சேவையோ செய்கிறீர்கள் ஆனால் இப்பொழுது இந்த மனம் மூலம் சேவையின் பயிற்சி மிக அவசியமாகும். இதனுடைய பயிற்சியையும் கூடவே செய்து கொண்டே இருங்கள். என்ன செய்ய வேண்டும் என்று புரிந்ததா? இந்த மனசேவை எது ஸ்தாபனையின் தொடக்கத்தில் தந்தையின் மனசக்தி மூலமாக ஆன்மீக ஈர்ப்பு குழந்தைகளை ஈர்த்தது. அந்த மாதிரியான வர்ண ஜாலங்களைக் காண்பிக்கும். மேலும் மனசேவையின் பலன் சொரூபமாக அதே ஆத்மாக்கள் இப்பொழுதும் அஸ்திவாரமாக இருக்கிறார்கள் என்பதைப் பார்க்கிறீர்கள். நாடகப்படி இது தந்தையின் மனசக்தியின் ஈர்ப்பின் எடுத்துக்காட்டாக அவர்கள் அந்த அளவு உறுதியாக இருக்கிறார்கள். அப்படி இறுதியிலும் இப்பொழுது தந்தையுடன் சேர்ந்து உங்களுடைய மனசக்தியின் ஆகர்ஷணம், ஆன்மீக ஆகர்ஷணத்தினால் எந்த ஆத்மாக்கள் வருவார்களோ அவர்கள் நேரத்திற்கு ஏற்றபடி குறைந்த நேரத்தில் குறைந்த உழைப்பில் பிராமண பரிவாரத்தின் வளர்ச்சி, முன்னேற்றத்திற்குப் பொறுப்பாளர் ஆவார்கள். தொடக்கத்தில் பார்த்த அதே அதிசயக் காட்சிகளை இறுதியிலும் பார்ப்பீர்கள். எப்படி ஆரம்பத்தில் பிரம்மா பாபாவை சாதாரணமாகப் பார்க்காமல் கிருஷ்ணனின் ரூபத்தில் பார்த்து அனுபவம் செய்தார்கள். காட்சி கிடைப்பது வேறு ஆகும் ஆனால் சாட்சாத் சொரூபத்தில் கிருஷ்ணரைத் தான் பார்த்தார்கள். அவருடன் போவதும், வருவதும், உணவருந்துவதுமாக இருந்தார்கள். அந்த மாதிரி தான் இல்லையா? அப்படி ஸ்தாபனையை ஒரு தந்தை செய்தார். டைசியில் நீங்கள் குழந்தைகளும் களின் எதிரில் சாட்சா தேவி தேவதைகளாகத் தென்படுவீர்கள். இவர் ஒரு சாதாரணமானவர் என்று அவர்கள் நினைக்கவே மாட்டார்கள். அதே பூஜைக்குரிய நிலையின் பிரபாவத்தை அனுபவம் செய்வார்கள். அப்பொழுது தான் தந்தையையும் சேர்த்து உங்கள் அனைவரின் பிரத்யக்ஷதாவின் பங்கு வெளியாகும். இப்பொழுது தனியாக தந்தைக்குப் பிரத்யக்ஷதா செய்ய வேண்டாம். குழந்தைகளுடன் சேர்ந்து பிரத்யக்ஷம் ஆக வேண்டும். எப்படி ஸ்தாபனையில் பிரம்மா பாபாவுடன் சேர்ந்து விசேஷமாக

பிராமணர்களும் ஸ்தாபனைக்குப் பொறுப்பாளர் ஆனார்கள் அதே போல் முடிவின் நேரத்திலும் தந்தையுடன் சேர்ந்து நெருக்கமாக குழந்தைகளும் தேவதை ரூபத்தில் அப்படியே சாட்சாத் அனுபவம் செய்வார்கள். இதற்காக இன்று நாம் கூறிய அந்த பலன் சொரூபத்தில் நிலைத்திருங்கள். சிறுசிறு விஷயங்களை விட்டு விடுங்கள். இப்பொழுது உயர்ந்த நிலைக்குச் செல்லுங்கள். விசேஷ பலன் சொரூபத்தின் சாட்சாத்காரத்தை நீங்களும் செய்யுங்கள், மற்றவர்களுக்கும் செய்வியுங்கள். பரிந்ததா? இப்பொழுது அனைவரும் உங்களுடைய அனாதி சொரூபத்தில் ஒரு நொடியில் நிலைத்திருக்க முடியுமா? ஏனென்றால் கடைசியில் ஒரு நொடிக்கான விசில் தான் ஊதப்படும். எனவே இப்பொழுதிலிருந்தே பயிற்சி செய்யுங்கள். அதிலேயே நிலைத்திருந்து விடுங்கள் (டிரில் செய்வித்தார்). நல்லது.

நாலாபுறங்களிலுமுள்ள அனைத்து குழந்தைகளுக்கு எப்பொழுதும் பாக்கியத்தின் ரேகைகளை வெளிப்பட்ட ரூபத்தில் நினைவில் வைக்கக்கூடிய ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் தன்னுடைய சங்கமயுகத்து அனைத்து பிராப்தி சொரூபத்தின் பலனை அனுபவம் செய்டக்கூடிய, எப்பொழுதும் மாஸ்டர் வள்ளல் மகாசகயோகி ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் மனசக்தியின் சேவை மூலமாக உலக ஆத்மாக்களுக்கு நன்மை செய்யும் ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

வரதானம்: இந்த கடைசி பிறவியில் கிடைத்திருக்கும் அனைத்து சக்திகளையும் உபயோகிக்கக்கூடிய மனோபலம் நிரம்பியவர் ஆகுக!

இந்த இனிமையான நாடகம் மிக நன்றாக ஏற்கனவே உருவாக்கப்பட்டு நடந்து கொண்டிருக்கிறது, இதை யாரும் மாற்ற முடியது ஆனால் நாடகத்தில் இந்த உயர்ந்த பிராமண பிறவிக்கு மிகுந்த பக்தி கிடைத்திருக்கிறது. தந்தை வில் (உயில்) செய்திருக்கிறார். எனவே வில் பவர் (மனோபலம்) இருக்கிறது. இந்த பலத்தை உபயோகப்படுத்துங்கள். எப்பொழுது விரும்புகிறீர்களோ இந்த உடலின் பந்தனத்திலிருந்து விலகி கர்மாதீத் நிலையில் நிலைத்திடுங்கள். விலகியிருக்கும் அதிகாரி ஆவேன், தந்தை மூலமாக பொறுப்பாளர் ஆத்மாவாக ஆகியிருக்கிறேன் என்ற இந்த நினைவு மூலம் மனம், புத்தியை

ஒருமுகப்படுத்திவிடுங்கள், அப்பொழுது தான் மனோபலம் நிரம்பியவர் என்பதாகும்.

சுலோகன்: உள்ளப்பூர்வமாக சேவை செய்தீர்கள் என்றால் ஆசீர்வாதங்களின் கதவு திறந்து விடும்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 28.11.1997 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# எல்லைக்கப்பாற்பட்ட சேவையின் சாதனம்-ஆன்மீக பெர்சனாலிட்டி (தனித்தன்மை) மூலமாக பார்வையினால் நன்மை செய்வது!

இன்று பாப்தாதா தன்னுடைய அனேக கல்பமாக சந்திப்பைச் செய்யக்கூடிய செல்லமான, வெகுகாலத்திற்குப் பிறகு கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளோடு மீண்டும் சந்திப்பதற்காக வந்திருக்கிறார். அவ்பக்த சந்திப்பபோ எப்பொழுதுமே செய்து கொண்டு தான் இருக்கிறீர்கள் ஆனால் அவ்யக்கத்திலிருந்து வியக்த ரூபத்தில் சந்திப்பதற்காக அனைத்து பாரதத்தை மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த குழந்தைகள் மீண்டும் தன்னுடைய வீட்டிற்கு வந்து சேர்ந்து விட்டார்கள். நாலாபுறங்களிலும் குழந்தைகள் அவரவர்களின் ஸ்தானங்களிலும் சந்திப்பை செய்து கொண்டிருக்கிறார்கள் என்று பாப்தாதா பார்க்கிறார். இந்த சந்திப்பு ஆன்மீக-தெய்வீகமான சந்திப்பு ஆகும். இந்த சந்திப்பு பாப்தாதா மற்றும் குழந்தைகளின் அன்பின் நடைமுறை சொரூபம் ஆகும்.

இன்று பாப்தாதா தன்னுடைய குழந்தைகளின் ஆன்மீக பெர்சனாலிட்டியை (தனித்தன்மையை பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒவ்வொரு குழந்தையின் ஆன்மீக பெர்சனாலிட்டி எவ்வளவு உயர்ந்ததாக இருக்கிறது. அந்த மாதிரி ஆன்மீக பெர்சனாவிட்டி முழுக் கல்பத்தில் வேறு யாருக்கும் கிடையாது ஏனென்றால் உங்கள் அனைவரின் பெர்சனாலிட்டியை உருவாக்குபவர் உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தை ஆவார். நீங்களும் உங்களுடைய ஆன்மீக பெர்சனாலிட்டியை தெரிந்திருக்கிறீர்கள் தான் இல்லையா? அனைத்தையும் விட மிகப் பெரிய பெர்சனாலிட்டியாவது களவு மற்றும்

எண்ணத்தில் கூட முழுமையான தூய்மையின் பெர்சனாலிட்டி ஆகும். வரிசைக்கிரமமாக இருக்கிறார்கள், ஆனால் இருந்தாலும் உலகின் அனைத்து ஆத்மாக்களையும் விட உயர்ந்தவர்களாக இருக்கிறார்கள். அப்படி பாப்தாதா ஒவ்வொருவரின் நெற்றி மூலமாக பெர்சனாவிட்டியின் ஜொலிப்பைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். தூய்மையின் கூடவே அனைவரின் முகம் மற்றும் நடத்தையில் கூட ஆன்மீக பெர்சனாலிட்டி இருக்கிறது. வேறு என்ன பெர்சனாலிட்டி இருக்கிறது? யார் பொக்கிஷங்களினால் நிரம்பியவராக இருக்கிறார்களோ அவர்களுக்கும் பெர்சனாலிட்டி இருக்கிறது ஆனால் எவ்வளவு தான் மிகப் பெரிய சம்பன்ன ஆத்மாக்களாக இருந்தாலும், உங்கள் எதிரில் அந்த சம்பன்ன ஆத்மாக்களும் ஒன்றுமே இல்லை. ஏனென்றால் அவர்களும் அழியாத சுகம், சாந்தியின் பொக்கிஷங்களினால் காலியாக இருக்கிறார்கள். உங்களிடம் என்ன செல்வம் இருக்கிறதோ அதன் எதிரில் வெளி உலகில் பலகோடிக்கான அதி தி கூ தந்தையிடமிருந்து சுகம், சாந்தியை கேட்பவர்கள் தான், மேலும் நீங்கள் எப்பொழுதும் அழியாத பொக்கிஷங்களினால் நிரம்பியவர்களாக இருக்கிறீர்கள். அந்த பொக்கிஷங்கள் இன்று இருக்கிறது என்றால் நாளை இருக்காது ஆனால் உங்களுடைய பொக்கிஷத்தை யாரும் பறிக்க முடியாது. மேலும் எந்த ஆத்மாவும் பொக்கிஷத்தை அசைக்கவே முடியாது. குறைவில்லாதது, இடைவிடாதது. அந்த மாதிரி பெர்சனாலிட்டி உள்ளவர்கள் நீங்கள் குழந்தைகள் ஆவீர்கள். அனைவரையும் விட உயர்ந்த பெர்சனாலிட்டி உள்ளவர்களும் உலகில் இருக்கிறார்கள். இருந்தும் அவர்களுக்கு ஆத்மாக்கள் மூலமாக அழியும் செல்வம் மூலமாக அழியும் பதவி மூலமாக டெர்சனாலிட்டி உருவாகிறது மற்றும் அப்படி அழைக்கப்படுகிறார்கள் ஆனால் உங்களை உயர்ந்ததிலும் உயர்ந்த பரமாத்மா உயர்ந்த பெர்சனாலிட்டி உள்ளவர்களாக ஆக்கியிருக்கிறார். அப்படி தன்னுடைய உயர்ந்த பெர்சனாலிட்டியின் ஆன்மீக போதை இருக்கிறதா? இருக்கிறது என்றால் கையை அசையுங்கள்.

இவ்வளவு உயர்ந்த பெர்சனாலிட்டி உள்ள குழந்தைகளைப் பார்த்து பாப்தாதாவிற்கு எவ்வளவு குஷி ஏற்படுகிறது. உங்களுக்கும் ஏற்படுகிறதா? பாப்தாதா குழந்தைகளின் அந்த மாதிரி உயர்ந்த நிலையைப் பார்த்து என்ன பாடல் பாடுகிறார் என்று

தெரிந்திருக்கிறீர்களா? நீங்களும் பாடுகிறீர்கள், தந்தையும் பாடுகிறார். தந்தையின் பாடலைக் கேட்க முடிகிறதா அல்லது டேப் ரிகார்டரில் ஒலிக்கும் பாடலைத் தான் கேட்கிறீர்களா? பாப்தாதாவின் டேப் ரிகார்டர் வித்தியாசமாக இருக்கும் இல்லையா, தானாக இயங்கக்கூடியது. இயக்குவதற்காக கஷ்டப்பட வேண்டியதில்லை. மேலும் இதயத்தின் பாடலை இதயமுள்ளவர்கள் தான் கேட்க முடியும் காதுகள் மட்டும் உள்ளவர்கள் அல்ல, இதயமுள்ளவர்கள் தான் அப்படி நீங்கள் அனைவரும் இதயம் உள்ளவர்கள் தான் இல்லையா? தில்வாடா கோயிலிலும் உங்களுடைய சிலை இருக்கிறது தான் இல்லையா? அனைவரும் உங்களுடைய சிலைகளைப் பார்த்திருக்கிறீர்களா? பய்தாதாவோ எப்பொழுதும் குழந்தைகளின் சித்திரத்தையும் சரித்திரத்தையும் பார்த்துக் கொண்டே இருக்கிறார். அப்படி இன்று பெர்சனாலிட்டியைப் பார்த்துக் கொண்டிருந்தோம். எப்பொழுதும் இந்த பெர்சனாலிட்டியின் நினைவு வெளிப்பட்டுக் கொண்டே இருக்கட்டும். இருக்கத் தானே செய்கிறது என்று அப்படி வேண்டாம். இருக்கிறது. தென்படட்டும். அனுபவத்தில் வரட்டும். எப்பொழுதும் அந்த மாகிரி பெர்களாலீட்டியில் இருப்பவர்களின் அடையாளம். என்னவாக இருக்கும்? இவர் தன்னுடைய பெர்சனாலிட்டியில் இருக்கிறார் என்று எந்த அடையாளத்தினால் பரிந்து கொள்ள முடியும்? ஒருவேளை இந்த ஆன்மீக பெர்சனாலிட்டி வெளிப்படும் ரூபத்தில் இருக்கிறது என்றால் அவருடைய கண், அவருடைய முகம், நடத்தை, எண்ணம் மற்றும் உறவு அனைத்தும் பிரசன்னம் மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும். எப்பொழுதும் மகிழ்ச்சி நிறைந்தவர் கேள்வி நிறைந்தவர் அல்ல, மகிழ்ச்சி நிறைந்தவர் ஒருவேளை கேள்வி நிறைந்தவராக இருக்கிறார் என்றால் அவருடைய நடத்தை கூட பெர்சனாலிட்டி உடையதாக இருக்காது. முகத்தில் கூட பிரசன்னத்தின் ஜொலிப்பு இருக்காது. என்ன ஆனாலும் பெர்சனாலிட்டி உள்ளவரின் பிரசன்னதாவை மறைக்க முடியாது. உள்ளடங்கிப் போக முடியாது. மகிழ்ச்சி நிறைந்த ஆத்மா எப்படிப்பட்ட ஆத்மாவையும் பிரச்சனை உள்ள, அமைதியில்லாதவராக இருந்தாலும் அவரை தன்னுடைய பிரசன்னம் நிறைந்த பார்வையினால் பிரசன்னம் ஆக்கி விடுவார். எப்படி தந்தையின் மகிமையாக "பார்வையாலேயே நன்மை செய்பவர்" என்றிருக்கிறது. இது தந்தையின் மகிமை மட்டுமல்ல, உங்களுக்கும் இதே மகிமை தான் இருக்கிறது. மேலும். இப்பொழுது நேரத்திற்கு ஏற்றாற்போல் எவ்வளவு

நேரம் அருகில் வந்து கொண்டிருக்கிறது என்றால் பார்வையாலேயே நன்மை செய்வதற்கான சேவை செய்யும் நேரமும் வரும். ஏழு நாள் பாடம் இருக்காது, ஒரு பார்வை மூலமாகவே மகிழ்ச்சி நிறைந்தவராக ஆகி விடுவார். மனதின் விருப்பம் உங்கள் மூலமாக நிறைவேறிவிடும். அதனால் நீங்கள் அனைவரும் என்ன நினைக்கிறீர்கள்? சேவையின் ஆகி ரத்தினங்கள் என்ன நினைக்கிறார்கள்? அந்த மாதிரியான சேவையை செய்ய முடியும் இல்லையா?

இப்பொழுது பாருங்கள், நீங்கள் 10-வருடங்கள் சேவை செய்தீர்கள். அல்லது அதை விட அதிகமாகவும் செய்திருப்பீர்கள், சிலருக்கு ஓரிரு வருடம் குறைவாகவும் இருக்கும், சிலருக்கு அதிகமாகவும் இருக்கும். இப்பொழுது நீங்கள் உங்களுடன் இருப்பவர்களுக்கு இந்த சேவையை கற்றுக் கொடுத்திருக்கிறீர்கள். மேலும் பொறுப்பாளராகவும் ஆக்கியிருக்கிறீர்கள். இப்பொழுது நீங்கள் என்ன செய்தீர்கள்? அந்த சேவையை அவர்களும் செய்து கொண்டிருக்கிறார்கள். நீங்கள் ஆதி ரத்தினம் என்றால் வேறுபட்ட மற்றும் மிகவும் விரும்பத்தகுந்த சேவை செய்வீர்கள் இல்லையா? இப்பொழுது பார்வையாலேயே எத்தனை பேர்களுக்கு நன்மை செய்தோம் என்ற இந்த உற்சவத்தை கொண்டாடுவீர்களா? 9-லட்சத்திற்கு எத்தனை பேரை உருவாக்கியிருக்கிறீர்கள்? இன்னும் 33-கோடியும் இருக்கிறது. அதன் எதிரில் 9-லட்சம் ஒன்றுமில்லை. விதையையோ இங்கேயே போட வேண்டும். இல்லையா? அதனால் சேவையின் ஆதி ரத்தினங்கள் இப்பொழுது எந்த அதிசயத்தை காண்பிப்பார்கள் என்று பார்க்கலாம். சேவை நிலையங்கள் உருவாக்கியிருக்கிறீர்கள். நல்ல நல்ல நிகழ்ச்சிகளைச் செய்தீர்கள். இந்த அதிசயத்தையோ காண்பித்தீர்கள், அதற்காக பல மடங்கு வாழ்த்துக்கள். இரண்டு விதமான குழந்தைகள் இருக்கிறார்கள், ஒருவர் தொடக்க காலத்தில் வந்தவர்கள், அவர்கள் ஸ்தாபனைக்கு பொறுப்பான குழந்தைகள் மேலும் நீங்கள் விசேஷமாக சேவையின் ஆரம்பக் குழந்தைகள். இந்த தாதிகள் மரத்தின் வேராக ஸ்தாபனை செய்பவர்கள். மேலும் நீங்கள் அனைவரும் (சேவையின் ஆதி ரத்தினங்கள்) முதன்முதல் தண்டு ஆவீர்கள். தண்டோ உறுதியானதாக இருக்கும் இல்லையா? அனைத்தும் தண்டின் மேல் தான் ஆதாரமாக இருக்கிறது. தண்டிலிருந்து தான் அனைத்து கிளைகளும் உருவாகின்றன. வேரிலிருப்பவர்களோ சூட்சுமத்தில் சக்தி

கொடுக்கிறார்கள் ஆனால் எது நடைமுறையில் நடக்கிறது, தென்படுகிறது, அது தண்டு தான் தென்படுகிறது. எனவே தாதிகள் இப்பொழுது குப்தமாகி (மறைவாகி) விட்டார்கள். சக்தி கொடுப்பவர்கள் மற்றும் நடைமுறையில் மேடையில் வருபவர்கள், நீங்கள் பொறுப்பாளராக ஆகியிருக்கிறீர்கள். (கௌரவப்படுத்தும் விழாவில் வந்திருக்கும் அனைத்து மூத்த சகோதரிகளை பாப்தாதா கையை உயர்த்த வைத்தார்). எனவே பாப்தாதா வேலை கொடுக்கிறார். விழாவையோ மிக நன்றாகக் கொண்டாடினீர்கள் தான் இல்லையா? அனைத்தையும் பாப்தாதா பார்த்தார். அலங்கரிப்பட்ட மூர்த்திகளைப் பார்த்தார். அந்த நேரமோ உங்களுக்கும் நாம் சைத்தன்ய மூர்த்திகளாக இருக்கிறோம் என்று இந்த ஆன்மீக அனுபவம் தான் ஏற்பட்டுக் கொண்டிருந்தது. அலங்கரிக்கப்பட்ட மூர்த்திகள் கோயில்களிலிருந்து சாந்திவனத்தில் வந்தடைந்து விட்டன என்று அப்படித்தான் தென்பட்டது.

எனவே இப்பொழுது அதிவேக சேவையைத் தொடங்குங்கள் என்று குழந்தைகளிடமிருந்து பாப்தாதா விரும்புகிறார். என்ன நடந்ததோ அது மிக நன்றாக நடந்தது. இப்பொழுது நேரத்திற்கு ஏற்றபடி ஞானம் சொல்லும் வாய்ப்பை மற்றவர்களுக்கு அதிகம் கொடுங்கள். இப்பொழுது மற்றவர்களை மைக் ஆக ஆக்குங்கள். நீங்கள் மைட் (சக்தி) ஆகி சக்தியைக் கொடுங்கள். அப்படி உங்களுடைய சக்தி மற்றும் அவர்களுடைய வார்த்தைகள் இரண்டும் சேர்ந்து இரட்டைக் காரியம் செய்யும். அப்பொழுது தான் 9-லட்சம் சுலபமாக உருவாகி விடும். இப்பொழுது நீங்கள் அனைவரும் நிகழ்ச்சியில் அமர்ந்திருந்தாலும் மேலும் இன்னும் மகாரதிகள் இருக்கிறார்கள் அவர்களையும் சேர்த்து அனைவருக்கும் சக்தி கொடுப்பது தான் இப்பொழுது மகாரதிகள் செய்ய வேண்டிய சேவை ஆகும். எல்லைக்கப்பாற்பட்ட சேவையின் மைதானத்தில் வர வேண்டும். எப்பொழுது தந்தை அவ்யக்க வதனத்தில், ஒரு ஸ்தானத்தில் அமர்ந்து நாலாபுறங்களிலுள்ள உலகின் குழந்தைகளை பாலனை செய்ய முடிகிறது. செய்து கொண்டிருக்கிறார் என்றால் நீங்கள், ஒரு ஸ்தானத்தில் அமர்ந்து தந்தைக்குச் சமமாக எல்லைக்கப்பாற்பட்ட சேவை செய்ய முடியாதா என்ன? ஆதி ரத்தினம் என்றால் தந்தையை பின்பற்றி நடப்பவர். எல்லைக்கப்பாற்ட்ட சக்தி கொடுங்கள். சில குழந்தைகள் தன்னிடமே மற்றும் அவர்களுக்குள்ளும்

எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம் எப்படி வரும் என்று கேட்கிறார்கள். தென்படுவதோ இல்லை, ஆனால் எல்லைக்கப்பாற்பட்ட சேவையில் தன்னை பிஸியாக வைத்தீர்கள் என்றால் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம் தானாக வந்து விடும். ஏனென்றால் இந்த சக்தி கொடுக்கும் சேவையை நிரந்தரமாக செய்ய முடியும். இதில் உடல் நிலைக்கான விஷயம் நேரத்திற்கான விஷயம் ஒன்றுமில்லை. இது சுலபமாக ஆகி விடும். இரவு பகலாக இந்த எல்லைக்கப்பாற்பட்ட சேலையில் ஈடு முடியும். எப்படி பிரம்மாபாபாவையும் பார்த்திருக்கிறீர்கள். இரவிலும் எப்படி கண் திறந்தது. மேலும் எல்லைக்கப்பாற்பட்ட சக்தி கொடுக்கும் சேவை நடந்து கொண்டே இருந்தது. இதைச் செய்ய வேண்டும். இதைச் செய்ய வேண்டும் என்று இந்த திட்டத்தையோ உருவாக்குகிறீர்கள் ஆனால் எல்லைக்கப்பாற்பட்ட சேவையில் பிஸியாக இருங்கள். இது தான் அனைத்தையும் விட சுலபமான சாதனம் ஆகும் ஏனென்றால் எப்பொழுது எல்லைக்கப்பாற்பட்ட நிலையில் சக்தி கொடுப்பீர்களோ அப்பொழுது அருகில் இருப்பவர்களும் இயல்பாக சக்தி எடுத்துக் கொண்டே இருப்பார்கள். இந்த எல்லைக்கப்பாற்பட்ட சக்தி கொடுப்பதினால் நல்ல வாயுமண்டலம் தானாக உருவாகி விடும். இத்தனை சென்டர்களுக்கு பொறுப்பாளராக இருக்கிறேன் அல்லது ஜோனுக்கு பொறுப்பாளராக இருக்கிறேன் என்று அப்படி யோசிக்காதீர்கள். நீங்கள் அனைவரும் மாகாணத்தின் இராஜா ஆக வேண்டுமா அல்லது உலகின் இராஜா ஆக வேண்டுமா? என்ன ஆக வேண்டும்? உலகிற்கு இராஜா தான் இல்லையா. ஆதி ரத்தினமாக இருக்கிறீர்கள் என்றால் உலகிற்கு சக்தி கொடுப்பவராக ஆகுங்கள். ஒருவேளை 20-சென்டர், 30-சென்டர் அல்லது 200, 250-சென்டர் அல்லது ஜோன் என்று புத்தியில் இருக்கிறது என்றால் இதுவும் தண்டு செய்யும் காரியம் இல்லை. இதையோ கிளைகளும் செய்ய முடியும். நீங்களோ தண்டு ஆவீர்கள். தண்டு மூலம் அனைவருக்கும் சக்தி சென்றடைகிறது. நீங்கள் அனைவரும் கூட எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம் வர வேண்டும் என்று நினைக்கிறீர்கள். இதுவும் நல்லது தான். இப்பொழுது விநாஷம் ஏற்பட வேண்டும் என்று நினைக்கிறீர்கள் ஆனால் 9-லட்சத்தையே தயார் செய்யவில்லை என்றால் சத்யுகத்தின் தொடக்கத்தில் வரும் எண்ணிக்கையே தயாராகவில்லை. மேலும் விநாஷம் ஆகி விட்டது என்றால் சத்யுகத்தின் தொடக்கத்தில் யார்

வருவார்கள். 2000, 3000-பேர்கள் மேல் இராஜ்யம் செய்வீர்களா? 4-5 லட்சம் பேர் மேல் இராஜ்யம் செய்வீர்களா? எனவே இப்பொழுது எல்லைக்கப்பாற்பட்ட சேவையின் பங்கை தொடங்குங்கள். பாண்டவர்கள் என்ன நினைக்கிறீர்கள்? எல்லைக்கட்பாற்பட்ட சேவை செய்வீர்களா? பாண்டவர்கள் தயாராக இருக்கிறீர்களா? இப்பொழுது இந்த எல்லைக்குட்பட் விஷயங்கள், எல்லைக்கப்பாற்பட்ட நிலையில் செல்வதினால் தானாகவே அகன்று விடும். விடுவதினால் விடுபடாது. எல்லைக்கப்பாற்பட்ட சக்தி மூலம் பரிவர்த்தனை ஆக வேண்டும் என்பதே வேகமான சேவையின் முடிவாகும்.

மிக மென்மையான சூழ்நிலைகளில் பொறுப்பாளராக ஆகியிருக்கும் ஆத்மாக்கள் சேவை செய்து பிரத்யக்ஷமாக நிரூபணம் கொடுத்திருக்கிறார்கள் என்று பாப்தாதா தெரிந்திருக்கிறார் ஆனால் உங்கள் அனைவரின் அஸ்திவாரம் மற்றும் ஒரு நொடியில் மாறியதற்கான மூல அனுபவம், பிரம்மாபாபாவை பார்த்தீர்கள் மற்றும் பிராமணன் ஆகி விட்டீர்கள் என்ற இது தான். சேவைக்கான வரதானம் கிடைத்தது மற்றும் சேவையில் ஈடுபட்டு விட்டீர்கள். பாப்தாதா அனைவரின் அனுபவத்தையும் கேட்க வேண்டும். நல்ல அனுபவங்களைக் கூறுங்கள். எப்படி பிரம்மாபாபாவைப் பார்த்தீர்கள். மேலும் யோசிக்கக்கூட வேண்டியதாக இருக்கவில்லை என்று உங்களுடைய அனுபவம் இருக்கிறது. சகித்துக் கொண்டிருக்கிறோம் என்று சகித்துக் கொண்டதற்கான அனுபவமும் ஆகவில்லை. பெரிய விஷயமாக உங்களுக்குத் தோன்றவே இல்லை. அப்படி இப்பொழுது ஒவ்வொரு உயர்ந்த பிராமண ஆத்மாவையும் பார்க்க வேண்டும். மேலும் பிராமண ஆத்மாவில் பிரம்மாபாபாவைப் பார்க்க வேண்டும். இது தான் சேவைக்கான வேகமான சாதனம். பிரம்மாபாபா உங்களுக்கு 7-நாள் பாடம் எடுத்தாரா? 7-நாள் பாடத்தையோ பின்னால் எடுத்தார் ஆனால் பார்த்தீர்கள் மற்றும் ஆகி விட்டீர்கள். எப்படி பிரம்மாபாபாவில் தந்தை சியாபா அமர்ந்திருந்தார். எனவே உங்களுக்கு கஷ்டமாக அனுபவம் ஆகவில்லை. அப்படி நீங்கள் அனைவரும் பாப்தாதாவை உங்களுக்குள் இருக்க வைத்து பார்வையாலேயே நன்மை செய்யுங்கள். எது உங்கள் அனைவரின் அனுபவமாக இருந்தது, பார்த்தீர்கள் மற்றும் பலியாகி விட்டீர்கள், அப்படிப்பட்ட அனுபவிகள்தானே நீங்கள்? எப்படி இப்பொழுது யோசிக்கிறார்கள், பயிற்சி பெறுகிறார்கள், பிறகு

டிரையலில் (பரிசோதனையில்) வருகிறார்கள். அதில் சிலர் சென்றும் விடுகிறார்கள், சிலர் இருந்து விடுகிறார்கள். இந்தளவு கடின உழைப்பை நீங்கள் செய்தீர்களா? பயிற்சியை எடுத்துக் கொண்டீர்களா? டிரையலில் இருந்தீர்களா என்ன? வந்தீர்கள் மற்றும் மூழ்கிப் போய்வ விட்டீர்கள். எப்பொழுது அந்த மாதிரி சேவையை ஒரு பிரம்மாபாபா செய்தார் என்றால், நீங்கள் இத்தனை பிராமண ஆத்மாக்கள் செய்ய முடியாதா என்ன? உங்களுடைய பெர்சனாலிட்டியே மற்றவர்களை உங்களுடையவர்களாக ஆக்கி விட வேண்டும். பிரம்மாபாபாவிற்கும் பெர்சனாவிட்டி இருந்தது தான் இல்லையா? முகத்திற்கோ அல்லது நடத்தைக்கோ பெர்சனாலிட்டி இருந்தது. அதனால் தான் கவரப்பட்டீர்கள் இல்லையா? எனவே அப்படி தந்தையைப் பின்பற்றி நடங்கள். எப்பொழுது தந்தை உங்களை தொடக்கத்தில் பொறுப்பாளராக ஆக்கினார் என்றால் யார் தொடக்கத்தில் வந்தவர்களோ, சேவைக்கு பொறுப்பாளர் மற்றும் ஸ்தாபனையின் அஸ்திவாரமாக ஆனார்களோ அவர்கள் கடைசி வரையிலும் சேவையில் இருக்கத் தான் வேண்டும். உடல் ஆரோக்கியம் காரணமாக உடல் மூலம் பல இடங்களில் சென்று வர முடியாது ஆனால் மனதாலேயோ சுற்றி வர முடியும் இல்லையா? அதிலோ செலவும் இல்லை, இங்கு அங்கு ஓட வேண்டும் என்ற அவசியமும் இல்லை. படுத்துக் கொண்டே கூட செய்ய முடியும். என்ன நினைக்கிறீர்கள் நீங்கள்? இப்பொழுது அந்த மாதிரி ஏதாவது திட்டத்தை உருவாக்குங்கள். புதிய பாடத்தை தொடக்கம் செய்யுங்கள். இப்பொழுது ஒரு நிகழ்ச்சியையோ செய்து விட்டீர்கள், என்ன சேவை செய்தீர்களோ அதனுடைய பிரத்யக்ஷ பலன் கிடைத்து விட்டது. இப்பொழுது புதிய சேவை செய்யுங்கள். நல்லது.

அனைவரும் தொலைதூரத்திலிருந்து அன்போடு வந்திருக்கிறீர்கள். பாப்தாதா வெளிநாட்டையும் பார்த்துக் கொண்டிருக்கிறார். மாறுபட்ட நேரம் இருந்த போதிலும் மிக அன்போடு நேரத்தைப் பார்த்து கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் ளிநாடுகளில் 200-ஸ்தானங்களில் சாட்டிலைட் மூலமாக முரளி கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதுவும் அதிவேகம் தான் இல்லையா? இங்கே உள்ள பேச்சொலி வெளிநாடுகளில் 200-ஸ்தானங்களில் சென்றடைகிறது. இதுவும் ஒலியின் வேகம் மிக அதிகம் இல்லையா? இதுவும் கண்டுபிடிப்புத் தான் இல்லையா? அப்படியானால் நீங்கள் அமைதியின் சக்தியின் வேகத்தை

அதிகப்படுத்த முடியாத? அறிவியல் பாரதத்தின் ஒலியை வெளிநாடுகள் வரை சென்றடையச் செய்தது. மேலும் நீங்கள் உங்களுடைய உள்ளத்தின் சுபபாவனையை ஆத்மாக்கள் வரை சென்றனடயச் செய்ய முடியாதா? சென்றடையச் செய்யலாம்தானே. இல்லை என்றால் அறிவியல் உங்களை விட முன்னுக்குச் சென்று விடும். அமைதியின் சக்தி கொஞ்சம் குறைவாக தென்படும். எனவே அமைதியின் சக்தியை பிரத்யக்ஷம் செய்யுங்கள். அனைவரிடமும் அது இருக்கிறது. எனக்குள் அமைதி சக்தி இல்லை என்று சொல்லும் ஒரு பிராமணன் கூட கிடையாது. அனைவரிடமும் இருக்கிறது. எத்தனை பிராமணர்கள் இருக்கிறீர்கள்? இத்தனை பிராமணர்களின் சக்தி என்ன தான் செய்ய முடியாது? அனைவரிடமும் அமைதியின் சக்தி இருக்கிறதா? அப்படியானால் இப்பொழுது ஒரு நிமிடத்தில் அனைவரும் தன்னுடைய அமைதியின் சக்தியை வெளிப்படுத்துங்கள். மனதால் உடலால் முற்றிலும் அமைதியை வெளிப்படுத்துங்கள் (பாப்தாதா டெட் சைலன்ஸ்'ன் டிரில் -dead silence drill செய்வித்தார்).

நல்லது நாலா புறமும் உள்ள அனைத்து விசேஷ ஆத்மாக்களுக்கு எப்பொழுதும் ஆன்மீக பெர்சனாலிட்டியின் போதையில் இருக்கக்கூடிய ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் எல்லைக்கட்பாற்பட்ட சேவையில் தன்னை பிஸியாக வைத்துக் கொள்ளும் பொறுப்பான உலக நன்மை செய்யும் ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் பிரம்மாபாபா மற்றும் ஜகதம்பாவின் சுலோகனை நடைமுறையில் கொண்டு வரக்கூடிய, உயர்ந்ததிலும் உயர்ந்த பார்வையால் நன்மை செய்யும் சேவையில் எப்பொழுதுமே இருக்கும் தந்தைக்குச் சமமான ஆத்மாக்களுக்கு பாப்தாதா மற்றும் ஜகதம்பா தாயின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

வரதானம்: எப்பொழுதும் திருப்தியாக இருந்து தன்னுடைய பார்வை, உள்உணர்வு, செயல் மூலமாக திருப்தியின் அனுபவத்தை செய்விக்கக்கூடிய திருப்தி மணி ஆகுக!

பிராமண குலத்தில் யார் எப்பொழுதும் திருட்தியின் விசேஷம் மூலமாக அவரும் திருப்தியாக இருக்கிறார் மற்றும் தன்னுடைய பார்வை, உள்உணர்வு மற்றும் செயல் மூலமாக மற்றவர்களுக்கும்

திருப்தியின் அனுபவத்தை செய்விக்கிறாரோ, அவர் தான் விசேஷ ஆத்மா ஆவார். மேலும் அவர் தான் திருபதிமணியாக இருக்கிறார். அவர் எப்பொழுதும் எண்ணம், சொல், குழுவின் உறவு நெருக்கத்தில் மற்றும் காரியத்தில் பாப்தாதா மூலமாக தன் மேல் திருப்தி என்ற தங்கபுஷ்பங்களின் மழை பொழிவதின் அனுபவம் செய்கிறார். அந்த மாதிரி திருப்தி மணிகள் தான் பாப்தாதாவின் கழுத்தின் மாலையாக ஆகிறார், இராஜ்ய அதிகாரி ஆகிறார் மேலும் பக்தர்கள் நினைவு செய்வதற்கான மாலை ஆகிறார்.

**சுலோகன்: எதிர்மறை மற்றும் வீணானதை முடிவுகட்டி கடின உழைப்பிலிருந்து விடுபடுங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 14.12.1997 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# வீணானவை மற்றும் எதிர்மறையைத் தவிர்த்து (avoid) விருது (award) பெறுவதற்கு உரியவர் ஆகுங்கள்!

இன்று பாப்தாதா தன்னுடைய பரமாத்மா அன்பிற்குப் பாத்திரமான ஆத்மாக்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். பரமாத்மா அன்பு ஆனந்தம் நிறைந்த ஊஞ்சலாகும். அந்த சுகமளிக்கும் ஊஞ்சலில் எப்பொழுதும் ஆடிக் கொண்டே இருக்கிறார்கள். பரமாத்மாவின் அன்பு அனேக ஜென்மங்களின் துக்கங்களை ஒரு நொடியில் முடித்து விடுகிறது. பரமாத்மா அன்பு அனைத்து சக்திகள் நிரம்பியது, அது பலமற்ற ஆத்மாக்களை சக்திசாலியாக ஆக்கி விடுகிறது. அந்த மாதிரி உயர்ந்த பரமாத்மா அன்பிற்கு நீங்கள் எவ்வளவு குறைவான ஆத்மாக்கள் பாத்திரமாகியிருக்கிறீர்கள். அந்த மாதிரி உயர்ந்த பாத்திர ஆத்மாக்களை பாப்தாதா பார்த்துப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார். எப்படி தந்தை மகிழ்ச்சி அடைகிறாரோ அதே போல் குழந்தைகளும் மகிழ்ச்சி அடைகிறார்கள் ஆனால் வரிசைக்கிரமமாக. பாப்தாதாவோ ஒவ்வொரு குழந்தைக்கும் எப்பொழுதம் பரமாத்மா அன்பின் ஊஞ்சலில் ஆடக்கூடிய அழியாத இரத்தினம் ஆகுக என்ற இந்த வரதானத்தைத் தான் உள்ளப்பூர்வமாகக் கொடுக்கிறார். இந்த அன்பின் ஊஞ்சலிலிருந்து மனம் என்ற கால்களை கீழே வைக்காதீர்கள். ஏனென்றால் முழு உலகத்தின் ஆத்மாக்களின் மத்தியில் நீங்கள் தான் பரமாத்மாவிற்குச் செல்லமானவர்கள், அன்பிற்குரியவர்கள். எனவே பாப்தாதா குழந்தைகளுக்கு இதே பரமாத்மா அன்பில் ஐக்கியமாகியிருங்கள் என்ற ஆசீர்வாதங்களைக் கொடுக்கிறார். அந்த மாதிரி அன்பில் ஐக்கியாகியிருக்கும் ஆத்மாக்களிடம் எந்தவொரு வெளி சூழ்நிலையும் மற்றும் மாயாவின் குழப்பமும் வர முடியாது. கால்களை கீழே வைக்கிறீர்கள் என்றால் மாயாவும் விதவிதமான விளையாட்டு விளையாடுவதற்கு வருகிறது, விதவிதமான ரூபத்தை தாரணை

செய்து கவருகிறது. அன்பில் ஐக்கியமாகியிருக்கும் ஆத்மாக்களின் அனைத்து சக்திகளின் எதிரில் மாயா ஏரெடுத்துப் பார்க்கவும் முடியாது. உங்களுடைய மூன்றாவது கண் ஜுவாலாமுகி கண், மாயாவை சக்தியில்லாததாக ஆக்கி விடுகிறது. அப்படி விசேஷ ஆத்மாக்களாகிய உங்கள் அனைத்து பிராமணர்களுக்கும் பாப்தாதா மூலமாக பிறவி எடுத்தவுடனேயே மூன்றாவது கண் கிடைத்திருக்கிறது ஆனால் சில நேரம் குழந்தைகளின் மூன்றாவது கண் மிகக் கடுமையான முயற்சி செய்து செய்து களைப்படைந்து விடுகிறது. மேலும் களைப்படையும் காரணத்தினால் மூடி விடுகிறது என்று பாப்தாதா பார்த்தார். மாயாவை பார்க்கும் கண் மிகவும் தொலைநோக்கு பார்வையுடையது, தூரத்திலிருந்தே பார்த்து விடுகிறது. இப்பொழுது மாயாவும் நம்முடைய இராஜ்யம் சென்று விட்டது என்று புரிந்து கொண்டது. எனவே மாயாவைக் கண்டு பயப்படாதீர்கள். மிகவும் குஷியோடு அனைத்து சக்திகளின் ஆதாரத்தினால் அதற்கு விடை கொடுங்கள். வருவதற்கான வாய்ப்பைக் கொடுக்காதீர்கள். விடை கொடுங்கள். அதுவும் பிராமண ஆத்மாக்களுடன், உயர்ந்த ஆத்மாக்களுடன் தாக்குதல் செய்து செய்து களைப்படைந்து விட்டது. நீங்களே பலஹீனத்தின் காரணமாக மாயாவை வரவழைக்கிறீர்கள், அது களைப்படைந்து விட்டது ஆனால் நீங்கள் வரவழைக்கிறீர்கள் என்றால் அதுவும் வாய்ப்பை எடுத்துக் கொள்கிறது. இப்பொழுது சக்தியில்லாமல் ஆகி விட்டது. உங்கள் அனைவரின் அனுபவம் என்ன கூறுகிறது? இப்பொழுது மாயாவில் முன்பு இருந்த மாதிரி சக்தி இருக்கிறதா? அதில் சக்தி இருக்கிறதா அல்லது நீங்கள் சக்திசாலியாக இருக்கிறீர்களா? அதுவோ முயற்சியோ செய்யும் ஏனென்றால் நீங்கள் வரவழைக்கிறீர்கள் என்றால் அது ஏன் வாய்ப்பை எடுத்துக் கொள்ளாது. நீங்கள் பலஹீனமாக ஏன் ஆகிறீர்கள்? நீங்கள் மாஸ்டர் சர்வ சக்திவானா, இல்லையா என்பது தந்தையின் கேள்வி ஆகும். அனைவரும் மாஸ்டர் சர்வ சக்திவானாக இருக்கிறீர்களா? சில நேரம் சர்வ சக்திவானாக இருக்கிறீர்களா அல்லது எப்பொழுதும் சர்வ சக்திவானாக இருக்கிறீர்களா? என்னவாக இருக்கிறீர்கள்? எப்பொழுதும் சக்திசாலியாக இருக்கிறீர்களா? அப்படியானால் மாயாவிடம் இப்பொழுது சென்று விடு என்று கூறி விடுங்கள். நீங்கள் அதை அழைக்காதீர்கள், தந்தை மாயாவிடம் இப்பொழுது முடித்து விடு என்று கூறுகிறார் ஆனால் மாயா தந்தையிடம் என்னை அழைக்கிறார்கள் என்று கூறுகிறது.

அப்படியானால் தந்தை என்ன செய்வது? ஒருவேளை எந்த விதமான பலஹீனமும் அது மனதில், வார்த்தையில், உறவு நெருக்கத்தில் வருகிறது என்றால், மாயாவை வரவழைத்தீர்கள் என்று புரிந்து கொள்ளுங்கள். அதற்கும் வரவழைக்கும் வைப்ரேஷன் மிக விரைவில் சென்றடைகிறது.

இந்த மகா உற்சவத்தையோ மிக நன்றாகக் கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள் ஆனால் உற்சாகம் எப்பொழுதும் இருக்க வேண்டும். எனவே உற்சவத்தை கொண்டாடுகிறீர்கள். இந்த வருடம் அதிக உற்சவம் கொண்டாடுகிறீர்கள் தான் இல்லையா? இந்த குருப்பில் ஈஸ்வரிய சேவையில் ஆதி இரத்தின சகோதரர்களின் மரியாதை செய்யும் விழா மற்றும் டீச்சர் சகோதரிகளின் வெள்ளி விழாவின் நிகழ்ச்சி வைக்கப்பட்டிருக்கிறது. இந்த குரூப்பில் உற்சவம் கொண்டாடுகிறீர்கள் என்றால், இந்த வருடம் உற்சவத்தைக் கொண்டாடுவது என்றால் மாயாவிற்கு விடை கொடுப்பது என்று தந்தை நினைக்கிறார். பொன்னாடை போர்த்திக் கொண்டு அமர்ந்து விடுங்கள் என்பது மட்டுமல்ல, பொன்னாடை போர்த்துவது என்றால் பொற்காலத்தினவராக ஆவது, பார்ப்பதற்கு அந்தக் காட்சியே மிக நன்றாக இருக்கிறது ஆனால் எப்பொழுதம் பொன்னான நிலையின் மேலாடை இருக்கட்டும். அலங்காரத்தை களைத்தீர்கள், உற்சவம் முடிவடைந்தது பின்பு எப்படி இருந்தீர்களோ அப்படியே ஆகி விட்டீர்கள் என்று அப்படி இருக்கக்கூடாது. இது உற்சாகத்தைக் கொடுப்பதற்கான நிகழ்ச்சி ஆகும். எனவே யார் யார் உற்சவத்தை கொண்டாடினீர்கள் அல்லது கொண்டாடுவதற்காக வந்திருக்கிறீர்களோ அவர்கள் கையை உயர்த்துங்கள், பாப்தாதா குஷி அடைகிறார். மிக நன்றாகக் கொண்டாடுங்கள் ஆனால் கொண்டாடுவது என்றால் அந்த மாதிரி ஆவது மற்றும் ஆக்குவது ஆகும். உற்சவத்தைக் கொண்டாடும் நேரத்தில் எப்பொழுதும் நினைவு மற்றும் சேவையின் உற்சாகத்தில் இருக்கக்கூடிய ஆத்மா நான் என்று உங்களுக்கு நீங்களே இரட்டை கோடிட்டு கவனம் கொடுங்கள். பாப்தாதாவிற்கும் இந்தக் காட்சி பார்ப்பதற்கு நன்றாக இருக்கிறது. எனவே இந்த வருடத்தை மாயாவிற்கு விடை கொடுக்கும் வருடமாகக் கொண்டாட வேண்டும் என்று பாப்தாதா விரும்புகிறார். அந்த மாதிரி உற்சவத்தை கொண்டாடுவீர்கள் இல்லையா? நாளை என்ன உற்சவத்தைக்

கொண்டாடுவீர்களோ அதை அந்த மாதிரியே கொண்டாடுவீர்கள் இல்லையா? வெள்ளி விழா கொண்டாடுவீர்கள் இல்லையா? பொன்விழாவானாலும், வெள்ளி விழாவானாலும் ஆனால் அதுவும் உற்சவம் தான் இல்லையா? நாமோ வெள்ளி விழா கொண்டாடுபவர்கள், முதலில் பொன் விழா கொண்டாடுபவர்கள் ஆகட்டும், பின்பு நாம் ஆவோம் என்று அப்படி நினைக்காதீர்கள். மேலும் உற்சவத்தைக் கொண்டாடுகிறவர்களுக்காக பாப்தாதா கூறிக் கொண்டிருக்கிறார் என்று உற்சவத்தைக் கொண்டாடாதவர்கள் இப்படி நினைக்காதீர்கள். அனைவருக்காகவும் கூறுகிறோம். பிராமண வழ்க்கையின் உற்சவத்தையோ கொண்டாடி விட்டீர்கள் இல்லையா? பிராமணனாகவோ அனைவரும் ஆகி விட்டீர்கள் அல்லது பிராமணனாகவும் ஆகிக் கொண்டிருக்கிறீர்களா? ஆகி விட்டீர்கள் தான் இல்லையா? அப்படி பிராமண ஜென்மத்தின் உற்சவத்தைக் கொண்டாடும் ஆத்மாக்கள் என்றால் எப்பொழுதும் உற்சாகத்தில் இருப்பது மேலும் மற்றவர்களையும் உற்சாகத்தில் கொண்டு வருவது. இது தான் பிராமணர்களின் தொழில் ஆகும். அந்த பிராமணர்களோ வாய் மூலம் கதை கூறுகிறார்கள், நீங்கள் பிராமணர்கள் வாய் மூலம் பேசுகிறீர்கள் என்றால் உற்சாகம் கொடுப்பதற்காகப் பேசுகிறீர்கள். எப்படிப்பட்ட ஆத்மாவாக இருந்தாலும் அவர் உங்களுடைய விரோதி ஆத்மாவாக இருந்தாலும், ஏனென்றால் அனைவரும் கணக்கு வழக்கை இங்கேயே முடிக்க வேண்டும்; எனவே எப்படிப்பட்ட ஆத்மாவாக இருந்தாலும் பிராமணர்களுடைய வேலை உற்சாகம் நிறைந்த கதை கூறுவது ஆகும். உற்சாகத்தின் விஷயங்களைக் கூற வேண்டும். அவர் அழுது கொண்டிருக்கிறார், நீங்கள் அவரை உற்சாகத்தில் ஆட வைத்து விடுங்கள். எப்பொழுது யாருக்காவது மனதில் உற்சாகம் இருக்கிறது என்றால் என்ன நடக்கிறது? கால்கள் நடனமாடத் தொடங்குகிறது. எப்படி இந்த நிகழ்ச்சியை செய்கிறீர்கள் தான் இல்லையா? கடைசியில் என்ன செய்கிறீர்கள்? அனைவரும் நடனமாடுகிறீர்கள் தான் இல்லையா? இதுவோ கால்களின் நடனம் ஆகும். பிராமண ஆத்மா உற்சாகம் கொடுக்காமல் மற்றும் உற்சாகத்தில் இருக்காமல் இருக்கவே முடியாது. உற்சாகத்தை அகற்றும் விஷயங்கள் நிகழ்கின்றன மேலும் நிகழும் ஆனால் இந்த வருடத்தில் அனைத்து குழந்தைகள் மேல் பாப்தாதா இந்த நல்ல விருப்பத்தைத் தான் வைக்கிறார். கடந்ததை கடந்ததாக்கி இன்று வரை எப்படிப்பட்ட ஆத்மாவாக இருந்தாலும், உறவு

நெருக்கத்தில் எப்படிப்பட்டவராக இருந்தாலும், எதிர்மறை உள்ளவராக இருந்தாலும், எதிர்ப்பவராக இருந்தாலும், பிராமண வாழ்க்கையையே அசைப்பவராக இருந்தாலும் ஆனால் இந்த வருடத்தில் எதிர்மறை மற்றும் வீணான கண்ணோட்டத்திற்கு முடிவு கட்டுங்கள். அன்பு கொடுங்கள், சக்தி கொடுங்கள். ஒருவேளை அன்பு கொடுக்க முடியவில்லை, சக்தி கொடுக்க முடியவில்லை என்றால், கேட்டுக் கொண்டும், நெருக்கத்தில் வந்தும் வீணானவை மற்றும் எதிர்மறையான விஷயங்களை மனதில் தாரணை செய்வதை தவிருங்கள். மனம் மற்றும் புத்தியில் தாரணை ஆக வேண்டாம். அதைத் தவிர்த்து விடுங்கள். மாற்றம் செய்யுங்கள். நேர்மறையை மற்றும் வீணானதை மாற்றம் செய்து உள்ளத்தில் உள்ளடக்குங்கள். அப்படி இரண்டு விஷயங்களை யார் தவிர்ப்பார்களோ அவருக்கு பாப்தாதா மூலமாக, பிராமண பரிவாரம் மூலமாக மிக நல்லதிலும் நல்ல, பெரியதிலும் பெரிய விருது கிடைக்கும். மற்ற ஆத்மாக்களுக்கோ விருது கொடுப்பவர்கள் ஆத்மாக்களாக இருப்பார்கள். விருது கிடைக்கிறது தான் இல்லையா? இதுவோ பரமாத்மாவின் விருது ஆகும். தவிருங்கள், விருதைப் பெறுங்கள்! தைரியம் இருக்கிறதா? நல்லது.

பாண்டவர்கள் யார் நிகழ்ச்சியை கொண்டாடினார்களோ அவர்களில் தைரியம் இருக்கிறதா? விருதைப் பெறுவீர்களா? அனைவரும் கையை உயர்த்தினார்கள். இன்றைய தேதியை மனதில் இரட்டைக் கோடிட்டு வைத்துக் கொள்ளுங்கள். இன்று என்ன தேதி? (14-டிசம்பர்) அப்படி ஒவ்வொரு மாதத்தின் 14-ம் தேதி தன்னை சோதனை செய்யுங்கள். நல்லது. யார் வெள்ளி விழா கொண்டாடினார்களோ அவர்களில் விருதைப் பெறுவோம் என்று நினைப்பவர்கள் கையை உயர்த்துங்கள். அப்படி மற்றவர்களைப் பார்த்து பார்த்து கையை உயர்த்தாதீர்கள். வெட்கத்தின் காரணமாகவும் கையை உயர்த்தாதீர்கள், பாப்தாதா வாய்ப்பு கொடுக்கிறார். ஒருவேளை யாரிடமாவது தைரியம் இல்லை என்றால் கையை உயர்த்தாதீர்கள், ஒன்றும் பாதகம் இல்லை. பாப்தாதா இன்னும் சக்தியும் கொடுப்பார். உங்களில் யாராவது இன்னும் தைரியம் வேண்டும் என்று நினைப்பவர்கள் இருக்கிறீர்களா? ஏதாவது வெள்ளி விழா கொண்டாடிய டீச்சர் அந்த மாதிரி இருக்கிறாரா? சரி இங்கு கையை உயர்த்த வேண்டாம். வெட்கப்படுகிறீர்கள் என்றால் எழுதி

அனுப்புங்கள். எப்பொழுது நிகழ்ச்சியைக் கொண்டாடுவீர்களோ அப்பொழுது கொடுங்கள். எனக்கு அதிகப்படியான தைரியம் வேண்டும் என்று நினைக்கிறீர்கள் என்றால் அதற்காக விசேஷமாக டியூசன் வைப்போம். யார் படிப்பில் பலஹீனமாக இருக்கிறாரோ அவர்களுக்கு என்ன செய்கிறார்கள்? டியூசன் வைக்கிறார்கள் இல்லையா? நல்லது. மதுபனைச் சேர்ந்தவர்கள் கையை உயர்த்துங்கள். எழுந்து நில்லுங்கள். மதுபனைச் சேர்ந்தவர்கள் வாய்ப்பை நன்றாக எடுத்துக் கொள்கிறார்கள். நல்லது, மதுபனைச் சேர்ந்தவர்கள் விருதைப் பெறுவீர்களா? அனைவரும் கை உயர்த்தினார்கள். டியூசன் வேண்டாமா? தைரியம் நிறைந்தவர்கள்தான். நல்லது. பாப்தாதா இதில் கணக்கு பார்ப்பார். மதுபனைச் சேர்ந்தவர்களுக்கு வாழ்த்துக்கள்!

மற்றபடி அனேக மூலையிலிருந்து அன்பிற்குரிய, சகயோகி, சம்மந்தத்தில் இருக்கக்கூடிய புதிய மற்றும் பழைய குழந்தைகள் யார் யாரெல்லாம் வந்திருக்கிறார்களோ அவர்களுக்கு விசேஷமாக பாப்தாதா ஒன்றோ வந்ததற்கான வாழ்த்துக்கள் கூறுகிறார், இரண்டாவதாக மரியாதைப்படி நடப்பதற்காகவும் வாழ்த்துக்கள் கூறுகிறார். குறைந்ததிலும் குறைந்தது ஒரு வருடமோ புதியவர்களும் மரியாதைப்படி நடந்திருக்கிறார்கள். அப்பொழுது தான் இங்கு வந்தடைந்திருக்கிறார்கள். சிலர் சாதுர்யமானவர்களும் இருப்பார்கள், ஆனால் பெரும்பான்மையினரோ மரியாதையைக் கடைபிடிப்பவர்களாக இருக்கிறார்கள். அப்படி இல்லறத்தில் இருந்து கொண்டே மரியாதைப்படி நடந்து கொள்ளும், மரியாதையை வைத்துக் கொள்ளும் ஆத்மாக்களுக்கு மரியாதைப்படி நடப்பதற்கும் வாழ்த்துக்களைக் கூறுகிறோம்.

நல்லது. நாங்கள் மாயாவிற்கு விடை கொடுப்போம் என்று மாதர்கள் தைரியம் வைத்திருக்கிறார்களா? ஒருவேளை ஆம் என்றால் ஒரு கை அசைத்து கைதட்டல் செய்யுங்கள். நல்லது. இல்லறத்தில் இருக்கும் பாண்டவர்களிடம் தைரியம் இருக்கிறதா? விருது பெற வேண்டுமா? ஒரு கை மூலம் கைதட்டல் செய்யுங்கள். பாப்தாதாவிற்கும் குஷி ஏற்படுகிறது. பாருங்கள் மிகப் பெரிய அரங்கம், எல்லைக்கப்பாற்பட்ட போதை ஏறுகிறது இல்லையா? சௌகர்யமாக அமர்வதற்கான இடமோ இருக்கிறது தான் இல்லையா? இப்பொழுது உங்களிடம் தூரத்திலிருந்து

பார்க்க முடிவதில்லை என்ற புகார் இருக்கலாம் ஆனால் இப்பொழுதோ, நீங்கள் மிக சௌகரியமாக அமர்ந்து கேட்கவும் முடிகிறது. டி.வி-யில் பார்க்கவும் முடிகிறது. எப்பொழுது 9-லட்சத்தை தயார் செய்வீர்கள் என்றால் என்னவாகும்? பிறகு அமர்வதற்கான இடம் கிடைக்குமா? எனவே யார் எவ்வளவு முன்பாக வந்தாரோ அந்தளவு பாக்கியம் நிறைந்தவர்கள். எப்படி நீங்கள் இப்பொழுது உங்களை விட முன்பாக வந்தவர்களின் பாக்கியத்தைப் பார்த்து நீங்கள் மிக நல்லவர்கள் என்று பாடுகிறீர்கள். அதே போல் பாப்தாதாவும் இப்பொழுது யார் யாரெல்லாம் நீங்கள் வந்திருக்கிறீர்கள் இல்லையா உங்களையும் பின்னால் வருபவர்கள் நீங்கள் மிகுந்த பாக்கியம் நிறைந்தவர்கள் என்று கூறுவார்கள். வளர்ச்சியோ அடையவே தான் வேண்டும். இல்லையென்றால் எப்படி இராஜ்யம் ஸ்தாபனை ஆகும்.

அப்படி இந்த வருடம் விடை கொடுப்பதற்கும் மற்றும் பாராட்டுதலுக்குமான வருடம் ஆகும். மேலும் இந்த வருடத்தில் விசேஷமாக எந்தக் குழந்தைகள் எண்ணத்தை வைத்தார்களோ அதை நடைமுறையில் கொண்டு வருபவர்களுக்கு பாப்தாதாவின் அதிகப்படியான உதவியும் கிடைக்கும். உறுதியாக மட்டும் இருக்க வேண்டும். இடையிடையே நாடகம் சோதனை செய்யும் ஆனால் எண்ணத்தில் உறுதியாக இருக்க வேண்டும். எண்ணம் என்ற கால்கள் அசைய வேண்டாம், ஆடாமல் இருந்தது என்றால் பாப்தாதா மூலமாக அதிகப்படியான உதவியின் அனுபவம் ஆகும். பெறுவதற்கான சக்தி மட்டும் வேண்டும். ஒருவரின் பலம், ஒருவர் மேல் உள்ள நம்பிக்கை... என்ன ஆனாலும், ஆகத்தான் வேண்டும். இந்த எண்ணம் என்ற கால்கள் உறுதியாக இருக்க வேண்டும். அப்படி விஷயங்கள் வரவும் செய்யும் ஆனால் எப்படி விமானத்தின் கீழே மேகங்கள் இருந்து விடுகின்றன. மேலும் அவர்கள் மேகங்களின் மேலே இருக்கிறார்கள் அந்த மாதிரியே அனுபவம் செய்வீர்கள். மேகம் ஒரு மன மகிழ்ச்சிக்கான காட்சிகளாக ஆகி விடும். அப்படி எவ்வளவு தான் கார்மேகங்கள் போன்ற விஷயங்கள் இருந்தாலும், அதில் சில பிரச்சனைக்கான தீர்வு அல்லது சமாதானம் அந்த நேரம் தென்படாவிட்டாலும், இந்த மேகங்கள் வந்திருப்பது செல்வதற்காகத் தான் என்ற திட நிச்சயம் இருக்க வேண்டும். இந்த மேகம், கலைந்து செல்லக்கூடியது தான் தங்கப்போவது இல்லை. அந்த மாதிரி பறக்கும் கலையின் நிலையில்

நிலைத்து விட்டீர்கள் என்றால் எவ்வளவு தான் இருண்ட கார்மேகங்களும் கலைந்து போய் விடும். மேலும் நீங்கள் உறுதியான எண்ணத்தினால் வெற்றி அவசியம் பெறுவீர்கள். இது எப்படி நடக்கும்? என்று பயப்படாதீர்கள். நல்லதாகவே நடக்கும். ஏனென்றால், எவ்வளவு நேரம் அருகாமையில் வந்து கொண்டிருக்கிறதோ அந்தளவு புதுப்புது விஷயங்கள், சம்ஸ்காரம், கணக்கு வழக்கிர்கான கார்மேகங்களும் வரும் என்று பாப்தாதா தெரிந்திருக்கிறார். இங்கேயே அனைத்தையும் முடிக்க வேண்டும். நாளாக நாளாக அந்த மாதிரியான விஷயங்கள் ஏன் அதிகரிக்கின்றன என்று சில குழந்தைகள் கேட்கிறார்கள். எந்தக் குழந்தைகளுக்கு தர்மராஜ் புரியை கடந்து செல்ல வேண்டாமோ அவர்களுக்கு சங்கம யுகத்தில் இந்தக் கடைசி நேரத்தில் சுபாவம், சம்ஸ்காரத்தில் அனைத்து கணக்கு வழக்குகளை இங்கேயே முடிக்க வேண்டும். தர்மராஜ்புரியில் செல்ல வேண்டாம். உங்கள் எதிரில் எமதூதன் வர மாட்டான். இந்த விஷயங்களே தான் எமதூதர்கள், அவை இங்கேயே அழியப் போகின்றன. எனவே நோய்கள் வெளிப்படுவது, அழிவதின் அடையாளம் ஆகும். நேரம் அருகாமையில் இருக்கிறது என்று தென்படவில்லை. மேலும் இன்னும் அதிக வீணான எண்ணம் அதிகரிக்கின்றன என்று அப்படி ஒருபொழுதும் நினைக்காதீர்கள் ஆனால் இது முடிவடைவதற்காக வெளியே வந்து கொண்டிருக்கின்றன. அவர்களுடைய வேலை வருவது மேலும் உங்களுடைய வேலை பறக்கும் கலை மூலமாக, சக்தி மூலமாக பரிவர்த்தனை செய்வது பயப்படாதீர்கள். அனேக குழந்தைகளில் வெளிமுகமாக பயப்படுவது தென்படுவதில்லை, ஆனால் உள்மனம் பயப்படுகிறது என்பது விசேஷமாக இருக்கிறது. வெளிப்படையாக ஒன்றும் இல்லை, ஒன்றும் இல்லை என்று கூறுவார்கள். இப்படியோ நடக்கத் தான் செய்யும் என்றும் கூறுவார் ஆனால் உள்ளே அவருக்கு பதட்டம் இருக்கும். எனவே பாப்தாதா முன்பாகவே கூறி விடுகிறார். பயப்படக்கூடிய விஷயங்கள் வரும், ஆனால் நீங்கள் பயப்படாதீர்கள். தன்னுடைய ஆயுதங்களை விட்டு விடாதீர்கள். யார் பயப்படுகிறாரோ அவருடைய கையில் என்னென்ன இருக்கிறதோ அது கீழே விழுந்து விடும். அப்படி மனதாலும் யார் பயப்படுகிறார் என்றால் ஆயுதங்கள் மற்றும் சக்திகள் என்னென்ன இருக்கின்றனவோ அவை கீழே விழுந்து விடுகின்றன. உள்ளடங்கிப் போய் விடுகிறது எனவே முன்பாகவே தெரியும் பயப்படாதீர்கள். மூன்று காலங்களையும் தெரிந்தவர்

ஆகுங்கள், பயமற்றவர் ஆகுங்கள். பிராமணன் உங்களுக்குள் உள்ள சம்மந்தத்தில் பயமற்றவர் ஆக வேண்டாம், மாயாவிடம் பயமற்றவர் ஆகுங்கள். சம்மந்தத்திலோ அன்பு மற்றும் பணிவு இருக்க வேண்டும். யார் எப்படிப்பட்டவராக இருந்தாலும் நீங்கள் உள்ளப்பூர்வமாக அன்பு கொடுங்கள், சுபபாவனை கொடுங்கள், இரக்கம் காட்டுங்கள். பணிவானவராகி அவரை முன்னுக்கு வைத்து முன்னேற்றம் அடையச் செய்யுங்கள். இதைத் தான் காரணம் என்ற எதிர்மறையை சமாதானம் என்ற நேர்மறையாக ஆக்குவது என்பதாகும். இந்தக் காரணம், இந்தக் காரணம், இந்தக் காரணம்.. காரணம் அல்லது பிரச்சனையை நேர்மறையான சமாதானம் ஆக்குங்கள்.

பாப்தாதாவிற்கு ஒரு விஷயத்தில் சில நேரம் சிரிப்பு வருகிறது. தெரியுமா என்ன விஷயம் என்று? தெரிந்திருக்கிறீர்களா? ஒரு பக்கமோ பாபா நாங்கள் இயற்கையை வென்றவர் ஆவோம் என்று சவால் விடுகிறார்கள். இயற்கையையும் மாற்றுவோம் என்ற இதைக் கூறுகிறீர்கள் தான் இல்லையா? இயற்கையை மாற்றுவீர்கள் தான் இல்லையா? அந்த மாதிரி சவால் விடுபவர்கள், இயற்கையை மாற்றம் செய்ய முடியும் ஆனால் எப்பொழுது உறவு நெருக்கத்தில் ஏதாவது விஷயம் ஏற்படுகிறது என்றால், அதை சமாதானம் செய்ய முடிவதில்லை, பரிவர்த்தனை செய்ய முடிவதில்லை. சிரிப்பதற்கான விஷயம் தான் இல்லையா? இயற்கை ஜடமானது அதற்கு சவால் விடுகிறார்கள் ஆனால் பிராமண ஆத்மாக்களை பரிவர்த்தனை செய்ய வேண்டும் என்ற அது ஆவதில்லை. பிறகு என்ன யோசிக்கிறார்கள்? அது ஆக முடியாது, ஆகவே ஆகாது, ஆகவே முடியாது. மாறவே முடியாது என்று கூறுகிறார்கள். அப்படியானால் இயற்கையை எப்படி மாற்றுவீர்கள்? சுயம் தான் மாறி, மற்றவர்களை மாற்றுங்கள். அவர் தவறாக இருக்கிறார், 100-சதவிகிதம் தவறாக இருக்கிறார் ஆனால் உங்களுடைய உறுதிமொழி என்ன? தந்தையிடம் என்ன உறுதிமொழி கொடுத்திருக்கிறீர்கள்? சுய மாற்றம் மூலம் உலக மாற்றம் செய்வோம். இந்த உறுதிமொழி இருக்கிறதா அல்லது மறந்து விட்டீர்களா? ஆம் என்றோ அனைவரும் கூறுகிறீர்கள். எப்படிப்பட்ட விஷயமானாலும் விஷயங்களை மாற்றுவதற்காக நன்றாக உதவியைப் பெற்றுக் கொள்ளுங்கள் ஆனால் அவர் மாறுவதே கடினம் என்ற இந்த சான்றிதழ் கொடுக்காதீர்கள். யார் உங்களுக்கு சான்றிதழ் கொடுப்பதற்கான

அதிகாரம் கொடுத்திருக்கிறார்கள். அப்படி இதுவோ நடக்கவே நடக்காது இது சரியாக ஆகவே ஆகாது என்று நினைப்பது என்றால் உங்களை யார் நீதிபதியாக ஆக்கியது. நீங்களாகவே நீதிபதியின் இருக்கையில் அமர்ந்து விடுகிறீர்களா? அல்லது வக்கீல் ஆகிறார்கள், மிகுந்த சட்டதிட்டங்களைக் கூறுகிறார்கள். அப்படியில்லை இப்படி என்று வாதாடுகிறார்கள். வக்கீலாகவும் ஆகாதீர்கள். நீதிபதியாகவும் ஆகாதீர்கள். இந்த அதிகாரத்தை பாப்தாதா கொடுக்கவில்லை. யார் பொறுப்பிலிருக்கிறாரோ அவருடைய சகயோகத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அந்த பொறுப்பிலிருக்கும் ஆத்மாக்களும் பாப்தாதாவின் அறிவுரைப்படி செய்கிறார்கள். தன்னுடைய மனம் சொல்லும் வழியைக் கூறுவதில்லை.

அப்படி இந்த வருடத்தில் இந்த அனைத்து விஷயங்களையும் முடிவு கட்டுங்கள். அதாவது மனதால் பரிவர்த்தனை செய்யுங்கள், தவிருங்கள், மேலே செய்தியை கூறியாகி விட்டது, உங்களுடைய பொறுப்பு முடிந்தது. உங்கள் மூலம் பரிவர்த்தனை ஆகவில்லை என்றால் பொறுப்பிலிருக்கும் ஆத்மாக்கள் வரை கொண்டு சேர்ப்பது உங்களுடைய கடமை ஆகும். நீங்களே சட்டத்தைக் கையில் எடுக்காதீர்கள். அப்பொழுது தான் விருது பெறுவதற்குப் பாத்திரமானவர் ஆவீர்கள். நல்லது.

நாலாபுறங்களிலுமுள்ள பரமாத்மா அன்பின் சுகம் நிறைந்த ஆனந்தம் நிறைந்த ஊஞ்சலில் ஆடக்கூடிய, லக்கி மற்றும் லவ்லி ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் திட எண்ணம் மூலம் சமாதான சொரூப உயர்ந்த ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் பரமாத்மா விருதைப் பெறுவதற்கு பாத்திரமான கதாநாயக பாத்திரம் ஏற்று செய்யும் ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் பாப்தாதாவின் பாலனைக்கு நன்றிக்கடன் செலுத்தக்கூடிய தந்தையின் இதய சிம்மாசனதாரி ஆத்மாக்களுக்கு, பாப்தாதாவின் பல கோடி மடங்கை விட அதிகமான அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

வரதானம்: எப்பொழுதும் அனைத்து பிராப்திகளினால் நிரம்பியிருக்கக்கூடிய சிரித்த முகம், மகிழ்ச்சி நிறைந்த சிந்தனை உள்ளவர் ஆகுக!

எப்பொழுது ஏதாவது தேவி அல்லது தேவதையின் சிலையை செதுக்கிறார்கள் என்றால், அதில் முகத்தை எப்பொழுதும் சிரித்த முகமாகக் காண்பிப்பார்கள். அப்படி உங்களுடைய இந்த நேரத்து சிரித்த முகமாக இருப்பதின் நினைவுச்சின்னமாக சிலைகளிலும் காண்பிக்கிறார்கள், சிரித்த முகம் என்றால் எப்பொழுதும் அனைத்து பிராப்திகளினால் நிரம்பியிருப்பது. யார் நிரம்பியிருப்பாரோ அவர் மகிழ்ச்சியுடன் இருக்க முடியும். ஒருவேளை ஏதாவது பிராப்தியின்மை இருக்கும் என்றால் மகிழ்ச்சியோடு இருக்க முடியாது. யாராவது எவ்வளவு தான் மகிழ்ச்சியாக இருப்பதற்கு முயற்சி செய்தாலும் வெளிப்படையாக சிரிப்பார் ஆனால் உள்ளத்திலிருந்து இல்லை. நீங்களோ உள்ளப்பூர்வமாக சிரிக்கிறீர்கள். ஏனென்றால் அனைத்து பிராப்திகளினால் நிரம்பி மகிழ்ச்சி நிறைந்த சிந்தனை உள்ளவராக இருக்கிறீர்கள்.

சுலோகன்: மதிப்போடு தேர்ச்சி பெறுபவர் ஆக வேண்டும் என்றால் ஒவ்வொரு பொக்கிஷத்தின் சேமிப்பு கணக்கு நிரம்பியிருக்க வேண்டும்!

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺
✺✺✺✺✺✺✺

# 31.12.1997 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# இந்த வருடத்தை முக்தி வருடமாக கொண்டாடுங்கள், பயனுள்ளதாக ஆக்குங்கள், வெற்றி அடையுங்கள்!

இன்று பாப்தாதா தன்னுடைய புதிய வாழ்க்கையின் உயர்ந்த ஆத்மாக்களுக்கு, புது யுகத்தைப் படைக்கும் ஆத்மாக்களுக்கு புது வருடத்தின் வாழ்த்துக்களைக் கொடுக்கிறார். உலகிற்காக புது வருடம் ஆரம்பம் ஆகிறது, குழந்தைகள் உங்களுடைய மனதில் புது யுகத்தின் நினைவு வருகிறது. எப்படி புதிய வருடம் நாளை வரப் போகிறது, அதே போல் புது யுகமும் நாளை வரப் போகிறது. நம்முடைய புதிய யுகம் வந்தே விட்டது என்று அப்படி நினைவு வருகிறதா? எப்படி புதிய வருடத்திற்காக மனித ஆத்மாக்களின் உள்ளத்தில் இன்று குஷி இருக்கிறது, அற்ப காலத்திற்கான உற்சாகம் இருக்கிறது, அதே போல் ஆத்மாக்கள் உங்களுக்கு புது யுகம் வருவதற்கான நிரந்தரமான குஷி இருக்கிறது. இன்று மற்றும் நாளை என்பதற்கான விஷயம் என்று உணர்வு ஏற்படுகிறது. இன்று பழைய யுகம் இருக்கிறது, நாளை புது யுகம் எதிரில் நின்று கொண்டிருக்கிறது. நாடகப்படி இன்று மற்றும் நாளைக்கான விஷயம், அந்த மாதிரி தெளிவான நினைவு அனுபவம் ஆகிறதா? அல்லது புதிய வருடத்தைக் கொண்டாட மட்டும் வந்திருக்கிறீர்களா? புதிய வருடம் புதிய யுகத்தின் நினைவூட்டுகிறது. நாளை நான் என்னவாக இருப்பேன் என்ற இந்த ஊக்கம், உற்சாகம் இதயத்தில் இருக்கிறதா? தன்னுடைய புதிய உடல் என்ற ஆடை கண் எதிரில் வருகிறதா? உங்களுடைய புதிய உடல் புதிய யுகத்தில் எவ்வளவு அழகாக இருந்தது என்ற நினைவு இருக்கிறதா? எப்படிப்பட்ட யுகமாக இருந்தது. எப்படிப்பட்ட இராஜ்யமாக இருந்தது, எப்படி இயற்கை தாசியாக இருந்தது, சதோபிரதானமாக இருந்தது. அந்த இராஜ்ய அதிகாரி நிலையின் நினைவு தெளிவாக இருக்கிறதா? அந்த புதிய உலகம் எவ்வளவு அழகானது என்று தென்படுகிறதா? ஒரு

நொடியில் தன்னுடைய இராஜ்ய அதிகாரத்தின் அனுபவத்தை செய்ய முடியுமா? அல்லது செய்து கொண்டிருக்கிறீர்களா? ஒரு நொடியில் புது யுகத்தில் சென்று விடுங்கள் அவ்வளவு தான். செல்லத் தெரியுமா? எத்தனை தடவைகள் இந்த இராஜ்ய அதிகாரத்தை பிராப்தி செய்திருக்கிறீர்கள் என்ற நினைவு இருக்கிறதா? தன்னுடைய இராஜ்யம் எவ்வளவு பிரியமானது என்று அனுபவம் செய்யுங்கள். வித்தியாசமானதாகவும் இருக்கிறது என்றால் பிரியமானதாகவும் இருக்கிறது. எனவே ஒரு நொடியில் தன்னுடைய இராஜ்யம் மற்றும் தன்னுடைய உலக இராஜ்ய அதிகாரியின் சொரூபம் நினைவில் வந்து விட வேண்டும். வெளியுலக மனிதர்கள், புது வருடத்தில் ஒருவர் இன்னொருவருக்கு அற்ப காலத்தின் பரிசு கொடுக்கிறார்கள் மேலும் தந்தை புது யுகத்தின், உலக இராஜ்ய அதிகாரத்தின் பரிசைக் கொடுக்கிறார், இந்த அழியாத பரிசு இந்த நேரம் தந்தை மூலமாக உங்கள் அனைவருக்காகவும் மாற்ற முடியாததாக ஆகி விடுகிறது. இதை யாரும் தடுத்து நிறுத்தவே முடியாது. உறுதியானது, துண்டுபடாதது. அப்படி அந்த மாதிரியான பரிசு கிடைத்து விட்டது தான் இல்லையா? எனவே இந்த பரிசை பாதுகாப்பாக வைக்க வேண்டும், யாராவது கொள்ளைக்காரன் இந்தப் பரிசை எடுத்துச் சென்று விடக் கூடாது. அனைவரிடமும் இரட்டைப் பூட்டு இருக்கிறது தான் இல்லையா? இன்றைய நாட்களில் ஒரு பூட்டால் மட்டும் காரியம் ஆகாது. இரட்டைப் பூட்டு தேவையாக இருக்கிறது. காட்ரேஜின் பூட்டு அல்ல, காட்'ன் (இறைவனின்) பூட்டு தேவையாக இருக்கிறது. அப்படி யாருமே உடைக்க முடியாத மாதிரி காட் (இறைவன்) அந்த மாதிரியான பூட்டை கொடுத்திருக்கிறார். ஒருவேளை கவனக்குறைவானவராகி விட்டீர்கள் என்றால் கொள்ளைக்காரன் வருவான். கொள்ளைக்காரனும் சாதுர்யமானவனாக இருப்பான். இவருடைய பூட்டு இன்று தொய்வாக இருக்கிறது என்று அவனுக்குத் தெரிய வந்து விடும். எனவே கவனக்குறைவாக இருக்கக்கூடாது.

அப்படி இந்த புதிய வருடத்தில் தனக்காகவும் மற்றும் சேவைக்காகவும் ஏதாவது புதிய திட்டத்தை உருவாக்கியிருக்கிறீர்களா? மகாநாடு கூட்ட வேண்டும், கலந்துரையாடல் செய்ய வேண்டும் அவையோ இருக்கவே இருக்கின்றன ஆனால் ஏதாவது புதிய திட்டத்தை உருவாக்கியிருக்கிறீர்களா? பாப்தாதா இந்த புதிய வருடத்தில் பாரதம்

மற்றும் வெளிநாட்டில் விதவிதமான துறையின் விசேஷ ஆத்மாக்களின் ஒரு பூச்செண்டையும் பார்க்க விரும்புகிறார். துறைகளின் சேவையோ அதிகமாக செய்திருக்கிறீர்கள் இல்லையா? இப்பொழுது ஒவ்வொரு துறையைச் சேர்ந்த ஓரிரு இரத்தினத்தை அந்த மாதிரி தயார் செய்யுங்கள். ஒரு துறை கூட விடுபட்டு விடக்கூடாது. ஏன்? இப்பொழுது நேரம் அருகில் வந்து கொண்டிருக்கிறது என்றால், எந்தவொரு துறையைச் சேர்ந்தவர்களும் எங்களுடைய துறை தங்கிப் போய் விட்டது என்று புகார் கூறக்கூடாது. ஒவ்வொரு துறையிலும் விசேஷமாக ஒவ்வொரு தரத்தைச் சேர்ந்தவர் இருக்கட்டும். அவர்கள் 'மைக்'ன் வேலையைச் செய்ய முடிய வேண்டும். ஏனென்றால் எப்படி நேரம் அருகில் வந்து கொண்டிருக்கிறது என்றால் அனைத்து துறையைச் சேர்ந்தவர்கள், அனைத்து மதங்களைச் சேர்ந்தவர்கள் அனைவரின் வாயிலிருந்தும் தந்தை வந்து விட்டார் என்ற இந்த ஓசை தான் எழ வேண்டும். ஏனென்றால் இந்த சங்கம யுகத்தில் தான் அனைத்து மதத்தை ஸ்தாபனை செய்யும் ஆத்மாக்கள் மற்றும் அனைத்து துறையின் ஆத்மாக்களில் விதை போடப்படுகிறது. அவர்கள் அவ்வளவு சக்தியை தன்னுடன் எடுத்துச் செல்வார்கள். பிறகு அவரவர்களின் நேரத்தில் அந்த துறையின் மற்றும் மதத்தின் கண்டுபிடிப்பாளர் ஆவார்கள். அப்படி அனைத்து விதையையும் நீங்கள் தயார் செய்ய வேண்டும். அது அந்தந்த நேரத்தில் அந்தந்த இலாகாவிற்கு பொறுப்பாளர் ஆவார்கள் ஏனென்றால் விதை தந்தை ஆவார் மற்றும் பிராமண ஆத்மாக்கள் நீங்கள் தண்டு ஆவீர்கள். அனைத்து ஆத்மாக்களும் விதை மற்றும் தண்டு மூலமாகத் தான் உருவாகிறார்கள். எனவே அந்த மாதிரி பூச்செண்டை தந்தையின் எதிரில் பாரதத்தைச் சேர்ந்தவர்களும், வெளிநாட்டினரும் கொண்டு வாருங்கள், ஓரிரு முன்மாதிரியைக் கொண்டு வாருங்கள், மாதிரி மூலம் மற்ற அனேகர்கள் இயல்பாகவே ஆகி விடுவார்கள் ஆனால் ஒவ்வொருவரும் சக்திசாலியான மைக் ஆக வேண்டும். அந்த மாதிரி விதை என்றாலும் மதம் அல்லது துறை என்றாலும் அல்லது விதவிதமான மலர்களின் பூச்செண்டு என்றாலும் இவை தயார் ஆக வேண்டும். ஒருவர் கூட விடுபட்டு விடக்கூடாது. அப்பொழுது தான் உலகிற்கு நன்மை செய்பவர் மற்றும் அனைத்து ஆத்மாக்களுக்கும் நன்மை செய்வதற்கான பொறுப்பான ஆத்மாக்கள் என்று கூறப்படுவீர்கள். ஒரு கிளை கூட குறையக்கூடாது. அனைத்து

கிளைகளும் தேவை. உங்களுடைய புதிய யுகத்தில் எந்த துறையும் இருக்காது ஆனால் அந்த ஆத்மாக்களிலும் துவாபர யுகத்தில் அல்லது கலி யுகத்தில் யார் கண்டுபிடிப்பிற்கு பொறுப்பாளர்களாக ஆகிறார்களோ அவர்களுக்கு உங்கள் மூலமாகத் தான் சக்தி கிடைக்க வேண்டும். எப்படி அனைத்து மதத் தந்தைகளும் உங்கள் எதிரில் தந்தையின் கொடியை பிரத்யக்ஷத்தின் கொடியைப் பறக்க விடுவதில் சகயோகி ஆவார்கள். அதே போலவே அனைத்து துறையைச் சேர்ந்தவர்களும் பிரத்யக்ஷத்தின் கொடியைப் பறக்க விடுவதின் சகயோகி ஆவார்கள். அப்பொழுது தான் அனைவரின் உதவியோடு சுகம் நிறைந்த உலகின் ஸ்தாபனை என்று கூறுவோம். சகயோகியாக ஆகிக் கொண்டிருக்கிறார்கள் ஆனால் அவர்களிலிருந்து இப்பொழுது முக்கியமான ஆத்மாக்களை உங்களுடைய சகயோகத்தினால் முன்னேற்றம் செய்யுங்கள், பொறுப்பாளர் ஆக்குங்கள். பொறுப்பாளர் ஆவதற்கான விதையைப் போடுங்கள். புரிந்ததா என்ன செய்ய வேண்டும் என்று? வெளிநாட்டிலும் முக்கியமானவர்கள் அல்லது மிக முக்கியமானவர்களின் தொடர்போ சுலபமாகி விட்டது இல்லையா? கடினம் இல்லை தான் இல்லையா? சுலபமா அல்லது கடினமா? அப்படி நீங்கள் அனைவரும் எப்பொழுது இன்னொரு புது வருடத்தில் மீண்டும் வருவீர்களோ அடுத்த புது வருடத்தின் பரிசாக அந்த மாதிரியான பூச்செண்டை பாப்தாதா பார்க்க விரும்புகிறார். ஒரு வருடம் இருக்கிறது, குறைந்த காலம் அல்ல. பாரதத்தைச் சேர்ந்தவர்களும் செய்வார்களா மற்றும் வெளிநாட்டினரும் செய்வார்களா? (செய்வோம்). அவசியம் செய்வோம். ஏற்கனவே நிச்சயிக்கப்பட்டது என்று கூறுங்கள். கருவியாக மட்டும் ஆக வேண்டும். வெளிநாட்டினர் பதில் கூறுங்கள்? அனைத்து வெளிநாட்டினரும் கை தட்டுங்கள். நல்லது. முதலில் பாரதமா அல்லது வெளிநாடா, யார் தயாராகிறார்கள் என்று பார்க்கலாம். மேலும் எவ்வளவு பெரிய பூச்செண்டை தயார் செய்கிறீர்கள் என்றும் பார்க்கலாம்? சரியா? நாலா புறங்களிலும் இதைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். பாரதத்தைச் சேர்ந்தவர்களும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள், வெளிநாட்டினரும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது ஊக்கம் வருகிறது, அவர்களுடைய மனதில் இதைச் செய்வோம், அதைச் செய்வோம் என்ற திட்டம் உருவாகிக் கொண்டிருக்கிறது. நல்லது. இதுவே உலக சேவை ஆனது.

சுயத்திற்காக என்ன செய்வீர்கள்? அதற்காகவும் திட்டம் உருவாகும் இல்லையா? ஒருவேளை சுயமுன்னேற்றத்திற்காக உயர்ந்த திட்டத்தை உருவாக்கவில்லை என்றால் உலக சேவையில் சக்தி கிடைக்க முடியாது. எனவே பாப்தாதா அனைவர்களின் உள்ளத்தின் ஊக்கம், உற்சாகத்தைத் தெரிந்து கொண்டே இதைத் தான் கூறுவோம். ஒவ்வொரு உற்சவத்தில் குழந்தைகள் அவர்கள் பொன்விழாவைச் சேர்ந்தவர்களானாலும், வைர விழாவைச் சேர்ந்தவர்களானாலும், வெள்ளி விழாவைச் சேர்ந்தவர்களானாலும் அல்லது என்னென்ன விழாக்கள் நடக்கப் போகிறது, அனைவரும் உள்ளப்பூர்வமாக, ஊக்கம் உற்சாகத்தோடு தன்னுடைய மனதில் நாங்கள் தந்தைக்குச் சமமாக ஆகியே காண்பிப்போம் என்ற இந்த உறுதிமொழியை தந்தையிடம் கொடுத்திருக்கிறார்கள். அனைவரும் இந்த உறுதிமொழியை செய்தீர்கள் தான் இல்லையா? இரட்டை வெளிநாட்டினர் உறுதிமொழி கொடுத்தீர்களா? (அனைவரும் கை அசைத்தார்கள்) நல்லது. வாழ்த்துக்கள். உறுதிமொழியையோ மிக இனிமையாக, மிக நல்லதாக, மிக அன்பானதாக, மிக சக்திசாலியாக செய்திருக்கிறீர்கள். இப்பொழுது அதைக் கடைபிடித்து நடக்க வேண்டும். உறுதிமொழி கொடுப்பவர்கள். அந்த நேரம் மிக ஊக்கம், உற்சாகத்தோடு செய்கிறார்கள், நல்ல தைரியத்தையும் வைக்கிறார்கள் ஆனால் பின்பு என்னவாகிறது? சில நேரம் மாயா சுண்டெலியின் ரூபத்தில் வந்து விடுகிறது. சில நேரம் பூனை ரூபத்தில் வந்து விடுகிறது. பூனை என்ன செய்கிறது? மியாவ், மியாவ் என்று செய்கிறது தான் இல்லையா அப்படி குழந்தைகள் என்ன செய்கிறார்கள். மே மே மே நான் நான் நான்! அப்படி இந்த பூனையின் மியாவ் மியாவ் என்பதை செய்யாதீர்கள். சுண்டெலி என்ன செய்கிறது? யார் ஒன்றும் தெரியாதவர்களாகி வருகிறார்களோ அவர்களை சாப்பிட்டு விடுகிறது, கடித்து விடுகிறது. அப்படி மாயாவும் குழந்தைகளின் பொக்கிஷங்களைக் கடித்துச் சாப்பிட்டு விடுகிறது. சில நேரம் சிங்கம் வந்து விடுகிறது. சிங்கம் என்ன செய்கிறது? பயமற்றவர்களிடம் பயத்தை உருவாக்கி விடுகிறது. சர்வ சக்திவான் குழந்தைகளை மனமுடையச் செய்து விடுகிறது. அந்த மாதிரி செய்யாதீர்கள், வரவிடாதீர்கள். இரட்டைப் பூட்டை போட்டே வையுங்கள். இந்த வருடம் யாரையும் வர விடாதீர்கள்.

இந்த வருடத்தை அனைத்து விஷயங்களிலிருந்து விடுபட்ட வருடமாகக் கொண்டாடுங்கள். முக்தி வருடம். எப்பொழுது இந்த முக்தி வருடத்தை கொண்டாடுவீரகளோ அப்பொழுது தான் முக்தி தாமம் செல்வீர்கள். இதற்காக என்ன செய்வீர்கள்? மிகப் பெரிய விஷயமல்ல, இது சின்ன விஷயம். பாப்தாதா சின்ன சுலோகன் மட்டும் கொடுக்கிறார் "பயனுள்ளதாக ஆக்குங்கள் வெற்றியைப் பெறுங்கள்". புரிந்ததா? பயனுள்ளதாக ஆக்குங்கள் வெற்றியைப் பெறுங்கள். எதைப் பயனுள்ளதாக ஆக்க வேண்டும்? உங்களிடம் என்னென்ன இருக்கிறதோ, உங்களுடைய செல்வமாக இருப்பவற்றை -நேரம், எண்ணம், சுவாசம் மற்றும் உடல், மனம், பொருளை -பயனுள்ளதாக ஆக்குங்கள்! வீணாக இழக்காதீர்கள் மேலும் கடைசி நேரத்திற்காக பாதுகாப்பு செய்து வைக்காதீர்கள். எண்ணத்தையும் பயனுள்ளதாக ஆக்குங்கள். ஒவ்வொரு எண்ணமும் உங்களுடைய செல்வம் ஆகும். பணம் ஸ்தூல செல்வமாகும். அதே போன்று சூட்சும செல்வம் நேரம், எண்ணம், சுவாசம். ஒரு எண்ணம் கூட வீணாகச் செல்ல வேண்டாம். பயனுள்ளதாக இருக்கட்டும். மனசேவை, வாய்மொழி சேவை, கர்ம சேவை மூலமாக எவ்வளவு பயனுள்ளதாக ஆக்கியிருக்கிறேன், எவ்வளவு சேமித்திருக்கிறேன் என்று சோதனை செய்யுங்கள். மேலும் இந்த வருடம் பாப்தாதா இந்த விசேஷ வரதானத்தை கொடுக்கிறார் பயனுள்ளதாக ஆக்குங்கள். மேலும் பல கோடி மடங்கு வெற்றியை அனுபவம் செய்யுங்கள். இந்த பிரத்யக்ஷ பலனை சுலபமாகப் பிராப்தி செய்ய முடியும். உண்மையான உள்ளத்தோடு மட்டும் செய்ய வேண்டும். உண்மையான உள்ளத்தின் மேல் கள்ளம் கபடமற்ற தந்தை மிக சுலபமாக திருப்தியடைந்து விடுகிறார். எனவே பயனுள்ளதாக ஆக்குங்கள். ஞான செல்வம், சக்திகளின் செல்வம், குணங்களின் செல்வத்தை ஒவ்வொரு நேரமும் பயனுள்ளதாக ஆக்குங்கள். பயன்படுத்த தெரியுமா? அல்லது உபயோகப்படுத்தாமல் மற்றும் பாதுகாப்பாக வைப்பது மிக நன்றாகத் தெரியுமா? பயன்படுத்தாமல் இருக்காதீர்கள். ஈடுபடுத்துங்கள். அனைத்தும் திடீரென்று நடக்கும், எவரெடியாக ஆக வேண்டும் என்று கூறுகிறீர்கள் என்றால், என்னென்ன இருக்கிறதோ அதை பயனுள்ள வழியில் ஈடுபடுத்துங்கள். பாப்தாதாவிற்கு இவை தேவையில்லை. தனக்காக சேமிப்பு செய்யுங்கள். பாப்தாதாவோ வள்ளல், ஆனால் பயனுள்ளதாக ஆக்குவது என்றால் சேமிப்பு செய்வது. ஏனென்றால் பாப்தாதா நேரத்திற்கு ஏற்றபடி

சேமிப்பு கணக்கைப் பார்த்தார், ஒவ்வொரு குழந்தையின் சேமிப்பு கணக்கும் பாப்தாதாவிடம் இருக்கிறது. அப்படி சேமிப்பு கணக்கில் என்ன பார்த்தோம்? அனேக குழந்தைகள் நினைக்கிறார்கள் மேலும் அதிகமாகக் கூறவும் செய்கிறார்கள். என்னுடையது இதுவும் சேமிப்பாகிறது, இதுவும் சேமிப்பாகிறது. வெளிமுகமான சேமிப்பு கணக்கை அதிகமாக வர்ணனை செய்கிறார்கள் ஆனால் தந்தையிடமிருந்து சேமிப்பு கணக்கிலோ அவர்கள் எவ்வளவு கூறுகிறார்களோ மற்றும் நினைக்கிறார்களோ அதை விட மிகக் குறைவாகத் தான் இருக்கிறது. ஏன்? காரணம் 'நான் மற்றும் என்னுடையது' என்ற முதல் பாடம் தான். நான் செய்தேன், இந்த சேவை என்னுடையது, இந்தக் காரியம் என்னுடையது என்று அப்படி சேமிப்பு செய்யும் நேரத்தில் சேமிப்பு செய்து கொண்டிருக்கிறோம் என்று அவர்கள் நினைக்கிறார்கள் ஆனால் அது தானாகவே சேமிப்பு கணக்கிலிருந்து நீங்கி வீணான கணக்கில் சேமிப்பாகி விடுகிறது. இது தானியங்கி சூட்சும இயந்திரம் ஆகும். பாபா செய்வித்தார், இது என்னுடைய சேவை இல்லை, பாபாவினுடைய சேவை. நான் செய்தேன் என்று அப்படி வேண்டாம். நான் இதைச் செய்தேன், நான் அதைச் செய்கிறேன் என்று வர்ணனை செய்யாதீர்கள். அப்படி நான், நான் என்பது வேண்டாம். பாபா, பாபா என்று கூறினீர்கள் என்றால் பல மடங்கு சேமிப்பாகி விடும். மேலும் நான், என்னுடையது என்று கூறினீர்கள் என்றால் மாறிப் போய் வீணான கணக்கில் சேமிப்பாகி விடும். இந்த தானியங்கி இயந்திரம் மிக வேகமானது. உங்களுக்கு இது தெரிய வருவதில்லை. இதனுடைய சோதனையைக் கூட மிக உண்மையான உள்ளத்தோடு என்னுடையது என்பதிலிருந்து விலகியிருந்து செய்பவர்கள் தான் செய்ய முடியும். எப்பொழுது ஆதி இரத்தினங்கள் நீங்கள் தொடக்கத்தில் ஸ்தாபனையில் உருவானீர்கள், சேவையில் உருவானீர்கள் என்றால், அந்த நேரம் உங்களுடைய உணர்வு எப்படிப்பட்டதாக இருந்தது? எந்த மாதிரியான வார்த்தைகள் உங்களிடமிருந்து வெளியானது? நான், எனது என்பது இருந்ததா? பாபா, பாபா என்று கூறினீர்கள் அதனால் தான் பாபாவின் வாரிசாக ஆனீர்கள். யார் இன்று சேவையின் ஆரம்ப கர்த்தாவாக இருந்தவர்களாக ஆகியிருக்கிறார்கள் என்றால் அது அவர்கள் பாபா, பாபா என்று கூறியதின் நிரூபணமாகும். இப்பொழுது பாப்தாதாவிடம் வாரிசு தரமுள்ள குழந்தைகள் மிகக் குறைவாக வருகிறார்கள், காரணம்? பாபா

மற்றும் நான், எனது என்பது கலந்திருக்கிறது. எனவே இந்த வருடத்தில் திறந்த மனதோடு பாப்தாதா வரம் கொடுக்கிறார் -எவ்வளவு சேமிப்பு செய்ய விரும்புகிறீர்களோ அந்த அளவு செய்து கொள்ளுங்கள், செய்து கொள்ளுங்கள், செய்து கொள்ளுங்கள், பயனுள்ளதாக ஆக்குங்கள், வெற்றி மூர்த்தி ஆகுங்கள்! நல்லது.

இப்பொழுது எந்த உற்சவத்தைக் கொண்டாடினீர்கள்? வெள்ளி விழா. வெள்ளி விழாவைச் சேர்ந்தவர்கள் கையை உயர்த்துங்கள். யார் யாருக்கு விழா கொண்டாடப்பட்டதோ அவர்கள் கையை உயர்த்துங்கள். இரட்டை விழாவைக் கொண்டாடினீர்கள். பாரதத்தைச் சேர்ந்தவர்களுக்கும், வெளிநாட்டைச் சேர்ந்தவர்களுக்கும் இருந்தது. நல்லது. இந்த விழாவைக் கொண்டாடுவது என்றால் தனக்குத்தானே உறுதிமொழியின் உறுதியான முத்திரையை இட்டுக் கொள்வதாகும். விழா கொண்டாடினீர்கள், பாப்தாதாவிற்கும் அந்தக் காட்சி மிகவும் பிடித்திருந்தது. கூடவே என்னென்ன எண்ணத்தை வைத்திருந்தீர்களோ அதன் மேல் சர்வ சக்திவானின் அரசாங்கத்தின் அந்த மாதிரி முத்திரையை இடுங்கள். அது எப்பொழுதும் அழியாததாகவும். உறுதியானதாகவும் இருக்கட்டும். கொண்டாடுவது என்றால் உறுதிமொழியை நிறைவேற்றுவது. அப்படி அந்த மாதிரி உறுதியான முத்திரையை இட்டீர்களா? அல்லது உறுதியற்ற முத்திரையை இட்டீர்களா? உறுதியாக இட்டீர்களா? இந்த வெள்ளி விழாவைச் சேர்ந்த குமாரர்கள் நன்றாக கை அசைக்கிறார்கள். உறுதியாக கொண்டாடினீர்களா? நல்லது. இந்தக் காட்சியை மறந்து விடாதீர்கள். எப்பொழுதாவது ஏதாவது பலஹீனம் வந்தால் தன்னுடைய விழாவின் புகைப்படத்தை எதிரில் கொண்டு வாருங்கள். ஒவ்வொருவரையும் புகைப்படம் பிடிக்கிறீர்கள் தான் இல்லையா. அனைவருக்கும் கிடைக்கிறதா? எனவே புகைப்படம் காரணமின்றி தானாக எடுக்கப்படுவதில்லை. எப்பொழுது அந்த மாதிரி ஏதாவது ஒரு நேரம் வந்தது என்றால் புகைப்படத்தை எதிரில் வையுங்கள். இதற்காகத் தான் புகைப்படம் பிடிக்கப்படுகிறது. அலமாரியில் வைத்து மூடி விட்டீர்கள், அந்த நேரத்தில் நினைவே வரவில்லை என்று அப்படி இருக்க வேண்டாம். இது அனைத்தையும் விட பெரிய பரிசாகும். இது நினைவூட்டுவதற்கான அடையாளம் ஆகும். நல்லது.

சிந்தி குழுவினர், குமார்கள், இரட்டை வெளிநாட்டினர், இளைஞர் குழு, மற்றும் லண்டன் சகோதரர் ஆகியோரை சந்தித்தார். … …

அனைத்து புது யுகத்தின் உலக அதிகாரி, புது வாழ்க்கை மூலமாக உலக மாற்றம் செய்யும் ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் பயனுள்ளதாக ஆக்குவதினால் வெற்றி மூர்த்தி ஆகக்கூடிய ஆத்மாக்களுக்கு. எப்பொழுதும் தான் செய்த உறுதிமொழிகளுக்கு நடைமுறை சொரூபம் கொடுக்கக்கூடிய ஆடாத, அசையாத சொரூப ஆத்மாக்களுக்கு எப்பொழுதும் உற்சவத்திலிருந்து மற்றவர்களுக்கும் உற்சவம் மூலமாக உற்சாகத்தை கொடுக்கக்கூடிய ஆத்மாக்களுக்கு, புது வருடம் மற்றும் புது யுக ஸ்தாபனைக்காக பாப்தாதாவின் வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள்! கூடவே தைரியம் வைத்து முன்னேறிச் செல்லும் மற்றும் தைரியம் வைத்து தந்தையின் உதவியைப் பெறும் அனைத்து குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

இரவு 12-மணிக்குப் பின் பாப்தாதா எல்லா குழந்தைகளுக்கும் மீண்டும் புத்தாண்டிற்கான வாழ்த்துக்களை அளித்தார்! உலகெங்கிலும், உலகின் ஒவ்வொரு மூலையிலும் சிறப்பான புதிய வாழ்க்கை வாழும் அனைவருக்கும் புத்தாண்டுடன் கூடவே புது யுகத்திற்கான வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள்! பிராமணக் குழந்தைகளுக்கு ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நொடியும் புதியது. எனவே இப்போது பழைய ஆண்டு விடைபெறட்டும் மற்றும் புத்தாண்டிற்கான வாழ்த்துக்கள்! இப்படி ஒவ்வொரு நொடியும், நீங்கள் எந்த சங்கல்பம், கர்மம் செய்தாலும், ஒவ்வொரு கர்மத்திலும், சங்கல்பத்திலும் வாழ்த்துக்களுடன் இருப்பவர்கள் நீங்கள். யாருடன் தொடர்பில் இருந்தாலும் எப்போதும் வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள்! என்ற இந்தப் பாடலையே பாடுங்கள். இந்த புத்தாண்டில், அனைவருக்கும் என்ன கிடைத்தாலும் அல்லது ஒன்றாக வாழ்ந்தாலும், அவர்களுக்கு சதா குஷியின், தில்குஷ் மிட்டாய் ஊட்டிக் கொண்டே இருங்கள் மற்றும் சதா மகிழ்ச்சியில் மனதின் மூலம் நடனமாடிக் கொண்டே இருங்கள் மற்றும் சேவையில் அனைவருக்கும் குஷியின் பொக்கிஷத்தை முழுமையாகப் பகிர்ந்து கொள்ளுங்கள். அப்படிப்பட்ட ஒரு புதிய வாழ்க்கை, புதிய ஊக்கம் உற்சாகத்துடன் இருக்கும் நாலா

புறமும் உள்ள குழந்தைகளுக்கு, புத்தாண்டுடன் கூடவே வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள்! 'குட் நைட்' மற்றும் 'குட் மார்னிங்'! நல்லது. ஓம் சாந்தி.

வரதானம்: எப்பொழுதும் லேசானவர் ஆகி தந்தையின் கண்களில் நிரம்பியிருக்கக்கூடிய சகஜயோகி ஆகுக!

சங்கமயுகத்தில் கிடைக்கும் குஷியின் சுரங்கம் வேறு எந்த யுகத்திலும் கிடைக்க முடியாது. இந்த நேரம் தந்தை மற்றும் குழந்தைகளின் சந்திப்பு இருக்கிறது, ஆஸ்தி இருக்கிறது மற்றும் வரதானம் இருக்கிறது. ஆஸ்தி மற்றும் வரதானம் இரண்டிலும் கடின உழைப்பு இருப்பதில்லை. எனவே தான் உங்களுடைய பட்டமே சகஜயோகி ஆகும். பாப்தாதா குழந்தைகள் கடின உழைப்பு செய்வதை பார்க்க முடியாது. குழந்தைகளே தன்னுடைய அனைத்து சுமையை தந்தையிடம் கொடுத்து விட்டு லேசானவர் ஆகி விடுங்கள் என்று கூறுகிறார். தந்தை உங்களை தன்னுடைய கண்களில் அமர்த்தி அழைத்துச் செல்லும் அளவிற்கு அந்த மாதிரி லேசானவர் ஆகி விடுங்கள். தந்தை மேல் உள்ள அன்பின் அடையாளம் எப்பொழுதும் லேசானவர் ஆகி தந்தையின் பார்வையில் நிரம்பி விடுவதாகும்.

சுலோகன்: எதிர்மறையை நினைக்கும் பாதையை மூடிவிட்டீர்கள் என்றால் வெற்றி சொரூபம் ஆகி விடுவீர்கள்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

## பொருளடக்கம்

☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂